
பொழிவு - 18
குவிப்பு - 05
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
மே - 2015
Registered as a News Paper
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

# தமிழ் மக்களுக்கான தீர்வை வென்றெடுக்க மன்னார் ஆயர் தலைமையில் ஒன்றிணைவோம்!

## ஆயரின் பிறந்தநாள் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் அழைப்பு



தமிழ் மக்களுக்கான தீர்வை வெற்றிகொள்வதற்கு மன்னார் ஆயர் தலைமையில் ஆராய்ந்து பயணிப்பதில் எந்தவித தவறும் இருக்கமுடியாதென வடமாகாண முதலமைச்சர் திரு. சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் 75ஆவது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மன்னார் ஆயரின் பிறந்தநாள் நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி அன்று வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு மன்னார் ஆயர் இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய வடக்கு முதல்வர் சி. வி. விக்னேஸ்வரன் கூறியதாவது,

இன்றைய தினம் எமக்கெல்லாம் ஒரு மைல்கல் தினமாகும். எம் மக்களின் நன்மையிலும், தீமையிலும், வாழ்க்கையிலும், மரணத்தறுவாயிலும் பக்கத்தில் நின்று பல சேவைகள் புரிந்துவந்துள்ள ஆயருக்கு 75 அகவை பூர்த்தியாகின்றது. இதுவரை காலமும் அவர் இறுக்கமான ஒரு காலத்தின்போது எம் மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்துவந்துள்ளார் என்றால் அவர் இனிவருங்காலத்தில் இறுக்கம் தளர்ந்த நிலையில் ஆனால் குழப்பம் மிகுந்த சூழலில் இனியடுத்த கட்டமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒரு பொதுவான அரசியல் முடிவுக்கு வர உதவவேண்டிய நிலையில் உள்ளார். (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## மன்னார் ஆயரின் 75 ஆவது பிறந்த நாளின்போது ஜோசவ்வாஸ் நகர் நற்கருணை நாதர் ஆலயம் திறப்பு







தோட்டவெளி பங்குக்குட்பட்ட, புதிய குடியேற்றக் கிராமமான ஜோசவ்வாஸ் நகரில் நற்கருணை நாதர் ஆலயம் புதிதாகக் கட்டித் திறக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி மன்னார் ஆயரின் பிறந்தநாள் அன்று ஏனைய ஐந்து ஆயர்களும் இணைந்து இந்தப் புதிய ஆலயத்தைத் திறந்துவைத்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.
(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## புதிதாகக் கட்டப்பட்ட அச்சங்குளம் தூய சூசையப்பர் ஆலயம் திறப்பு





நானாட்டான் பங்கு எல்லைக்குட்பட்ட துணை ஆலயங்களில் ஒன்றான அச்சங்குளம் கிராமத்தில் புதிததாக அமைக்கப்பட்ட தூய சூசையப்பர் ஆலயம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையால் கடந்த ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி காலை 7.15 மணியளவில் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டது. ஆயருடன் இணைந்து குருமுதல்வர் அருட்தந்தை ஏ. விக்டர் சோசை, நானாட்டான் பங்குத்தந்தை அருள்ராஜ் குரூஸ் ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். அதன் பின்னர் ஆயரின் 75வது பிறந்த தினத்தையொட்டிய சிறப்பு நிகழ்ச்சிகள் அங்கு இடம்பெற்றன.

## மன்னார் ஆயரின் 75ஆவது பிறந்தநாள் ஆயர் இல்லத்தில் சிறப்பு நிகழ்வுகள்!






மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் 75வது பிறந்தநாள் நிகழ்வுகள் கடந்த ஏப்ரல் 16ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வடமாகாண முதலமைச்சர், ஏனைய மறைமாவட்ட ஆயர்கள், அரசாங்க அமைச்சர்கள், குருக்கள், துறவியர் என பலர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## கிளறேசியன் சபையின் ஜேர்மன் மாகாண புதிய தலைவராக இலங்கையர்!



கிளறேசியன் சபையின் ஜேர்மன் மாகாணத்திற்கான புதிய தலைவராக (Provincial) இலங்கையைச் சேர்ந்த அருட்தந்தை கலிஸ்ரஸ் ஜோசப் (CMF) தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஐரோப்பியர் அல்லாத ஒருவர் ஜேர்மன் மாகாணத்திற்குத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதன்முறையாகும்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## நலம் பெற செபிப்போம்...

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பெற்று சிகிச்சை பெற்றுவருகின்றார். ஆயர் அவர்கள் தற்போது படிப்படியாக உடல் நலம் தேறிவருகின்றார். ஆயருடைய பூரண சுகத்திற்காக செபிக்கும்படி இறைமக்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## இறை அழைப்பை இனம் காண்போம்!

பணியில்லா வாழ்வு கனியில்லா மரம் போன்றது. ஆதியிலிருந்து இந்தத் தேதிவரை ஆண்டவரும் அவருடைய அடியார்களும் பணிசெய்வதையே பலமாகவும் பாலமாகவும் வரமாகவும் வழியாகவும் கருதி வந்துள்ளனர். இதை இயேசு நன்கு உணர்ந்திருந்தார். தாம் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் ஓய்வின்றி உழைத்தார். அதையே தம் சீடர்களுக்கும் கற்றுக் கொடுத்தார். "பணிவிடை பெறவல்ல பணிவிடை புரியவே வந்தேன்" என்று வெளிப்படையாகவே இயேசு சொன்னார்.

**உலகைத் துறப்பது ஏன்?**

"ராபி நாம் இங்கேய இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்" (மாற் 9:5) இறைவனோடு கொண்டுள்ள உறவிலே பிறக்கின்ற அமைதியும் ஆறுதலும் அவற்றை என்றுமே உரிமையாக்கிக்கொள்ளும் ஆவலைத் தட்டியெழுப்புகின்றன. இத்தகைய ஆவலால் இன்பமுற்று திருத்தூதர் பேதுரு பாடிய ஆனந்த கானம்தான் இது! எங்கு இயேசு தங்குகிறாரோ அங்கு அவரோடு தங்குவதே சீடர்கள் மூவரதும் சித்தமாக இருந்தது. "கூடாரம் மூன்றினை அமைத்துவிடு, உனது ஏக்கம் நிறைவு பெறட்டும்" என இயேசு கூறவில்லை. மாறாக இயேசு அவர்களை மலையிலிருந்து கீழே அழைத்து வருகிறார். மக்களைச் சந்திக்கச் செய்கிறார். இறைவனோடு கொள்கின்ற உறவு மக்களை மறக்கச்செய்யவோ, தன்னலத்தை வளர்க்கவோ கூடாது. உலகத்தைவிட்டு ஓடுகின்ற ஓட்டம் சிலவேளைகளில் இறைவனைவிட்டே ஓடுகின்ற ஓட்டமாகவும் இருக்கலாம். ஏனெனில் இறைவன் உலகில் இருக்கிறார்.

ஒரு சீடன் குருவைப்பார்த்து கேட்டான் "போதிப்பதற்கும் போதனையின்படி வாழ்வதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?" குரு சொன்னார், "போதிப்பவர் ஒளியைக்கொண்டு வழிகாட்டுபவர், போதனையின்படி வாழ்பவர் ஒளியாக இருப்பவர்"

**குடும்பமே ஆரம்பக் குருமடம்**

குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை. ஆன்மீக ஆழம் நிறைந்த விசுவாச வாழ்வை வாழுகின்ற குடும்பங்களிலிருந்துதான் இறை அழைத்தல்கள் உருவாக முடியும். குடும்பங்களே சிறந்த அழைத்தல்களுக்கான விளைநிலமாக இருக்க முடியும். இன்று தொழில்நுட்பம் விரைந்து வளர்ந்து வருகிறது. நாகரீக நடைமுறைகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே போகிறது. பொழுதுபோக்குச் சாதனங்கள் அபாசத்தையும் அசிங்கத்தையும் கக்கிக்கொண்டே இருக்கின்றன. போதைப்பொருள் பாவனை இளையோரை கவர்ந்திழுக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் இறையழைத்தலைப்பற்றி சிந்திப்பது சிலவேளை வேடிக்கையாக, வினோதமாகக்கூட இருக்கலாம்.

**ஐரோப்பாவில் அருகிவரும் அழைத்தல்கள்**

ஐரோப்பிய நாடுகளில் இன்று குடும்ப வாழ்வு குலைந்து வருகிறது. இதனால் குடும்பங்களிலிருந்து வரவேண்டிய அழைத்தல்களும் அருகிவருகின்றன. பல ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் அழைத்தல்கள் ஆச்சரியப்படதக்க வகையில் குறைந்து விட்டது. குருமடங்களும் சந்நியாச இல்லங்களும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. மேலை நாடுகளிலிருந்து நமது நாட்டிற்குவரும் குருக்கள் துறவிகள் நம் நாட்டு சிறிய மற்றும் பெரிய குருமடங்களில் மாணவர்கள் நிரம்பி வழிவதைக் கண்டு ஆச்சரியத்தால் கண்களை அகல விரிக்கின்றனர்.

**பங்குத்தந்தையரின் பங்களிப்பு**

பங்கு மட்டத்தில் இளைய உள்ளங்களில் உறைந்திருக்கும் இறை அழைத்தல்களை இனம் காணும் பாரிய பணி பங்குத்தந்தையருக்கே உண்டு. கிறிஸ்தவ விசுவாசம்மிக்க குடும்பப்பின்னனி, கல்வி, கட்டுப்பாடான தூய வாழ்வு போன்ற நல்ல விழுமியங்களைக்கொண்ட இளம் உள்ளங்களில் அழைத்தலின் விதையை விதைக்கும் - வளர்க்கும் கடமை பங்குத்தந்தைக்கே உரியது. அனைத்திற்கும் மேலாக தனது முன்மாதிரிகையான வாழ்வினால் இளம் உள்ளங்கள் இறை அழைத்தலின்பால் ஆர்வத்தையும் ஆசையையும் வளர்க்கும் வண்ணம் பங்குத்தந்தை செயலாற்ற வேண்டும்.

**அழைப்பை இனம்காண ஆதரவு தேவை**

சிறுவயது முதல் அடிமனதில் வேர்பாய்ந்திருக்கும் அழைத்தலின் விதையை இனம்கண்டு வளர்த்தெடுக்க உரிய ஊக்குவிப்புத் தேவை. தேவ அழைத்தல் ஒன்றுகூடல்கள், பயிற்சிப் பாசறைகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், படங்கள், நாடகங்கள், தெருக்கூத்துக்கள் வழியாக அழைப்பின் குரலை இளையோர் இனம்காணத் துணை புரியலாம். ஊடகங்களில் நிகழ்சிகளையும் ஆக்கங்களையும் வெளியிட்டு அழைப்பின்பால் ஆர்வத்தைத் தூண்டலாம். இளையோரின் உள்ளத்தில் கேட்கும் அழைப்பின் குரலை அவர்கள் இனம் காண ஆதரவு கொடுப்போமா?

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை*
*அன்புடன், அருள்பணியாளர் தமிழ் நேசன்*
*மன்னா- பதிப்பாசிரியர்*

## அதிபர் தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு பெற்றவர்கள்

கல்விப் பணியில் ஈடுபட்டிருப்போரை அதிபர் தரம் ஒன்றிற்குப் பதவி உயர்த்தும் வைபவம் கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களால் நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

மன்னார் கல்வி வலயத்திலிருந்து அதிபர் தரம் ஒன்றிற்குத் தரம் உயர்த்தப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

திருமதி. R. P. ஜேசுதாசன்
திருமதி. B. கிறிஸ்தோபர்
திருமதி. V. சித்திவினாயகம்
திருமதி. S. அந்தோனிப் பிள்ளை
செல்வி. S. கிறிஸ்தோபர்
திரு. L. M. தர்மதாஸ்
திரு. P. சந்தியோகு
திரு. T. கிறிஸ்ரிராஜா
திரு. S. A. பிரகலாதவன்
திரு. ஜனாப். பதுர்ஷமான்
திரு. S. பொஸ்கோ குரூஸ்
திரு. C. P. திபூர்சியஸ்
திரு. T. இருதயராஜா குருஸ்
திரு. S. அன்ரன் டபரேரா
திரு. A. N. யோகராஜா

*இவர்களுக்கு மன்னாவின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்!*

### மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையின்
## பவள விழா வாழ்த்துக்கள்

இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கைத் தீவின்
நெத்திப் பொட்டான யாழ் மண்ணின்
அழகுசேர்க்கும் ஆழ்கடல் நடுவே
நெடுந்தீவு மண்ணின் மைந்தனாக
ஆன்மீக, அறிவாற்றல், கடின உழைப்பினால் சிறந்தோங்கும்
இராயப்பு அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின்
குடும்பமே கோவிலாகக் கண்ட இப்பூவுலகில்
1940ம் ஆண்டதனில் அவதரித்த
ஆன்மீகத் தந்தை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின்
பவளவிழாக் காலம் கண்டு எம் தேசமே
இறை ஆசீர் வேண்டி மகிழ்ந்து கொண்டாடுகிறது.

1967ல் அருட்குருவாக திருநிலைபெற்று
உயிலங்குளம், சேந்தாங்குளம், உரும்பிராய், சுன்னாகம்
பெரியவிளான், பண்டத்தரிப்பு, சுண்டிக்குழி பங்குத்தந்தையாக
பணித்தளங்கள் பல கண்டு
1985ல் றோம் நகரில் உயர் கல்விக்காகச் சென்றுவந்து
1992ல் மருதமடுத் திருத்தலத்தில்
மன்னாரின் ஆயராக அபிசேகம் பண்ணப்பட்டு
ஈர்பத்து மூன்று ஆண்டுகள் மன்னார் ஆயராக
சர்வமத சகவாழ்வில் நல்லுறவை வளர்த்து
குரலற்ற மக்களின் குரலாக
துன்புறும் மக்களின் துணைக்கரமாக
சமூக விடுதலையின் வழிகாட்டியாக
ஆன்மீக அர்ப்பணத்தின் அடையாளமாக
உண்மைக்குச் சாட்சியம் பகரும் உத்தம மேய்ப்பனாக
உலக அரங்கில் வலுவற்ற மக்களின் குரலொலியாக
ஆன்மீக வழிநின்று அறப்பணியின் அர்த்தம் துலங்க
ஆற்றிவரும் பணியில் பவள விழா காணவைத்த
இறைவனுக்கு நன்றி சொல்லி
ஆன்மீக உடலுள நலம் பெற்று பல்லாண்டு வாழ
இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்.

கத்தோலிக்க கலை இலக்கியவட்டம், யாழ்ப்பாணம்.

### மறையாசிரியர்களுக்கான
## ஒரு மாத வதிவிடப் பயிற்சி

மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படவுள்ள மறையாசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி தொடர்பாக மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி. பி. றெஜினோல்ட் அடிகளார் பங்குத்தந்தையர்களுக்கு அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தின் முக்கிய விடயங்கள் இங்கே தரப்படுகின்றன:

"அன்பின் அருட்தந்தையர்களுக்கு, மறையாசிரியருக்கான ஒரு மாத உள்ளிருப்புப் பயிற்சி வருகின்ற ஆவணி மாதம் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். இதற்காக உங்கள் பங்கில் இருந்து குறைந்தது இருவரை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். துரதிஷ்டவசமாக பங்கில் பணியாற்றும் மறையாசிரியர்களில் பலர் முறையான பயிற்சி ஒன்றில் தேர்ச்சி பெறாதவர்களாகவே இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பயிற்சியை தங்கள் பங்கின் மறையாசிரியர்களை பயிற்றுவிக்கும் சந்தர்ப்பமாக

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2015

### வைகாசி

01 - தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித சூசையப்பர் விழா - புதுக்கமம், கற்கிடந்தகுளம், வேப்பங்குளம், அச்சங்குளம், சேமமடு, பூம்புகார், கன்னாட்டி, மானாங்கவெளி.
03 - தேசிய பொதுநிலையினர் தினம்
- திருச்சிலுவைத் திருவிழா - கள்ளியகட்டைக்காடு.
10 - தூய செபமாலை அன்னை திருவிழா - பிச்சகுளம்.
13 - அன்னை வேளாங்கண்ணி திருவிழா - தேத்தாவாடி, மருதங்குளம்.
- பற்றிமா மாதா - ஜீவபுரம், பற்றிமாநகர் (ஓமந்தை)
15 - தூய ஆரோக்கிய அன்னை திருவிழா - களிமோட்டை, இரணை இலுப்பைக்குளம்
16 - தூய சதாசகாய மாதா திருவிழா - கந்தபுரம்.
17 - பற்றிமா அன்னை - மணிபுரம்.
- புனித யூதாததேயு திருவிழா - ஒலிமடு
- கர்த்தர் ஆலயத்திருவிழா - கீரி
18 - தூய பூண்டி அன்னை திருவிழா - எமில்நகர்.
- கடந்த கால போரினால் எம் நாட்டில் இறந்த அனைவரையும் நினைவுகூரும் நாள்.
20 - தூய சவேரியார் திருவிழா - செட்டியார் கட்டையடம்பன், தேவன்பிட்டி, சின்னப்பண்டிவிரிச்சான்

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆயரே வியக்கிறோம்!



எங்கள் அன்பு ஆயர்
இரா. யோசேப்பு
ஆண்டகையே!
தங்கள் அகவை 75இல்
மனம் மகிழ்ந்து
மனம் நெகிழ்ந்து
மனம் நிறைந்து
மனதார, நெஞ்சார, உளமார
வாழ்க வாழ்க வாழ்கவென
வாழ்த்துகிறோம்!
தங்கள் ஆயத்துவ
பணிகண்டு வியக்கிறோம்!!

மற்றத் தலைவர்கள்போல்,
உண்மைகளை
உறைக்காமல் சொல்லி,
அநீதிகளை அடக்கி வாசித்து,
அநியாயங்களை
பட்டும் படாமல்பேசி,
'பொது மனிதன்' என்ற
போர்வைக்குள் படுத்துறங்கி,
நடுநிலமை, பக்கச்சார்பின்மை
என மதில்மேல் பூனையாக
நல்ல பெயரும் எடுக்காமல்
கெட்ட பெயரும் வாங்காமல்
ஆயத்துவக் காலத்தை
தாங்கள் தாராளமாகக்
கழித்திருக்கலாம்!

எப்படியும் இருந்துவிட்டுப்
போகலாம் என்றில்லாமல்,
நல்லாயனாய் - தலைவனாய்,
இப்படித்தான் இருக்கவேண்டும்
இவ்வாறுதான் வாழவேண்டும்
என இயேசுவின்
ஆயத்துவப் பணியில்
முகிழ்ந்தீர்கள் - திகழ்ந்தீர்கள்.
அதற்காய் நன்றி,
உங்களுக்கும்,
உருக்கொடுத்த
இறைவனுக்கும்!

எத்தனை பயமுறுத்தல்கள்
இருந்தபோதும்
உண்மையை உரத்து
உரைப்பதற்கான
உங்கள் துணிச்சல்கண்டு
வியக்கிறோம்!
எத்தனை அடக்குமுறைகள்
மத்தியிலும்
அநீதிகளைத் தயங்காது
தட்டிக்கேட்கும்
உங்கள் புனித குணம்கண்டு
வியக்கிறோம்!
எத்தனை இடர்கள்
எதிர்ப்பட்டபோதும்
'காணாமல்போனவர்கள்'
கதியைக் கேட்கும் உங்கள்
மனிதநேய மனம் கண்டு
வியக்கிறோம்!
எத்தனை சவால்களைச்
சந்தித்தபோதும்
சரியெனப்பட்டதை
நிலைநிறுத்த
சளைக்காத உங்கள்
திறன்கண்டு வியக்கிறோம்!

போற்றினாலென்ன?,
புழுதிவாரித்
தூற்றினாலென்ன?
சொல்லவேண்டியதை
சொல்லவேண்டியவர்களுக்குச்
சொல்லிவிடுகின்ற
இறைவாக்கினனுக்குரிய
உங்கள் ஓர்மம் கண்டு,
உயர்ந்த உள்ளம் கண்டு,
'தூய விறாப்பு'க் கண்டு
உண்மையில் வியக்கிறோம்!
வியந்தே நிற்கிறோம்!!

- அருள்பணி.
செ. அன்புராசா (அமதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்

# மன்னார் மறைசாட்சிகளின் 'புனிதர் நிலைக்கான' விழிப்புணர்வுக் கருத்தமர்வு

## அருட்பணியாளர் எஸ். வி. பி. மங்களராஜா அடிகளார் பேருரை நிகழ்த்தினார்

மன்னார் மறைசாட்சிகளைப் புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான நீண்ட பயணத்தின் ஒரு அங்கமாக "மன்னார் மறைசாட்சிகளின் 'புனிதர் நிலைக்கான' விழிப்புணர்வுக் கருத்தமர்வு" கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 2.00 மணிவரை தோட்டவெளி தியான மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட குடும்பநலப் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் ஏறக்குறைய ஆயிரம் பேர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மறைசாட்சியர் தீபச்சுடர் ஏற்றப்பட்டது. திருத்தந்தையின் கொடி, மறைமாவட்டக் கொடி, பொதுநிலையினர் கொடி ஆகியவை ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து "புனிதராம் சேவியரின் தொண்டு ..." என்ற பாடலைப் பாடிக்கொண்டு அனைவரும் மண்டபத்திற்குள் சென்றனர்.

தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. றொக்சன் குரூஸ் அடிகளார் இறைவணக்கத்தை நடாத்தினார். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மன்னார் மமைாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா அடிகளார் வரவேற்புரையையும் நிகழ்வு பற்றிய அறிமுக உரையையும் வழங்கினார். பின்னர் மன்னார் ஆயர் அவர்களின் ஆசியுரை இடம்பெற்றது.

அதைத்தொடர்ந்து அன்றைய நிகழ்வின் முக்கிய அம்சமாகிய பேருரை இடம்பெற்றது. இரண்டு பகுதிகளாக இடம்பெற்ற இப்பேருரையின் ஒவ்வொரு பகுதியும் ஏறக்குறைய ஒரு மணித்தியாலம் இடம்பெற்றது. தேனீர் இடைவேளைக்குப் பின்னர் இரண்டாம் பகுதிப் பேருரை இடம்பெற்றது. இப்பேருரையின் உள்ளடக்கம் நூல் வடிவில் வெளியிடப்பட்டு 100.00 ரூபாய்க்கு வழங்கப்பட்டது.

பேருரையின் நிறைவில் மன்னார் மறைவாட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை அடிகளார் கருத்துரை வழங்கினார். பேருரை தொடர்பான வினாக்கள் மற்றும் கருத்துக்கள் என்பன



எழுத்து மூலம் சபையோரிடமிருந்து பெறப்பட்டு அதற்கான விளக்கங்கள் வழங்கப்பட்டன. 2.00 மணியளவில் மதிய உணவுடன் இக்கருத்தரங்கு இனிதே நிறைவடைந்தது. இக்கருத்தமர்வின் நடத்துனராக அருட்பணியாளர் நேசன் அடிகளார் செயலாற்றினார். கேள்விகள் மற்றும் கருத்துக்களின் தொகுப்பாளர்களாக யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஏ. ஆர். பி. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரும், ஜி. அருட்பிரகாசம் அடிகளாரும் திருவாளர் ஜி. ஜேக்கப் ஆகியோரும் செயற்பட்டனர்.

இக்கருத்தமர்வைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்தவர் மன்னார் மமைாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா அடிகளார் ஆவார். அவரோடு இணைந்து பொதுநிலையினர் ஆணைக்குழுவின் மத்திய குழு உறுப்பினர்கள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். மன்னார் மறைமாவட்டக் குருக்கள் சிலர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

இக்கருத்தமர்வில் கலந்துகொண்டவர்கள் மறைசாட்சிகள் பற்றியும் தொடக்ககால மன்னார் திருச்சபை பற்றியும் பல விடயங்களை அறிந்துகொண்டதாக கருத்துத் தெரிவித்தனர்.

## மன்னார் மறைசாட்சிகளின் 'புனிதர் நிலைக்கான' விழிப்புணர்வுக் கருத்தமர்வின் நிகழ்வுகளின் நிழல்கள்









## நம்மட பாதருக்கும் மாற்றமா....? எங்க பாப்பம் ....!

# மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான புதிய பணி நியமனங்கள்



அருட்பணி. எஸ். கே. தேவராஜா - மன்னார் மறைக்கோட்ட முதல்வர்.
அருட்பணி. எஸ். மாக்கஸ் - முருங்கன் மறைக்கோட்ட முதல்வர்.
அருட்பணி. ரி. நவரெட்னம் - பங்குத்தந்தை, தலைமன்னார்.
அருட்பணி. ஏ. செபமாலை - இணைப் பங்குத்தந்தை, செட்டிகுளம், வதிவிடம் - கன்னாட்டி.
அருட்பணி. பி. எவ். டெஸ்மன் குலாஸ் - பங்குத்தந்தை, கட்டைக்காடு, (புதிய பங்கு)
அருட்பணி. எஸ். மரியதாஸ் லியோன் - பங்குத்தந்தை, உயிலங்குளம்.
அருட்பணி. கே. அன்ரன் சுகுணராஜ் குரூஸ் - பங்குத்தந்தை, தாழ்வுபாடு.
அருட்பணி. பி. லோரன்ஸ் லியோன் - பங்குத்தந்தை, கோமரசன்குளம்.
அருட்பணி. ஆர். கலிஸ்ரஸ் றெறன்ஸ் குலாஸ் - பங்குத்தந்தை, கீளியன்குடியிருப்பு.
அ்ருட்பணி. ஐ. அன்ரனி சோசை – பங்குத்தந்தை, பெரிய குஞ்சுக்குளம்.
அருட்பணி. எம். கொட்வின் கமிலஸ் (சணா) தி. ப – பங்குத்தந்தை, பறப்பாங்கண்டல்.
அருட்பணி. எல். றொணிஸ் வாஸ் - உதவிப்பங்குத்தந்தை, வவுனியா.
அருட்பணி. ஜே. அமலராஜன் குரூஸ் - உதவிப் பரிபாலகர், மடு.
அருட்பணி. பி. றொசான் - உதவிப்பங்குத்தந்தை, பேராலயம், மன்னார்.
அருட்பணி. ஆர். நீக்கிலஸ் - உதவிப்பங்குத்தந்தை, வங்காலை.
அருட்பணி. என். மேரி பெய்லன் குரூஸ் - உதவிப்பங்குத்தந்தை, பேசாலை.
அருட்பணி. பி. சார்லஸ் தயாளன் கூஞ்ஞ - உதவிப்பங்குத்தந்தை, பேராலயம், மன்னார்.
அருட்பணி. பி. யோண் ஸ்ரனின் சோசை - உதவிப்பங்குத்தந்தை, சிலாவத்துறை.

உதவிப் பங்குத் தந்தையர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி ஞாயிறு தினம் தமது புதிய பங்குப் பணிகளைப் பொறுப்பேற்றனர்.

பங்குத் தந்தையர்கள் எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி ஞாயிறு தினம் தமது புதிய பங்குத் தளங்களைப் பொறுப்பேற்பார்கள் என மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை அடிகளார் மன்னாவுக்குத் தெரிவித்தார்.

## மடுவில் அறுவடைக்கு நன்றிகூறும் நிகழ்வு

பெரும்போக விளைச்சல் இம்முறை வெற்றி அளித்துள்ளதால் அறுவடைக்கு நன்றி தெரிவித்து விளைச்சலை ஆண்டவருக்குக் காணிக்கையாகக் கொடுக்கும் நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி அன்று மடுத் தேவாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நன்றித் திருப்பலியை மடுப் பரிபாலகர் எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் ஒப்புக்கொடுத்தார்.

இந்நிகழ்வில் மடுப் பிரதேச செயலாளர் சத்தியசோதி, மடு பிரதேச செயலக ஊழியர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நெல் சந்தைப்படுத்தும் சபை மற்றும் மடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பன நெல்லைக் கொள்வனவு செய்திருந்தன. மன்னார் மாவட்டத்தில் நெல் விளைச்சல் ஏக்கருக்கு 120 தொடக்கம் 140 பூசல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதேவேளை மடு பிரதேசத்தில் ஏக்கருக்கு 110 தொடக்கம் 130 பூசல் கிடைக்கப்பெற்றுள்ளது.

## பம்பைமடுப் பங்கில் இறைஇரக்கப் பெருவிழா



வவுனியாவில் உள்ள பம்பைமடுப் பங்கில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இறை இரக்க ஆலயத்தின் திருவிழா கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இறை இரக்க ஞாயிறு அன்று இடம்பெற்றது. மாலை 2.45 மணிக்கு இறை இரக்க வழிபாடும் அதைத் தொடர்ந்து திருவிழாத் திருப்பலியும் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் திருவிழாத் திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றினார்.

இத்திருவிழாத்திருப்பலிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், அருட்சகோதரிகள் போன்ற பல முக்கியஸ்தர்கள் வருகைதந்திருந்தனர். கொழும்பில் இருந்தும் இறை இரக்கச் சபையின் உறுப்பினர்கள் சிலர் வருகைதந்திருந்தனர்.

திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து இறைஇரக்கப் படம் பவனியாக எடுத்துவரப்பட்டு வேண்டுதல்கள் கேட்கப்பட்டன. புதிய ஆலயக் கட்டுமானப் பணிக்கும், திருவிழாவுக்கும் உதவிய பலருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டும், நினைவுச் சின்னம் வழங்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டனர். விழாவின் நிறைவில் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு இரவு விருந்து வழங்கப்பட்டது.

பம்பைமடுப் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஜெகானந்தன் அடிகளார் இந்தத் திருவிழாவை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## கிறிஸ்தவர்களைக் கடலில் தள்ளிக் கொன்ற படுமோசமான சம்பவம்

லிபியாவில் இருந்து தப்பிச்சென்ற படகில் பயணித்த இஸ்லாமியர்கள், 12 கிறிஸ்தவர்களைக் கடலில் தள்ளிக்கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லிபியாவில் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால் அங்கிருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இத்தாலிக்கு படகில் அகதிகளாய் தப்பிச்செல்கின்றனர். இந்த நிலையில் கடந்த 14ம் திகதி இரப்பர் படகு ஒன்றில் 105 பேர் இத்தாலிக்குப் பயணித்துள்ளனர்.

மத்திய தரைக்கடலின் வடக்குப் பகுதியில் படகு சென்றுகொண்டிருந்தபோது, படகில் இருந்த 15 இஸ்லாமியர்கள் திடீரென தங்களுடன் பயணித்த 12 கிறிஸ்தவர்களையும் வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கடலில் தள்ளிக் கொலைசெய்துள்ளனர். இந்தத் தகவல் இத்தாலிய கடற்படையினருக்குத் தெரியவந்ததையடுத்து நடுக்கடலில் படகை மடக்கி 15 பேரையும் கைதுசெய்துள்ளனர். மேலும் படகில் பயணித்த மற்றவர்கள் வேறொரு கப்பலில் ஏற்றிவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத விவகாரங்கள் தொடர்பான சர்ச்சை காரணமாகவே இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்களைக் கடலில் தள்ளிக்கொன்றதாக அறியமுடிகின்றது.

## மன்னார் மறைமாவட்டத்தின் 39வது பங்காக கட்டைக்காடு புதிய பங்காக மலர்கின்றது

மன்னார் மறைமாவட்டத்தின் 39வது பங்காக கட்டைக்காடு பங்கு உருவாக்கப்பட்டுள்ளது. நானாட்டான் பங்கின் துணை ஆலயங்களில் ஒன்றாக இருந்த சூரிய கட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலயம் மற்றும் உயிலங்குளப் பங்கின் துணை ஆலயங்களாக இருந்த பாலையடி புதுக்குளம் புனித காணிக்கை மாதா ஆலயம், மணற்குளம் புனித அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்தப் புதிய பங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய பங்கு தொடர்பான அறிவிப்பை கடந்த ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி அச்சங்குளம் புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழாவின்போது மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை வெளியிட்டிருந்தார். புதிய பங்கின் முதல் பங்குத்தந்தையாக அருட்பணியாளர் பி. எவ். டெஸ்மன் குலாஸ் அடிகளார் எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ளார்.

புதிய பங்கு மக்களுக்கும் புதிய பங்குத்தந்தைக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பான வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மன்னா மகிழ்ச்சியடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்ததே வணக்க மாதம்!
# தேவதாயின் சிறப்புமிக்க வணக்க மாதம்!

- ஜெனோசன் -




மே மாதம் என்றால் அது தேவதாயின் வணக்க மாதத்திற்கு பெயர்பெற்ற மாதம். இதனைவிடச்சிறப்பு வேறெந்த மாதங்களுக்கும் கிடையாது. வருடத்தில் வரும் பன்னிரண்டு மாதங்களில் ஏப்ரல் மாதம் தவிர்ந்த ஏனைய மாதங்கள் அன்னை மரியாளுக்கு விழாவெடுக்கும் மாதங்களாகவே அமைந்துள்ளன.

இறைமகனை ஈன்றெடுத்த புனிதம்மிக்க மரியாளை வேளாங்கண்ணி மாதா, பூண்டி மாதா, செபமாலை மாதா, சதாசகாய மாதா, லூர்து மாதா, கொஞ்சேஞ்சி மாதா, அடைக்கல மாதா, உத்தரிய மாதா, வியாகுல மாதா போன்ற பல்வேறு நாமங்கள் சூட்டிப் புகழ்கின்றோம், போற்றுகின்றோம்.

வணக்க மாதத்திலே சிறப்பாக அருள்மிகப் பெற்ற அன்னையைப் புகழ்ந்து பல்வேறு பாக்கள் பாடுகின்றோம். ஆண்டின் முதல் நாளிலேயே, 'இறைவனின் அன்னை மரியா' என்று விழாக்கொண்டாடி சிறப்பிக்கும் தாய்த் திருச்சபை மே மாதத்தையும் அக்டோபர் மாதத்தையும் அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதங்களாக அறிவித்துள்ளது.

எனவே பிறந்திருக்கும் இந்த மே மாதத்தில் அன்னையின் பக்தி முயற்சி நம்மில் வளர, அதிகரிக்க ஆவன செய்யுமாறு திருச்சபை அன்னை நம்மை அழைக்கின்றாள்.

அன்று, தினமும் மாலை வேளைகளில் செபமாலை சொல்லி, வணக்க மாதத் தினக்குறிப்பில் நாளாந்தம் அன்னையைப் பற்றிய செய்திகளும் புதுமைகளும் வாசிக்கப்பட்டு, நற்கருணை ஆசீரும் வழங்கப்பட்டு வந்தது. மக்களும் தவறாது இப்பக்தி முயற்சியில் பங்குகொண்டார்கள். ஆனால் இன்று இந்தப் பக்தி முயற்சிக்கு என்ன நடந்தது?

இன்றைய நவீனகால ஊடகங்களின் தாக்கங்கள் குறிப்பாக தொலைக்காட்சிகளும், தொடர் நாடகங்களும் இந்தப் பக்தி முயற்சியை சிலரிடம் மறக்கடித்து வருகின்றன. இத்தகைய நிலையில் மே மாதம் அன்றிருந்த சிறப்பை இன்று இழந்து நிற்கின்றது. என்றாலும், ஒருசில இடங்களில் இன்றும் இந்த வணக்க மாத வழிபாடுகள் இடம்பெறுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

அன்னையின் அளவிடமுடியாத அன்பும் அரவணைப்பும் வழிநடத்தலும் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நம்பிக்கைக் கீதங்களாக ஒலிக்கின்றன. அன்னை மரியா தனது கன்னிமை குன்றாத வாழ்வில் இறைவனுக்கே தாயாகும் நற்பேற்றினைப் பெற்றார். இத்தாயின் செபத்தாலும் வழிநடத்தலாலும் நம் அன்னையாம் திருச்சபையும் ஆழமாக வேரூன்றி எட்டுத்திக்கும் கிளைபரப்பி அனைத்துலக மக்களுக்கும் அன்புப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றது.

மேலும் அன்னை மரியா காட்சி கொடுக்கும் நேரமெல்லாம் செபமாலையுடன் தோன்றி தினமும் செபமாலை செபிக்க வேண்டும் என்று பணித்துள்ளார். கூடிச்செபமாலை செபிக்கும் குடும்பங்கள் கோடி நன்மை பெறுகின்றன என்பதை நமது நாளாந்த வாழ்வில் காண்கின்றோம். மேலும் நமது வாழ்வில் தகர்க்கமுடியாத பாறைகளாய் தடைக்கற்கள் உருண்டு வந்தாலும் அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து இறை உறவில் நம்மைத் தொடர்ந்து ஆழப்படுத்தக்கூடிய சக்தி படைத்தது செபமாலை என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

மரியன்னையைப் பற்றிய அறிவு நம்மிடையே ஆழமானதாக இருக்க வேண்டும். இந்தவேளையில் மரியன்னையின் பக்தி முயற்சி எப்போது? யாரால்? எங்கே? ஆரம்பிக்கப்பட்டது என்று பார்ப்போமானால், மரியன்னைப் பக்தி முயற்சியானது, புதிய ஏற்பாட்டில் வானதூதர் கபிரியேலால் தொடங்கப்பட்டது என்றால் அது மிகையாகாது . அதுவும் வானதூர்தர் கபிரியேல் "அருள்மிகப்பெற்றவரே வாழ்க" என்று மரியன்னையை வாழ்த்தி



மரியன்னையின் பக்தி முயற்சிக்கு வருகைப் பாடலை அன்று பாடினார். அவரை அடுத்து யூதேயா மலைநாட்டில் வாழ்ந்த எலிசபெத்து "தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு, பெண்களுக்குள்ளே ஆசிபெற்றவர்" என்றும் "ஆண்டவரின் தாய்" என்றும் "ஆண்டவரின் வாக்கை நம்பிய மரியா பேறுபெற்றவர்" என்றும் உரத்த குரலிலே கூறி மரியன்னையின் பக்திமுயற்சிக்கு தியானப் பாடல் பாடினார்.

இறுதியாக மரியாளே, "இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் எனக் கூறுவர்" என்று இறைவாக்குரைத்து தனது பக்தி முயற்சிக்கு நன்றிக் கீதம் இசைத்தார். மரியாளின் இந்த இறைவாக்கைத்தான் எல்லா மக்களும் எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் நிறைவேற்றி வருகின்றனர்.

மரியாளின் பக்தி முயற்சி முழுக்க முழுக்க விவிலியத்தில் வேரூன்றியது. இயேசுவின் இறுதிநேர விருப்பமும் நாம் மரியன்னையை நம் சொந்தத் தாயாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே.

நாம் மேகத்தைப் போற்றுவது மழைக்காக. மரத்தைப் போற்றுவது அது கொடுக்கும் கனிக்காக. பசுவைப் போற்றுவது அது தரும் பாலுக்காக. நாம் நம் தாயைப் போற்றுவது அவர் நம்மை ஈன்றெடுத்தமைக்காக. அவ்வாறே நாம் மரியன்னையைப் போற்றுவது அவர் ஈன்றெடுத்த உலக மீட்பராம் இயேசுவுக்காக.

நம் நாட்டில் மரியன்னையின் பக்தி முயற்சி சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. யாழ், மன்னார் மறைமாவட்டங்களில் மரியாளின் பெயரால் தோற்றுவிக்கப்பட்ட யாத்திரைத் தலங்கள் ஏராளம். அதிலும் மடுத்திருப்பதி விசேடமானது. தேசிய ரீதியில் கொழும்பு மறைமாவட்டத்தில் உள்ள தேவத்தை இலங்கை மாதா பெசிலிக்காவையும் குறிப்படலாம். மேலும் பண்டத்தரிப்பு, சாட்டி முதலியனவும் யாழ்ப்பாணத்தில் உள்ள புகழ்பெற்ற மரியன்னை யாத்திரைத் தலங்களாகும்.

யாழ் நகரில் அன்று தோலகட்டியில் ஆரம்பிக்கப்பட்ட செபமாலைத் தாசர் சபையின் முக்கிய நோக்கம் நாள் முழுவதும் நற்கருணை ஆண்டவர்முன் செபமாலை செபிப்பதாகும். இச்சபையானது இன்று கிளைவிட்டு இந்தியா, கனடா போன்ற இடங்களிலும் நம் நாட்டில் பல இடங்களிலும் செபமாலைப் பக்திக்கு முன்னுரை கூறுகின்றது.

இதேபோன்று அமலமரித் தியாகிகள் சபையும் மரியன்னைக்கும், செபமாலைப் பக்திக்கும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது.

எனவே இந்த மாதம் முழுவதும் குறிப்பாகக் குடும்பங்களில், அனைவரும் ஒன்றுகூடி செபமாலையுடன் அன்னையின் புகழையும் பாடி மகிழ்வோம். புனிதர்களுக்கெல்லாம் புனிதையாக விளங்குகின்ற அன்னை மரியாளின் புதுமைகள் பற்றியும் செபமாலையின் நற்பயன்கள் பற்றியும் நாமும் அறிந்து நமது வருங்கால செல்வங்களுக்கும் எடுத்துரைப்போம். அன்று இம்மாத ஆரம்பத்திலே பாடப்பட்ட பாடலை நாமும் "வந்ததே வணக்க மாதம், மரியாளின் மாதமே! சந்தோஷமாய் நாமெல்லோரும் தாயாரைப் புகழ்வோமே..." என்று பாடி மகிழ்வோம். கூடி செபிப்போம். வாழ்க மரியே! வாழ்க நீயே, வாழ்க வாழியவே!

# வவுனியா மறைக்கோட்ட பீடப்பணியாளர்களுக்கான இரண்டு நாள் பாசறை







வவுனியா மறைக்கோட்டப் பங்குகளில் பணியாற்றும் பீடப்பணியாளர்களுக்கான தியானத்துடன்கூடிய பயிற்சிப் பாசறை கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் 18ஆம் திகதிகளில் வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயப் பங்கு மண்டபத்தில் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி அலெக்சாண்டர் ஆரோக்கியம் அடிகளார் தலைமையில் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. வவுனியா மறைக்கோட்டப் பங்குகளிலிருந்து 120 பீடப்பணியாளர்கள் இப்பாசறையில் பங்குபற்றியிருந்தனர்.

வவுனியா மறைக்கோட்ட திருவழிபாட்டு இணைப்பாளர் அருட்பணி. லக்கோன்ஸ் அடிகளார், வவுனியா பங்குத்தந்தை எஸ். சத்தியராஜ் அடிகளார், வேப்பங்குளம் பங்குத்தந்தை லக்ஸ்ரன் டி சில்வா அடிகளார், வவுனியா உதவிப்பங்குத்தந்தை றெறன்ஸ் குலாஸ் அடிகளார் ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

17ஆம் திகதி வெள்ளி மாலை 4.00 மணிக்கு தூய ஆவியின் பாடலுடன் இப்பாசறை ஆரம்பமாகியது. தியானங்கள், உரைகள், அனுபவப்பகிர்வுகள், விவிலிய நாடகப்போட்டிகள் போன்ற நிகழ்வுகள் முதல் நாளில் இடம்பெற்றன.

மறுநாள் 18ஆம் திகதி சனி காலை 6.00 மணிக்கு திருப்பலி இடம்பெற்றது. காலை உணவைத் தொடர்ந்து 11.00 மணிவரை திருவழிபாட்டில் பங்கேற்கும் பயிற்சிமுறைகளை ஆரோக்கியம் அடிகளாரும் லக்கோன்ஸ் அடிகளாரும் பீடப்பணியாளர்களுக்கு வழங்கினர். அத்துடன் மறைமாவட்டத் திருவழிபாட்டு ஆணைக்குழு உறுப்பினர்களான திருவாளர்கள் ஞானம், கை டி பொன்கலன், அன்ரனி ஆகியோர் தியான உரைகளையும் வழங்கினர். திருவாளர்கள் காந்தன், விமலநாதன் ஆகியோரும் ஏனைய உதவிகள் புரிந்தனர்.

காலை 11.15 மணிக்கு வவுனியா ஆலய மைதானத்தில் பங்கு ரீதியான கிறிக்கற் போட்டிகள் நடைபெற்றன. பீடப்பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கிய குருக்கள் ஒன்றிணைந்து இந்த மகிழ்ச்சிகரமான விளையாட்டு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

கிறிக்கற் போட்டி வவுனியா, இலுப்பைக்குளம், தரணிக்குளம், கோமரசன்குளம், பம்மைமடு, ஓமந்தை, வேப்பங்குளம், கனகராயன்குளம் ஆகிய பங்குகளின் பீடப் பணியாளர்களுக்கிடையே மிகவும் சுவாரசியமாக நடைபெற்றது. மதிய உணவின்பின் இறுதியாக நடைபெற்ற கிறிக்கற் போட்டியில் வவுனியாப் பங்கு வெற்றிக்கேடயத்தைத் தட்டிக்கொண்டது. தோல்வி மனப்பான்மை இன்றி அனைத்து பீடப்பணியாளர்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். 2ம் இடத்தை இலுப்பைக்குளம் பங்கு பெற்றுக்கொண்டதும் பாராட்டுதற்குரியதே.

நாடகப்போட்டியிலும் முதல் இரு குழுக்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

வவுனியா பங்குத்தந்தை அருட்பணி எஸ். சத்தியராஜ் அடிகளாரின் சிறப்பு உரையுடனும், திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி ஏ. ஆரோக்கியம் அடிகளாரின் நன்றியுரையுடன் மாலை 3.00 மணியளவில் இப்பயிற்சிப் பட்டறை நிறைவுபெற்றது. ஒவ்வொரு வருடமும் இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்யுமாறு பங்குபற்றிய பீடப்பணியாளர்கள் வேண்டிக்கொண்டனர்.

# திருக்குடும்ப பொதுநிலையினருக்கான ஒன்றுகூடல்
## தவக்கால தியான உரையை பெப்பி அடிகள் வழங்கினார்

மன்னார் பிராந்தியத்தில் நான்கு கிராம குழுக்களை உள்ளடக்கிய திருக்குடும்ப பொதுநிலை அங்கத்தினரின் ஒன்றுகூடல் கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி சனி அன்று காலை 9.00 மணியளவில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மண்டபத்தில் அருட்சகோதரி றொக்ஸ் மேரி தலைமையில் ஆரம்பமானது.

தவக்காலத் தியான உரையை அருட்பணியாளர் பெப்பி சோசை வழங்கினார். புனித லூக்கா நற்செய்தியில் இயேசு சிலுவையில் மரணிக்குமுன் "தாகமாய் இருக்கின்றேன்" என்று கூறிய வார்த்தைகள் சிந்தனைக்கு விடப்பட்டன. இறைவன் பாவிகளின் மனந்திரும்புதலுக்காக எவ்வளவு தூரம் தாகமாய் இருக்கின்றார் என்ற கோணத்தில் அடிகளார் தியானத்தை தொடக்கிவைத்தார். அவ்வேளையில் இயேசுவுக்கு ஏற்பட்டது உடல் தாகம் மட்டுமல்ல, மாறாக ஆன்மீகத் தாகமும்தான். பாவிகள் நரக வேதனையை அனுபவிக்காமல் ஆன்ம ஈடேற்றம் அடையவேண்டும் என்ற தாகம் அவருக்கு ஏற்பட்டது.

கிணற்றடியில் நீர் அள்ள வந்த சமாரியப் பெண்ணிடம் இயேசு, "நான் தரும் நீரைப்பருகினால் என்றுமே தாகம் வராது" என்று கூறிய ஆன்ம தாகத்தைப்பற்றிய நற்செய்தி விளக்கத்தை அடிகளார் எடுத்துக்கூறினார். அன்னை தெரேசாவின் பணி பற்றியும் அவர் இயேசுவுக்காக அனைத்தையும் ஏற்றுக்கொண்டு ஏழை, எளிய, வறிய மக்கள் மத்தியில் இறைபணி செய்ததையும் எடுத்துக்கூறிய அடிகளார் நாமும் அயலவரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக செப தபங்கள் மற்றும் தான தருமங்கள் ஊடாக நற்செய்திப்பணி செய்ய அழைக்கப்பட்டுள்ளோம் என விளக்கினார். நசரேத்தூரில் வாழ்ந்த திருக்குடும்பத்தைப் பின்பற்றி நாமும் ஆழமான விசுவாச வாழ்வு வாழ வேண்டுமென்றுகூறி தவக்கால ஒன்றுகூடல் தியானத்தை நிறைவுசெய்தார்.

பெப்பி அடிகளாரின் தவக்கால தியான உரையைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார் தலைமையில் திருப்பலிக் கொண்டாட்டம் இடம்பெற்றது. திருப்பலியின்போதும் றெஜினோல்ட் அடிகளார் கிறிஸ்தவ வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களை முன்வைத்தார்.

ஈற்றில் திருக்குடும்ப பொதுநிலையினரின் பாடலுடன் ஒன்றுகூடல் நிகழ்வானது இனிதே நிறைவெய்தியது. இவ்வொன்றுகூடலில் நான்கு அருட்சகோதரிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

**தகவல்: கிறிஸ்ரி ராணி துரம்,**
**திருக்குடும்ப பொது நிலையினர் பேசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# என்னுடன் பயணிக்கும் உங்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன்!

### 75வது பிறந்ததின விழாவில் மன்னார் ஆயர்



அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் துன்புறும் மக்களுக்காகவும் நான் இப்பொழுது மட்டும் குரல் கொடுக்கவில்லை. மாறாக சிறுவனாக இருக்கும் காலத்திலேயே இந்த விடயம் எனக்கு இரத்தத்துடன் இரண்டறக் கலந்ததாகும். அந்த வகையில் பிறர் துன்பப்படும்வேளையில் நான் ஆதங்கப்படும்போது என்னுடன் பயணிக்கும் உங்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன் என மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி அன்று அவருடைய 75வது அகவை விழாக் கொண்டாட்டம் மன்னார் ஆயர் இல்ல வளாகத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஆயர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது கூறியதாவது,

இன்று எனது பிறந்த தினத்தை முன்னிட்டு இங்கு நடைபெறும் விழாவைப்பற்றி எனக்குப் பெரிதாக எதுவும் தெரியாது. ஆனால் எனது பிறந்த நாளைச் சிறப்பிக்க தங்களைச் சுதந்திரமாக அனுமதிக்குமாறு எனது குருக்கள் என்னிடம் அனுமதி கேட்டனர். அதனால் இவ்விடயத்தில் நான் அவர்களின் சுதந்திரத்தைத் தடைசெய்ய விரும்பவில்லை.

ஆனால் நான் ஒன்றை மட்டும் அவர்களுக்குத் தெரிவித்தேன். அதாவது எனது வாழ்விலும் எனது பணியிலும் என்னுடன் இணைந்து பயணித்த உள்ளங்கள் பல இருக்கின்றன. அவர்களுக்கு எனது நன்றியாக இங்கு சிறு உபசரணை ஒன்றை ஆயத்தப்படுத்துங்கள் என முன்பு ஒரு நிகழ்வில் இவர்களுக்குத் தெரிவித்திருந்தேன். ஆனால் அதை இவ்வளவு பெரிதாகச் செய்வார்கள் என நான் நினைக்கவில்லை.

எனது பணி வாழ்விலே பலர் எனக்கு உற்சாகமூட்டி மனித வாழ்வுடன், உயிருடன் சம்பந்தப்பட்ட பல பணிகளை மேற்கொள்ள உதவிபுரிந்தனர். நான் சிறுவனாக இருந்தபோதே பலர் துன்பப்படும்போது எனக்கு அப்பொழுதே குழப்பம் ஏற்படும். ஏழைகள், ஊனமுற்றோர், இயலாதவர்களை நான் காணும்போது ஏதாவது வழியில் இவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என எனக்குத் தோன்றும்.

இதனால் நான் அன்றே இப்படிப்பட்டவர்களுக்கு அருகாமையில் சென்று எனது அன்பைக் காட்டுவது வழக்கம். இப்படியான எனது சிறுவயது வாழ்வில் பழக்கப்பட்டதால் தமிழர் பட்ட, படும் துன்பங்களைச் சகிக்க முடியாமலே நான் இவர்கள் மட்டில் எனது முயற்சிகளைச் செய்துவருகின்றேன்.

உண்மையில் எனது இந்தப் பணியில் எனக்குப் பலரும் கைகொடுத்து வருகின்றனர். ஆகவே, அவர்களுடன் நானும் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மனித இனத்துக்காக என்னையும் அவர்களுடன் இணைத்து மக்களின் விடிவுக்காக செயல்படுகின்றேன். ஒரு தனிமனிதனாக அல்ல அனைவரும் ஒன்றுபட்டே உழைக்க வேண்டும்.

வட மாகாணத்தில் எவ்வளவோ காலத்துக்குப்பின் வடமாகாணத் தேர்தல் வந்தபோது இதற்கான ஒரு நல்ல தலைவராக நான் எண்ணி இன்றைய வடமாகாண முதலமைச்சரை அவரின் வீட்டுக்குச் சென்று இதில் போட்டியிடுமாறு கேட்டுக்கொண்டேன். ஆனால் அவர் தயங்கினார். மக்கள் என்னைத் தெரிந்துகொள்வார்களா? என்ற கேள்வியையும் என்னிடம் தொடுத்தார். எங்கள் மக்கள் நூற்றுக்கு நூறு வீதம் உங்களைத் தெரிவுசெய்வார்கள் என அவருக்கு உத்தரவாதம் வழங்கினேன். நான் கூறியதுக்கு அமைய எம் மக்களும் அவரைத் தெரிவுசெய்தனர்.

இன்று மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் வடமாகாண முதலமைச்சர் ஓய்வாக இருக்கும் இவ்வயதிலும் தனது சிறந்த சேவையைச் செய்துவருகின்றார். எம் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்துச் செயல்படும் அந்தத் தலைவரும் இன்று எனது இந்நன்னாளில் எங்களுடன் இருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு என்னுடன் பயணிக்கின்ற ஆயர்கள், பொதுமக்கள், அரச, அரச சார்பற்ற அதிகாரிகள், இராணுவ பொலிஸ் அதிகாரிகள் என அனைவரும் இவ்விடயத்தில் ஒன்றிணைந்து இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. உண்மையில் எமது மக்கள் படும் பாடுகளை, எனது ஆதங்கங்களை ஏற்றுக்கொண்டு என்னுடன் பயணிப்பவர்கள் நீங்கள். இப்படியானவர்கள் இன்றும் என்னுடன் இங்கு இருப்பது எனக்குப் பெரும் மகிழ்ச்சி.

தமிழ் மக்கள் உரிமையுடன் வாழ வேண்டும், இந்த நாடு இங்கு வாழும் அனைவருக்கும் சொந்தம் என்ற உண்மையை உணர்ந்தவர்களாகத்தான் நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறு இங்கு வந்திருக்கும் அனைவரும் என்னுடன் உண்மைக்காக, நீதிக்காகச் செயற்பட்டு வருவதுடன் எனது நன்றியாக எனது இந்தப் பிறந்த தினத்தில் வழங்கப்படும் சிறு உபகாரத்தில் கலந்துகொண்டமைக்காக உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

# மறையாசிரியர்களின் தவக்கால திருயாத்திரை

மன்னார் மறைமாவட்டப் பங்குத் தளங்களின் மறையாசிரியர் பிரதிநிதிகள் மன்னார் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி. றெஜினோல்ட் அடிகளாரின் தலைமையில் தவக்காலத் திருயாத்திரையை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 28ந் திகதி அன்று இவர்கள் மேற்கொண்ட இத்திருயாத்திரையின்போது கண்டி மறைமாவட்டத்தின் வாஹக்கோட்ட புனித அந்தோனியார் ஆலயத் திருத்தலத்துக்கு - அதாவது புனித யோசவ்வாஸ் அடிகளார் இலங்கைத் தீவில் தனது மறைப்பரப்புப் பணியில் ஈடுபட்டபோது நீண்ட காலமாகத் தங்கியிருந்து பணியாற்றிய அந்த இடத்துக்கு - இவர்கள் சென்றிருந்தனர்.

அன்று காலை 5.00 மணிக்கு மன்னார் மறைக்கல்வி நடுநிலையத்திலிருந்து புறப்பட்ட இவ் மறையாசிரியர்கள் காலை 7.00 மணியளவில் மதவாச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் தங்கள் காலை ஆகாரத்தை எடுத்துக்கொண்டு 8.00 மணியளவில் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

அன்று காலை 11.00 மணியளவில் கண்டி மறைமாவட்டத்தின் வாஹக்கோட்ட புனித அந்தோனியார் ஆலயத் திருத்தலத்தை அடைந்த இவர்கள், ஆலயத்துக்குள் சென்று செபித்தனர். பின்னர் அந்த ஆலயப் பங்குத்தந்தையான அருட்பணி. யோவான் அடிகளாரால் அவ்வாலயம், பங்கு, மற்றும் புனித யோசவ்வாஸ் அடிகளாரால் அப்பகுதியில் மேற்கொண்ட இறை பணி சம்பந்தமான நீண்ட உரை மறையாசிரியர்களுக்கு வழங்கப்பட்டது

இதைத்தொடர்ந்து பகல் உணவுக்கான சமையல்களை அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொண்டு பின் பகல் உணவு உண்டபின் சிறிதுநேர ஓய்வுக்குப்பின் வழமையான மாதாந்த நிர்வாகக் கூட்டம் வாஹக்கேட்ட புனித அந்தோனியார் ஆலயத் திருத்தல முன்றலில் இடம்பெற்றது.

தொடர்ந்து மாலை 6.00 மணியளவில் புனித யோசவ் வாஸ் அடிகளார் தனது கரத்தால் சிலுவை நாட்டிய இடமான எண்கோண திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் மண்டபத்தில் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி. றெஜினோல்ட் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன்பின் அனைவரும் பரவலாகப் பிரிந்து சென்று ஆலயத்தின் சகல இடங்களையும் பார்வையிட்டதுடன் அப்பகுதியிலுள்ள பங்கு மக்களையும் சந்தித்து உரையாடியானர். இரவு உணவையும் அங்கு உண்டபின் இரவு சுமார் 8.00 மணியளவில் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு மன்னாருக்கு அதிகாலை ஒரு மணியளவில் வந்து சேர்ந்தனர்.

# மேல் கியூரியாவின் ஆச்சேஸ் விழா



வருடா வருடம் மார்ச் மாதம் 25ம் திகதி மங்கள வார்த்தைத் திருவிழாவையடுத்து வரும் நாட்களில் மரியாயின் சேனையாளர் தங்களது அர்ப்பண வாழ்வின் கடந்த வருடத்தின் சேவைகளுக்கு நன்றியாகவும், வரும் வருடத்தின் பணிகளை அன்னையின் ஆசியுடன் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்குப் பலமும், வரமும் வேண்டி தங்களையும் தமக்குரியவர்களையும், தமக்குரிய அனைத்தையும் அர்ப்பணம் செய்வதுதான் ஆச்சேஸ் விழாவின் முக்கிய நோக்கமாகும்

இந்த வருடம் இந்நிகழ்வானது கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மன்னார் கொமிசியத்திலுள்ள 6 கியூரியாக்களில் மேல் கியூரியாவாகிய மன்னார் மேல் கியூரியாவிலுள்ள 23 பிரசீடியங்கள் தங்களது அர்ப்பண விழாவினை பள்ளிமுனை புனித லூசியா தேவாலயத்தில் ஒப்புக்கொடுத்தனர்.

பள்ளிமுனைப் பங்கின் ஆச்சரியத்திற்குரிய மாதா பிரசீடியம் பெண்களுக்கான சேனை



1966.04.25 அன்று ஆரம்பமானதை 2016.04.25இல் 50 வருட யூபிலி விழாவாகக் கொண்டாட இருப்பதை முன்னிட்டும் ஒருவருட ஆரம்ப நிகழ்வுகளை முன்னிட்டும் இங்கு சேனையாளர்கள் ஒன்றுகூடி 250க்கும் அதிகமானோர் அன்னையின் ஆசீரை வேண்டி இவ்விழாவினில் கலந்துகொண்டனர்.

மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனையின் ஆன்ம இயக்குனர் அருட்பணி. எஸ். தேவராஜா கொடுதோர் தனது ஆசியுரையில் ஆச்சேஸ் விழாவினதும் யூபிலி வருடத்தின் சிறப்புக்களையும் கூறினார். வழமைபோல சேனையாளர்களின் செபங்களுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பள்ளிமுனைப் பங்குத்தந்தை அருட்பணி செ. ஸ்ரீபன்ராஜ் அடிகளார் மரியாளினதும், மரியாயின் சேனையினதும் முக்கியம் பற்றிக் கூறினார்.

சேனையாளர்களது அர்ப்பணத்தின் பின்னர் நற்கருணை ஆசீரும் இடம்பெற்றது. மாதாவின் பாடலுடன் சிற்றுண்டி உபசரனையுடன் பி.ப 5.45 மணியளவில் இந்நிகழ்வானது இனிதே நிறைவுபெற்றது.

# ஆட்காட்டிவெளிப் பங்கின் சிலுவைப்பாதைப் பவனி



ஆட்காட்டிவெளிப் பங்கின் சிலுவைப்பாதைப் பவனியானது கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் ஆட்காட்டிவெளிப் பங்கிலுள்ள பழைய சேமக்காலையில் ஆரம்பமாகியது.

இப்பங்கைச் சேர்ந்த அனைவரும் இப்பவனியிலே கலந்துகொண்டனர். பழைய சேமக்காலை வளாகத்திலே பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் 14 சிலுவைப்பாதை நிலைகள் உருவாக்கப்பட்டிருந்தன. சிறிய செபத்துடன் சிலுவைப் பாதை பவனியானது ஆரம்பமாகி ஆட்காட்டிவெளிப் பங்கின் முச்சந்தியிலுள்ள கர்த்தர் வளாகத்திலே நிறைவுபெற்றது.

அன்றைய தினத்தில் பள்ளிமுனைப் பங்குத்தந்தை அருட்பணி. ஸ்ரீபன் அடிகளாரும், முத்தரிப்புத்துறைப் பங்குத்தந்தை அருட்பணி. டெனி கலிஸ்ரஸ் அடிகளாரும், அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி. நியூட்டன் அடிகளாரும், அருட்சகோதரர் சார்லஸ் தயாளன் கூஞ்ஞ அவர்களும் வருகை தந்திருந்தனர். தொடர்ந்து அவ்விடத்திலே புதிதாக அமைக்கப்பட்ட கத்தர் சுரூபம் அருட்தந்தை ஸ்ரீபன் அடிகளாரால் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டது. அதன் பின்னர் சிறந்த மறையுரையுடன் கூட்டுத்திருப்பலி அவ்வளாகத்திலே ஒப்புக்கொடுக்கப்பட்டது. பங்குத்தந்தை டெஸ்மன் அஞ்சலோ அடிகளாரின் வழிநடத்திலின்கீழ் இந்நிகழ்வுகள் அனைத்தும் நடைபெற்றன. அனைத்துப் பங்கு மக்களும் இந்நிகழ்விற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆட்காட்டிவெளிப் பங்கின் குடும்பங்களுக்கான தியானமும், திருப்பலியும்

தவக்காலத்தை முன்னிட்டு ஆட்காட்டிவெளி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு பங்கு மக்களுக்கான குடும்பத் தியானமும், நற்கருணை ஆராதனையும் சிறப்பான முறையில் நடந்தேறியது.

இக்குடும்பத் தியானமானது வைத்திய கலாநிதி சஜீவன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இத்தியானத்தில் அவர் தனது வாழ்வில் நடந்த இறை அனுபவங்களைச் சாட்சியமாகப் பகிர்ந்துகொண்டார். இச்சாட்சியப் பகிர்வின் மூலம் நாம் குடும்பமாக ஆர்வத்தோடு ஆண்டவரைத் தேடவேண்டுமென்ற இறைசெய்தியை உணரமுடிந்தது. இத்தியானத்தில் வைத்தியருடன் வருகைதந்த இரு தாதியர்களும், அவரது உறவினர்களும் கலந்து சிறப்பித்தனர். தியானத்தைத் தொடர்ந்து பங்குத்தந்தை அருட்பணி. எ. டெஸ்மன் அஞ்சலோ அடிகளாரினால் நற்கருணை ஆசீர்வாதமும், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு இத்தியானமானது இரவு 8.30 மணியளவில் நிறைவுபெற்றது.

**மன்னா விநியோகஸ்தர்களே!**
உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்! - மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்செய்தி அறிவிப்பு

கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி அன்று நடைபெற்ற நற்செய்தி அறிவிப்பிற்கான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழுவின் கூட்டத்தில் வைத்தியர் டேர்ளின் வணிகரட்ன, திரு. விக்டர் சில்வா ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்டு கலந்தாலோசிக்கப்பட்ட ஆவணம்.

- தமிழாக்கம் அருட்பணி. எஸ். டக்ளஸ் ஜேம்ஸ் -



## 01. நற்செய்தி அறிவிப்பு என்றால் என்ன?

கடவுளின் நற்செய்தியை அடுத்தவருக்குக் கொடுப்பது அல்லது பறைசாற்றுவது என்று பொருள்படும். கடவுளின் நற்செய்தியாகிய இயேசுக்கிறிஸ்துவே முதல் நற்செய்தியாளரும், சிறந்த நற்செய்தியாளரும் ஆவார். தமது இவ்வுலக வாழ்வினைப் பலியாகப் படைத்து தம் நற்செய்தி அறிவிப்புப்பணியினை உச்ச நிலையில் ஆற்றினார். (திருத்தந்தை 6ம் பவுல் - நவீன உலகில் நற்செய்தி அறிவிப்பு 7)

ஆகவே நற்செய்தி அறிவிப்பு என்பதை, கிறிஸ்துவைப் பின்பற்றும் உண்மைச்சீடனாக மாறி அவ்வழைப்பிற்கேற்ப கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழ்தல் என வரையறை செய்யலாம். "ஒரு கிறிஸ்தவனாக இருப்பது ஓர் ஒழுக்கம் சார்ந்த தெரிவு அல்லது ஒரு மேன்மையான கருத்தின் வினைப்பயன் அல்ல. மாறாக வாழ்வுக்கு புதிய ஓர் அறிவெல்லையையும், தீர்வான வழியையும் வழங்கும் ஒரு நிகழ்வு, ஒரு நபருடனான சந்திப்பாகும்." (திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர், அன்பே கடவுள் 1)

## 02. நற்செய்தி அறிவிப்பின் மூலக்கூறுகள்?

நற்செய்தி அறிவிப்பின் மிகமுக்கியமானதும் முதலாவதுமான மூலக்கூறு உன்னத நற்செய்தி அறிவிப்பாளரான இயேசுக்கிறிஸ்துவுடனான தனிப்பட்ட சந்திப்பாகும். 'நற்செய்தியின் மகிழ்ச்சி' எனும் அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"எங்குமுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும் இந்தத் தருணத்தில் இயேசுக் கிறிஸ்துவுடனான ஒரு புதுப்பிக்கப்பட்ட தனிப்பட்ட சந்திப்புக்கும் அல்லது அவர்களைக் கிறிஸ்து சந்திக்கக் குறைந்தபட்சம் அவரை அனுமதிக்கும் திறந்த மனத்தையாவது வழங்க அழைக்கின்றேன். நீங்கள் அனைவரும் தவறாமல் தினமும் அதைச் செய்ய வேண்டுகிறேன். யாரும் இந்த அழைப்பு எனக்குரியது அல்ல என்று நிச்சயமாக நினைக்கக் கூடாது, ஏனெனில் ஆண்டவர் கொணர்ந்த மகிழ்ச்சியிலிருந்து யாரும் விலக்கப்படுவதில்லை." (நற்செய்தியின் மகிழ்ச்சி 3)

திருச்சபை நற்செய்தி அறிவிப்புப் பணி என்னும் கடமைப்பொறுப்பை மேற்கொள்ள கிறிஸ்தவர்களுக்கு கட்டளையிடும்போது, உண்மையான தனிநபர் நிறைவுக்கான ஊற்றையே சுட்டிக்காட்டுகின்றது. ஏனெனில் இங்கே ஓர் ஆழ்ந்த உண்மைச் சட்டத்தைக் கண்டுபிடிக்கின்றோம். "வாழ்வை அடைந்ததும், மற்றவர்களுக்கு வாழ்வு வழங்க அது தன்னையே வழங்கும் அளவுக்கு முதிர்ச்சியடைகிறது. இதுதான் உண்மையில் நற்செய்தி அறிவிப்புப் பணி என்றால் என்ன என்பது பொருள்." (நற்செய்தியின் மகிழ்ச்சி 10)

## 03. நற்செய்தி அறிவிப்பாளர்களாக...

என்னை நற்செய்தி அறிவிப்பாளராக இயேசுக்கிறிஸ்து ஓர் அரசைக் குறித்து அறிவிக்கின்றார். அது இறைவனின் அரசு. ஏனைய அனைத்துமே "அடுத்தவையாக" அல்லது மேலதிகமாக சேர்க்கப்பட்டவையாகப் பார்க்கப்படும் அளவுக்கு இறையரசு நற்செய்தி அறிவிப்பில் முக்கியத்துவம் பெறுகிறது. (நவீன உலகில் நற்செய்தி அறிவிப்பு 8)

ஆகவே இறைவனின் அரசு பற்றிய தமது போதனையாலும், பாவம், மரணத்திலிருந்து நமக்கு அவர் அளிக்கும் மீட்பாலும் நமக்கு நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து நற்செய்தியினை அறிவிக்க நாம் இடமளிக்க வேண்டும். இவ்வழியில் இறைவார்த்தையானது நற்செய்தி அறிவிப்பாளரின் வாழ்வில் முக்கிய பகுதியாக விளங்குகின்றது. நற்செய்தி அறிவிப்பானது உன்னத நற்செய்தி அறிவிப்பாளரான இயேசுக் கிறிஸ்துவுடனான நம் தனிப்பட்ட சந்திப்பின் அனுபவப் பகிர்வாக விளங்குகின்றது.

ஒவ்வொரு நற்செய்தி அறிவிப்புப் பணிச்செயலிலும் முதன்மைத்துவம் அவருடன் ஒத்துழைக்க நம்மை அழைத்த, தூய ஆவியின் வல்லமையால் வழிநடத்தும் கடவுளுக்கே உரியது. நற்செய்தி அறிவிப்பில் நம் பணியானது நற்செய்தி அறிவிக்கப்படவேண்டியவர்களை கிறிஸ்துவுடனான தனிப்பட்ட சந்திப்பிற்கு அழைத்தலும் ஊக்கப்படுத்தலும் ஆகும்.

## 04. நாம் ஏன் நற்செய்தி அறிவிக்க வேண்டும்?

நற்செய்தி அறிவிப்புபணி என்பது இயேசுவின் மறைபரப்புப் பணிக்கான கட்டளைக்குக் கீழ்ப்படிதலில் அடங்கியுள்ளது. "எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத் 28: 19-20/ மாற் 16:15/ யோவா 20:21).

## 05. நற்செய்தி அறிவிப்பிற்கான உரிமைக் கட்டளை யாருக்கு வழங்கப்பட்டது?

இந்நற்செய்தி அறிவிப்பிற்கான உரிமைக்கட்டளையானது இயேசுக்கிறிஸ்துவை மீட்பராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும் நம்பிக்கையாளர்களின் திருக்கூட்டமாகிய திருச்சபைக்கே வழங்கப்பட்டுள்ளது. "தலைவரின் முன்மாதிரிகையான பிரமாணிக்கத்தில் தயக்கம், விருப்பமின்மை, மற்றும் பயமின்றி எல்லோருக்கும், எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் இன்றைய திருச்சபை வெளியேறி, நற்செய்தியை அறிவிக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்."

திருத்தந்தை பிரான்சிஸ் தன் திருப்பீடப் பணியின் ஆரம்பத்திலேயே தென் அமெரிக்க நாடுகளின் ஆயர்களைச் சந்தித்து இவ்வாறு கூறினார். "அதனாலேயே நான் நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்களின் இடம் மையம் அல்ல மாறாக புற எல்லைகளே என்று சொல்வதை விரும்புகிறேன். புற எல்லைகளில் வாழ்வோர் மட்டில் சம நிலையில் உள்ளவர்களாக... கிறிஸ்துவுடனான சந்திப்பின் மட்டில் நிலையான புற எல்லைகளையும் உள்ளடக்கி... நிலை வலியுறுத்துகிற புற எல்லைகளுக்கே கிறிஸ்துவின் சீடர்கள் அனுப்பப்படுகின்றார்கள்."

"திருச்சபையாக இருப்பது என்பது இறைத் தந்தையின் அன்பின் மேலான திட்டத்தின்படி இறை மக்களாக இருப்பதாகும். இதன் பொருள் நாம் கடவுளின் புளிக்காரமாக மனிதர்கள் மத்தியில் இருப்பது என்பதாகும். மீண்டும் வழிமாறிச் செல்கின்ற மற்றும் உற்சாகமூட்டப்பட வேண்டிய, நம்பிக்கை தரப்படவேண்டிய மற்றும் வழியில் வலுவூட்டப்பட வேண்டிய உலகினுள், ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்பு செய்யப்பட்டு, மன்னிக்கப்பெற்று, நற்செய்தியின் நல் வாழ்வு வாழ உற்சாகமூட்டப்பட்டு, இலவசமாக இரக்கம் வழங்கப்படும் இடமாக திருச்சபை இருக்க வேண்டும்." (நற்செய்தியின் மகிழ்ச்சி 114)

"திருமுழுக்கினால், இறைமக்களின் அனைத்து உறுப்பினர்களும் மறைபரப்புச் சீடர்களாகியுள்ளனர் (மத். 28:19) "... எல்லாக் கிறிஸ்தவர்களும், இங்கே இப்போதே நற்செய்தி அறிவிப்புப் பணியில் தீவிரமாக பங்கெடுக்க சவால் விடுக்கப்படுகின்றனர். மெய்யாகவே, கடவுளின் காக்கும் அன்பை உண்மையில் அனுபவித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் வெளியேறி இந்த அன்பை அறிவிக்க அதிக நேரமோ அல்லது நீண்ட தயாரிப்போ தேவைப்படுவதில்லை. கிறிஸ்துக் இயேசுவில் கடவுளின் அன்பைக் கண்டுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களும் மறைபரப்புபணியாளர்களே. நாம் மறைபரப்புச் சீடர்களாகவே இருக்கின்றோம்." (நற்செய்தியின் மகிழ்ச்சி 120)

## 06. நாம் யாருக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டும்?

- வழக்கமாக சமூக வழிபாடுகளில் பங்கெடுக்கும், ஆண்டவருடைய நாளில் (ஞாயிற்றுக்கிழமைகளில்) இறைவார்த்தை மற்றும் முடிவில்லா வாழ்வு தரும் உணவால் ஊட்டம் பெறக்கூடும் இறைநம்பிக்கையாளர்களுக்கு.
- திருமுழுக்கின் எதிர்பார்ப்புக்களை தங்கள் வாழ்வில் வெளிப்படுத்தாத திருமுழுக்குப் பெற்றோருக்கு. இவர்கள் திருச்சபையுடன் பொருள்மிக்க உறவற்றும், விசுவாசத்திலிருந்து பிறக்கும் ஆறுதலை அனுபவிக்காமலும் இருப்பவர்கள்.
- கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும், அவரை எப்போதும் புறக்கணித்தவர்களுக்கும்.



## 07. மறைபரப்புபணியின் கருவிகள்

I. கடவுளின் திருவிருப்பத்தை அறிவதற்கான செபம். "அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும்போது தூய ஆவியார் அவர்களிடம் 'பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கின்றேன். அந்தப் பணிக்காக அவர்களை ஒதுக்கிவையுங்கள்' என்று கூறினார்கள். இவ்வாறு தூய ஆவியாரால் அனுப்பப்பட்டவர்கள் செலுக்கியாவுக்குச் சென்றார்கள், அங்கிருந்து சைப்பரசுக்குக் கப்பலேறினார்கள்" (தி. பணி. 13: 2-4).

II. வேண்டுதல் செபம் (அனைவருக்காகவும் மன்றாடுங்கள்) "அனைவருக்காகவும் மன்றாடுங்கள், இறைவனிடம் வேண்டுங்கள், பரிந்துபேசுங்கள், நன்றி செலுத்துங்கள், முதன் முதலில் நான் உங்களுக்குத் தரும் அறிவுரை இதுவே. இறைபற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய், தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக்காகவும், உயர் நிலையிலுள்ள எல்லா மனிதர்களுக்காகவும், மன்றாடுங்கள். அதுவே நம் மீட்பராகிய கடவுளின்முன் சிறந்ததும் ஏற்புடையதுமாகும். எல்லா மனிதரும் மீட்புப்பெறவும், உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார், ஏனெனில் கடவுள் ஒருவரே. கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே. அவரே இயேசுக்கிறிஸ்து என்னும் மனிதர்" (1 திமோத் 2:1-5).


III. இறைவார்த்தை.

IV. எழுச்சியூட்டும் அர்த்தமுள்ள திருவழிபாடு.

V. மறையுரை – அனுபவப்பகிர்வானது (காண் - நற்செய்தியின் மகிழ்ச்சி – மறையுரை 135 – 144).

VI. வெகுசன பக்தி முயற்சி, (காண் - நற்செய்தியின் மகிழ்ச்சி 122-126) நற்செய்தி அறிவிப்பில் வெகுசன பக்தி முயற்சியின் சக்தி.

VII. நற்செய்தி அறிவிப்பாளர் தன் வாழ்வில் கடவுளின் அன்பிற்கு சான்றுபகர்தல்



## 08. முடிவுரை

திருத்தந்தையைத் தெரிவதற்கு முன்னதாகக் கூடும் பொது ஒன்றுகூடல் என்று அழைக்கப்படும் அமர்வில் (பங்குனி 2013ல்) கர்தினால் ஜோர்ஜ் மரியோ பெர்கோலியோ அங்கு கூடியிருந்த கர்தினார்கள் மத்தியில் ஆற்றிய உரையில்,

திருச்சபையின் ஒரே நோக்கம் வெளியேறிச் சென்று உலகிற்கொல்லாம் இயேசுக்கிறிஸ்து பற்றிய நற்செய்தியை அறிவிப்பதாகும். இந்நற்செய்தி அறிவிப்பானது திருச்சபை தற்சார்பு நிலையிலிருந்து வெளியேறிச்செல்லும் திருச்சபையாக தன்னை மாற்றவேண்டிய விருப்பத்தை முன்னுரைக்கின்றது. திருச்சபையானது தனக்குள்ளேயே முடங்கிவிடாது புற எல்லைகளை நோக்கி வெளியேறிச் செல்ல அழைக்கப்படுகிறது. இவ்வாறு வெளியேறிச்செல்வது நிலப்பரப்பு சார்ந்தாக மட்டுமல்லாமல் வாழ்க்கையின் புற எல்லைகளான – பாவம், வலி, அநீதி, அறியாமை, சமயத்தின் மட்டில் அக்கறையின்மை, தற்கால அறிவியலின் போக்கு அனைத்து வகையான அவலநிலை பற்றிய மறையுண்மைகள் நோக்கிய நகர்வாகும்.

தற்சார்புக் கொள்கையுடைய திருச்சபையானது தனக்கான ஒளியைத் தானே கொண்டிருப்பதாக எண்ணி கவனக்குறைவோடு செயல்படுகிறது. இதனால் கிறிஸ்து என்னும் ஒளியின் இணைப்பாளராயிருக்க வேண்டிய அழைப்பிலிருந்து திருச்சபை விலகி அனைத்தையும் தனக்குள்ளே வைத்திருக்கும் உலகியல் ஆன்மீகமென்னும் மிகத் தீவிரமான தீமைக்கு வழிவகுக்கிறது. திருச்சபையின் சிறப்புக்கள் என்னும் படைப்பில் ஹென்றி டி லுபாக்கின் கருத்துப்படி, திருச்சபையின்மேல் வரக்கூடிய மிக மோசமான தீமை இதுவாகும். ஒருவர் மற்றவருக்கு வாழ்வளிப்பதற்காகவே இது வாழ்கிறது. திருச்சபையைக் குறித்து இரண்டு பார்வைகள் உண்டு.

1. வெளியேறிச் சென்று நற்செய்தியை அறிவிக்கும் திருச்சபை.
2. உலகைச் சார்ந்து, தனக்காக தனக்குள்ளே தன்னைப் பற்றியே நினைத்து வாழும் திருச்சபை.

இத்திருச்சபையானது நடைமுறைக்கேற்ற, தேவையான மாற்றங்கள் மற்றும் மீள்உருவாக்குதல்கள் மட்டில் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கான தன் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

அடுத்து திருத்தந்தையைப்பற்றி நோக்கும்போது, அவர் கிறிஸ்துவை தியானித்து வணங்குகிற ஒரு மனிதனாக இருக்க வேண்டும். திருச்சபை வாழ்வியல் புற எல்லைகளுக்கு ஆன்மாக்களை தேடிச்செல்லும் சபையாக இருக்க அதற்கு உதவ வேண்டும். இவ்வாறுதான் திருச்சபையானது அனைவரையும் அன்புக்கரம் கொண்டு அணைக்கும் அன்னையாக விளங்க முடியும். இனிமையும் ஆறுதலும் தரும் நற்செய்தி அறிவிப்பின் மகிழ்ச்சியிலிருந்து வாழ்வினைப் பெற்றுக்கொள்ளும் திருச்சபையாக அதனை உருவாக்கக் கூடியவராக அவர் விளங்க வேண்டும்"

இந்த மூன்றரை நிமிட உரையானது மன்றத்தில் கூடியிருந்த அனைவரையும் இயக்கும் உரையாக மாறியது, "பிரமாதமான, தெளிவூட்டுகின்ற, சவால் விடுக்கின்ற, உண்மையான" வார்த்தைகளாக அமைந்திருந்தது. இந்த உரையாளரே இன்று நம் திருத்தந்தையாக தெரியப்பட்டுள்ளதையிட்டு நாம் இறைவனுக்கு நன்றிகூறுகின்றோம். எனவே நம் திருச்சபையை நற்செய்தியை அறிவிக்கும் சபையாக, வெளியேறிச் செல்லும் சபையாக...... இயேசுவின் மகிழ்ச்சியை உலகிற்குக் கொடுக்கும், இனிமையும், ஆறுதலளிக்கும் பண்பும் கொண்ட தாயைப்போல் புற எல்லைகளில் வாழ்வோரை தேடிச் செல்லும் சபையாக" மாற்ற நம் அன்பிற்குரிய திருத்தந்தை பிரான்சிஸ் பின்னால் அணிதிரள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# இலங்கை ஆயர்கள் - ஜனாதிபதி சந்திப்பு

## போர் முடிவுற்றாலும் மக்களின் மனங்களை இன்னும் வெற்றிகொள்ளவில்லை

### ஜனாதிபதியிடம் ஆயர்கள் தெரிவிப்பு



வடக்கு, கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த காணிகளை அதன் உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட தீர்மானத்தை வரவேற்றுள்ள கத்தோலிக்க ஆயர்கள், நாட்டில் 30 வருட கால யுத்தம் முடிவுற்றபோதும் மக்களின் மனங்களை வெற்றிகொள்ள இன்னமும் முடியாது போயுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான 9 மாகாணங்களைச் சேர்ந்த கத்தோலிக்க ஆயர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி அன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் வாழ்க்கை முறையை புனித பாப்பரசர் பாராட்டியதாகவும் இலங்கை ஜனாதிபதி தன்னைப் போன்றே வாழ்க்கைநெறிகளைக் கடைப்பிடிப்பதாக பாப்பரசர் தெரிவித்துள்ளதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறியதோடு பாப்பரசரின் இலங்கை விஜயத்தின்போது அரசு வழங்கிய ஒத்தழைப்புக்கும் நன்றிகளை தெரிவித்தார். மக்கள் நலன் கருதி ஜனாதிபதி எடுக்கும் முடிவுகள் அனைத்தையும் தாம் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற 30 வருடகால யுத்தம் முடிவடைந்தபோதும் மக்களின் மனங்களை வெற்றிகொள்வதற்கு இதுவரை முடியாது போயுள்ளதாகவும் இதற்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் கர்தினால் இதன்போது கூறியுள்ளார். இதேவேளை இங்கு கருத்துத் தெரிவித்துள்ள யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, வட கிழக்கு மக்களுக்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் திட்டங்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் இராணுவத்தின் கட்டுபாட்டிலிருந்த காணிகளை அதன் ஆரம்ப உரிமையாளர்களுக்கு வழங்க ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தைப் பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பதுளையில் மக்கள் எதிர்நோக்கும் மண்சரிவு அபாயங்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் பதுளை ஆயர் வின்சன்ட் பர்ணாந்து ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். இதன்போது உடனடியாக அரசாங்க அதிபர் மற்றும் உரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்ட ஜனாதிபதி இதனை நிவர்த்திசெய்வதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

# 19வது அரசியல் திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக

# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நிலைப்பாடு



**இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையானது, பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, வருகின்ற, முன்மொழியப்பட்ட 19வது அரசியல் திருத்தச் சட்டமூலமானது ஜனநாயக சோசலிச குடியரசு நாடான இலங்கையின் அரசியல் அமைப்பில் இடம்பெறுவதுபற்றி தமது நிலைப்பாட்டை எடுத்தியம்புகின்றது.**

19வது அரசியல் திருத்தச் சட்ட மூலமானது, நிறைவேற்று ஜனாதிபதியின் வரையறையற்ற அதிகார முறைமையை குறைத்து, ஜனநாயக முறைமையை நிச்சயப்படுத்தி சிறந்ததொரு அரசாங்கத்தை உருவாக்க, எமது தாய் நாடான இலங்கை சரியான பாதையில் செல்வதற்கு சிறந்ததொரு படிக்கல்லாக அமைகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் முன்மொழியப்பட்ட அரசியல் திருத்தச் சட்டமூலத்தில் 30வது வரைபில் குறிப்பிட்டுள்ள ஆணைக்குழுக்களுடன் பொதுமக்கள் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுக்கள் சுயாதீன ஆணைக்குழுக்களாகவும் மற்றும் அரசியலமைப்பு வாரியம் என்பன அமுல்படுத்தப்படுவது மிகவும் அவசியமானதொன்றாகும்.

அரசியல் அமைப்பிலிருந்து 18வது திருத்தச் சட்டமூலத்தை அகற்றுவது நாட்டின் நீதித்துறை தன்னிச்சையாக இயங்குவதற்கும், சட்ட திட்டங்களை நிலைநிறுத்துவதற்கும் வழிவகுக்கும்.

இலீங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது, டிசம்பர் 8ம் திகதி 2013 ஆண்டு வெளியிட்ட "எமது நாட்டின் மீள்நிர்மாணம் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி" (Towards Reconciliation and Rebuilding of Our Nation) என்ற மேய்ப்புப்பணிச் சுற்றுமடலில் இந்த நிலைபற்றி தெளிவாக எடுத்தியம்புகிறது.

ஆகவே, அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது கருத்தியல் வேறுபாடுகளை புறம்தள்ளி நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலன் கருதி நல்லதொரு ஆட்சியை உருவாக்கும் நோக்குடன் 19வது அரசியல் திருத்தச் சட்டமூலம் அறிமுகப்படுத்தும், அரசியலில் உருவாக்கும் மாற்றத்தை அங்கீகரிக்குமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வேண்டுகோள் விடுக்கின்றது. உயர் நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்டதுபோன்று இதில் ஏதாவது கூற்று பொதுஜன வாக்கெடுப்பிற்காக மக்கள் முன்னிலையில் வைக்கப்பட வேண்டுமானால் இந்த முறைமை பின்பற்றப்பட வேண்டும்.

எனவே, பொறுப்புள்ளவர்கள் எதுவித அச்சமுமின்றி, பொறுப்புணர்வோடு வெளிப்படையாகப் பேசக்கூடிய வழியில் முன்வைக்கப்பட்டு செயல்படுத்தப்படும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு உறுதியாக கேட்டுக்கொள்கின்றோம். இதனால் எமது எதிர்கால சந்ததியினர் உண்மையான ஜனநாயக சமூகத்தை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சிகளை பெறுமதிமிக்கதொன்றாகக் கருதுவார்கள்.

## புனித பிரான்சிஸ் அசிசி மறைபரப்புச் சபை

# புதிய அதி சிரேஷ்ட சகோதரர்

வணக்கத்துக்குரிய அருட்சகோதரர் ஜோஸ் வலியரா அவர்கள் புனித பிரான்சிஸ் அசிசி மறைபரப்பு சபையின் அகில உலகின் சிரேஷ்ட தலைவராக இந்திய மைசூரியில் நிகழ்ந்த மாநாட்டில் தெரிவுசெய்யப்பட்டார்.

அருட்சகோதரர் ஜயராஸ் அருளானந்தம் - இலங்கை மாகாணத் தலைவர், அருட்சகோதரர் ஜெ. செல்வநாயம் - உப தலைவர், அருட்சகோதரர் ஜோசப் கிறிஸ்டி மற்றும் அருட்சகோதர் செபஸ்தியான் ஜோர்ஸ் ஆகியோர் இலங்கை சார்பாக பிரதிநிதிகளாக இம்மாநாட்டில் சமூகளிமளித்தனர்.

**தகவல் : அருட்சகோதரர் தோமஸ் ஜோசப் ஜஸ்டஸ், புனித அசிசியார் மறைபரப்பு சபை.**

# கிழக்கைப் பழிவாங்கும் தமிழ்த் தலைமைகள்!

### ஆதங்கத்தில் மட்டு ஆயர்



தலைமைப்பீடத்தில் உள்ளவர்கள் மட்டக்களப்பை ஒதுக்கிவைக்கும் மனபீபான்மையைத்தான் நான் உணருகின்றேன். இலங்கைக்கு வரும் எல்லாரையும் வடக்கிற்குத்தான் கூட்டிச்செல்கிறார்களே தவிர கிழக்கிற்கு கூட்டி வருவது குறைவு.

பலர் நினைக்கின்றார்கள் மட்டக்களப்பில் ஒன்றும் நடக்கவில்லை, மட்டக்களப்பு மக்கள் பாதிக்கப்படவில்லை, யுத்தமே நடக்கவில்லை என்று. ஆனால் மட்டக்களப்பில்தான் யுத்தம் ஆரம்பத்தில் தொடங்கியது. முதன் முதலில் மட்டக்களப்புதான் பாதிக்கப்பட்டது. அதன் பின்புதான் மற்ற இடங்களில் யுத்தம் தொடர்ந்தது. இதை யாரும் பொருட்படுத்துவதில்லை. எங்களுடைய அரசியல்வாதிகள் இதைப்பற்றிச் சிந்திப்பதாயில்லை. கதைப்பார்கள், ஆனால் ஒன்றும் நடப்பதில்லை.

எங்களைப் பொறுத்தவரை நல்ல தலைவர்கள் இல்லை. எல்லாரும் தங்களது அரசியல் சுயலாபத்திற்காகத்தான் அரசியலில் ஈடுபடுகிறார்களே தவிர மக்களுக்கு சேவையாற்றவில்லை என மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

# வத்திக்கானில் தாக்குதல் நடத்த அல்குவைதா அமைப்பு சதி



வத்திக்கானில் தீவிரவாதத் தாக்குதல் நடைபெறவிருந்தவேளை அதனைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர். இத்தாலியின் வடக்குப் பகுதியில் உள்ள பெர்காமோ நகரில் மதத்தலைவர் வீடு ஒன்றில் சிலர் பதுங்கியிருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்துசென்ற பொலிஸார், வீட்டை முற்றுகையிட்டு அங்கிருந்த 18 பேரையும் கைது செய்துள்ளனர். அவர்கள் அனைவரும் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களுக்கு அல்குவைதா தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலையில் இது தாக்குதலுக்கான ஆதாரம் அல்ல என்றாலும் தாக்குதலுக்கான சதித் திட்டம் என்பதில் பலத்த சந்தேகம் இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கல்முனை மாணவர் மீட்புப் பேரவையினருக்கும் மன்னார் ஆயருக்கும் இடையில் விசேட சந்திப்பு

## அம்பாறை மாவட்ட குறைபாடுகள் தொடர்பில் விரிவான பேச்சு

கல்முனை மாணவர் மீட்புப் பேரவையினருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகைக்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

மாணவர் மீட்புப் பேரவையின் தலைவர் பொறியிலாளர் எஸ். கணேஷ் தலைமையில் சென்ற இக்குழுவினர் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் அவற்றை நிவர்த்திப்பதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகள்பற்றி விரிவாக கலந்துரையாடினர்.

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்படாமல் காணப்படும் மீள்குடியேற்ற நடவடிக்கைள், காணாமல்போனோர் சம்பந்தமான தற்போதைய நிலைமை, அம்பாறை மாவட்டத்தில் இந்திய வீட்டுத்திட்டம் நிர்மாணிப்பு என பல்வேறு சமூக, சமய, தற்கால மக்கள் சூழ்நிலை பற்றிய விடயங்கள் மாணவர் மீட்புப் பேரவையின் தலைவரினால் மன்னார் மறைமாவட்ட ஆயரிடம் முன்வைக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த மன்னார் மறைமாவட்ட ஆயர், நமது மக்கள் கடந்த காலங்களில் பல்வேறான இன்னல்களையும் இழப்புக்களையும் பாரியளவில் சந்தித்தவர்கள். அவர்களுக்கு இனிவரும் காலங்களில் நிம்மதியாகவும் சமாதானச் சூழ்நிலையிலும் வாழ்வதற்கான ஏற்பாடுகளை சமூக மட்டத்திலுள்ள முக்கியஸ்தர்கள் செய்துகொடுக்கவேண்டியது காலத்தின் தேவையாகும். இதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும்பொருட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடவேண்டியதுடன் அதற்கான நடவடிக்கைகளும் விரைவில் மேற்கொள்ளப்பட முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

அதற்கமைவாக அடுத்துவரும் மே மாதம் நடுப்பகுதியில் நான் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம்செய்து, மக்களை நேரடியாகச் சந்திக்கவுள்ளதுடன், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக மட்ட முக்கியஸ்தர்களையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வு ஆண்டு

## மாதம் ஒரு துறவற சபையைப் பற்றி அறிந்துகொள்வோம்


மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் ஒவ்வொரு துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை ஒவ்வொரு மாத மன்னாவிலும் இடம்பெறும்

## டிலாசால் அருட்சகோதரர்கள் என அறியப்படும்

## கிறிஸ்தவப் பாடசாலைகளின் அருட்சகோதரர்கள்

கட்டுரை ஆக்கம் உ அருட்சகோ. டென்ஸில் பெரேரா. முன்னாள் மாகாணத் தலைவர்

கிறிஸ்தவப் பாடசாலைகளில் பணிபுரியும் கிறிஸ்தவ அருட்சகோதரர்களின் (டிலாசால்) நிறுவுனர்! ஆசிரியர்களின் பாதுகாவலர்!



**நிறுவுனர் பெயர்** :- தூய ஜோண் பப்ரிஸ்ட் டிலாசால்

**சபையின் பெயர்** :- கிறிஸ்தவப் பாடசாலைகளின் அருட்சகோதரர்கள் (டிலாசால் அருட்சகோதரர்கள்)

**நிறுவுனரின் இறையருட் கொடை** :- கிறிஸ்வக் கல்வி, இளைஞர்கள், ஏழை இளைஞர்களுக்கான வழிகாட்டுதலில் முழுமையான அர்ப்பணிப்பும் இறை நம்பிக்கையும், சபையின் ஆக்கமும்.

**இலங்கையில் முதன் முதலில் ஆரம்பித்தது** :- புனித பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு – 13 (1867)

**பாடசாலைகளும் ஏனைய நிறுவங்களும்**

**கொழும்பு மறைமாவட்டம்** :-
டிலாசால் மாகாணத் தலைமையகம், கொழும்பு - 15.
புனித பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு -13.
டி மசனற் கல்லூரி, கந்தானை
புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு -14.
டியகலை இளைஞர் நகர், இராகம
லசாலியன் கல்வி சேவைகளின் குழுமம் (LCEC) கொழு. 15

**ஆன்மீக உருவாக்கல் நிறுவனம்**
ISFA கொழும்பு -15
லசாலிய நிறுவனம் (La Salle Institute) கொழும்பு -13.

**மன்னார்** :-
புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, மன்னார்.
புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம், வங்காலை.
நானாட்டான் மத்திய மகா வித்தியாலயம், நானாட்டான்.
கருங்கண்டல் றோ.க. தமிழ் மகா வித்தியாலயம்.
புனித பத்திமா மத்திய மகா வித்தியாலயம், பேசாலை.
லசாலிய சிறுவர் வளாகம் (La Salle Kids Campus).

**குருநாகல்** :- புனித ஆனாள் கல்லூரி

**கண்டி** :- விவசாய பயிற்சி நிலையம் (Agro Training Center), நுவரெலியா.

**தற்போதைய சபையின் மாகாணத் தலைவர்** :- அருட்சகோதரர் கிறிஸ்ரி குரூஸ் (FSC)

**தலைமையகம்** :-
130, டிலாசால் வீதி, முகத்துவாரம், கொழும்பு -15.

**விசேட மறைபணி** :- இளைஞர்களின் கல்வி வழிகாட்டல் (முன்றசார் / முறைசாரா கல்வி முறைமைகள்)

### வரலாறு :

தற்போதைய உலகைவிட மாறுபட்ட உலகில் புனித ஜோண் பப்ரிஸ்ட் டிலாசால் 300 வருடங்களுக்கு முன்னர் செல்வந்த குடும்பத்தில் பிரான்சில் உள்ள அழகிய 'றீம்ஸ்' நகரில் பிறந்தார்.

தமது பெற்றோரின் மரணத்தின் பின்னர் தமது குடும்பத்தின் முழுப்பொறுப்பையும் அவரே சுமந்துகொண்டார். இறையியல் கற்கைநெறிகளை முடித்த பின்னர் ஏப்ரல் திங்கள் 9ம் நாளில் 1678ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இரு வருடங்களின் பின்னர் இறையியலில் கலாநிதிப்பட்டத்தை பெற்றுக்கொண்டார். இச்சமயத்தில் வறிய பிள்ளைகளுக்கென பாடசாலையை அமைக்கும் உள்நோக்குடன் மிலேச்சத்தன்மை வாய்ந்த, கல்வியறிவற்ற இளைஞர்களுடன் ஈடுபாடுகொண்டு விளங்கினார்.

அக்காலத்தில் பிரான்சிய நாட்டவர்கள் சிலர் செல்வந்தர்களாகவும் வசதி மிக்கவர்களாகவும் வாழ்ந்துவர, பலர் மிக வறியவர்களாகவும் சமூகத்தின் அடிமட்டத்தினராகவும் சேரிப்புறங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்து வந்தனர். இவர்களுள் கணிசமானவர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவைத்தனர். இவர்களில் ஒருசிலர் தம் பிள்ளைகளின் எதிர்காலம்பற்றி சிறிதளவு நம்பிக்கை கொண்டோராய் இருந்தனர்.

தூய டிலாசால் இவ்வுலகிலோ மறுவுலகிலோ மீட்பிற்கு வெகுதூரத்தில் வாழ்ந்துகொண்டிருந்த இந்த ஏழை மக்களின் இன்னல்களை உணர்ந்தவராகவும் அவர்களுக்கே பணியாற்ற வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவராகவும் விளங்கினார். தமது திறமைகளையும் கல்வித் தகைமையினையும் கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு கல்விபுகட்டும் பணிக்காக அர்ப்பணித்தார்.

தமது நற்பணி சிறக்கவேண்டுமென்று தனது சொந்த இல்லத்தையும் குடும்பத்தினரையும் திருச்சபையில் தமக்கிருந்த பதவியையும் செல்வத்தையும் கைவிட்டு ஆசிரிய குழாமுடன் ஒரு குழுமத்தை உருவாக்கினார். இவர்களே பின்னர் கிறிஸ்தவ பாடசாலைகளின் அருட்சகோதரர்களாக மாற்றப்பட்டனர்.

புதியதொரு துறவற வாழ்வுமுறை அதாவது தமது இலவச பாடசாலைகளை வழிநடத்த "இணைந்தும் இணைக்கப்பட்டும்" என்ற விருதுவாக்குடன் உருவாக்கப்பட்ட 'அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினரின் திருக்குழுமம்' என்ற இவரது புதுமுயற்சி திரு அவையின் அதிகாரிகளிடத்தில் எதிர்ப்பினைச் சந்திப்பதற்கு ஏதுவாயிற்று. தூய டிலாசாலினால் தோற்றுவிக்கப்பட்ட இலவச புதிய கல்விமுறைகள் அதாவது கட்டணம் செலுத்தி கற்கக்கூடிய மாணவர் அல்லது அல்லாதவர் அனைவருக்கும் உகந்த கல்வி முறைமையாக இது அமைந்தமையினால் இந்த எதிர்ப்பு வந்தது.

எப்படியிருப்பினும் தூய டிலாசாலும் அவரது அருட்சகோதரர்களும் தொடர்ந்தும் பிரான்சில் திறமையான கல்விப் பாடசாலைகளை நிறுவினர். இப்பாடசாலைகளில் தாய்மொழி மூலமான கற்பித்தல்கள், மாணவரது திறமைக்கு ஏற்றபடியான குழும முறைகள், ஏற்பு முறையிலமைந்த மத வழிகாட்டல்கள், பாட வழிகாட்டல்கள் இங்கு இடம்பெற்றிருந்தன. இறையழைத்தல் பணிவாழ்வு பற்றிய சிந்தனைகொண்டு நன்கு தயார்படுத்தப்பட்ட ஆசிரியர்களும் பெற்றோர்களும் இப்பள்ளிகளில் காணப்பட்டனர்.

தூய டிலாசால் பொதுநிலை ஆசிரியர்களை வழிநடத்திய முதல் முயற்சியாளர் ஆவார். பணிபுரியும் இளைஞர்களுக்கென ஞாயிறுதின பாடநெறிகளையும் தமது கடமைகளில் இருந்து கவனயீனமாகத் தவறுவோருக்கென பிரான்சில் முதன் முறையாக ஒரு நிறுவகத்தையும் நிறுவிப் பராமரித்து வந்தார்.

தளராத புண்ணியத்தாலும், ஓயாத பணியாலும் களைப்புற்று உடல்நலம் குன்றியவராக 1719ம் ஆண்டு ஒரு பெரிய வெள்ளியன்று அதாவது தமது 68வது வயது பூர்த்தியாக இரு வாரங்கள் இருக்குமுன்னர் றொவான் எனும் இடத்திற்கு அருகிலுள்ள புனித ஜொண் (Saint Yon) இல் தன்னுயிர் நீர்த்து இறைபதம் அடைந்தார்.

தூய டிலாசால் ஆசிரியருக்கான பயிற்சிக் கலாசாலைகளையும், சமூகக் கடமையில் தவறுவோர்க்கென சீர்திருத்தப்பள்ளிகளையும், தொழில்நுட்பக் கல்லூரிகளையும், விஞ்ஞானம் தற்கால மொழிகளுக்கென இடை கலைத்துறைநிலைக் கல்வி நிறுவனங்களையும் நிறுவிய முதல் முயற்சியாளர் எனலாம்.

டிலாசாலின் இப்புனித சேவையானது பிரான்ஸ் நாடு முழுவதும் பரவியதுடன் மரணத்தின் பின்னர் உலகம் முழுவதும் வெகுவாக விஸ்தரிக்கப்பட்டது. 1900இல் டிலாசால் தூயவராக உயர்த்தப்பட்டார். இவரது உதாரணமிகு எளிமை வாழ்வினாலும் ஆர்வமுள்ள எழுச்சிமிக்க படைப்புக்களாலும் 1950இல் கல்வி கற்பிக்கும் அனைத்து அமைப்புக்களிலும் செயற்படும் அனைவரதும் பாதுகாவலராக 1950ம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டார்.

கல்வி அமைப்பு முறைகளில் பணிபுரிவோர் தம் சேவையினைத் திறம்படச் செய்வதற்கு அகத்தூண்டலாக தூய டிலாசால் விளங்கி வருகிறார். வெற்றியையும் வலுவின்மையையும் பரிவுடன் நோக்குவதோடு அதன் விளைவுகளை ஏற்றுக்கொண்டு குணம் பெறுவதனாலும் எமக்கு உணர்த்தும் ஒரு அகத்தூண்டலாக விளங்கிவருகின்றார்.

தற்போது டிலாசால் அருட்சகோதரர்கள் தமது பணியினை 80 நாடுகளுக்கும் அதிகமான இடங்களில் ஆற்றிவருகின்றனர். இலங்கையில் 55 அருட்சகோதரர்கள் ஒன்பது துறவற குழுமங்களிலும் மூவர் இறை அழைத்தல் பயிற்சி மடங்களிலும் வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் 13 பிரதான நிறுவனங்களிலும் (முறைசார் / முறைசாரா கல்விமுறைகள்), 03 இறையழைத்தல் பயிற்சி மடங்களிலும் ஏனைய சிறு நிறுவனங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர். எமது பணிவாழ்வை நாம் 850 பொதுநிலைப் பங்காளிகளுடன் பகிர்வதுடன் 15,700 பள்ளி மாணவர்கள் எம்மால் வழிநடத்தப்பட்டு வருகின்றனர்.

## மன்னார் ஆயர் இல்லத்திற்கு வருகைதந்த முக்கியஸ்தர்கள்

கடந்த மாதங்களில் சில முக்கியஸ்தர்கள் மன்னார் ஆயர் இல்லத்திற்கு வருகை தந்து மன்னார் மாவட்ட நிலமைகள் குறித்து மன்னார் ஆயருடன் கலந்துரையாடியிருந்தனர்.

இலங்கை தேசிய ஒலிம்பிக் சம்மேளனத்தின் திரு. மெக்ஸ்வெல் டி சில்வா, பிரதி சுகாதார அமைச்சர் ஜனாப் ஹசன் அலி, சட்டம் மற்றும் ஒழுங்கு கிறிஸ்தவ விவகார அமைச்சர் திரு. யோன் அமரத்துங்க, இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகர் திருமதி றொபின் முர்டியோ ஆகியோரே ஆயர் இல்லத்திற்கு வருகைதந்த முக்கியஸ்தர்கள் ஆவர்.

## வவுனியா மறைக்கோட்ட திருப்பாலத்துவ சபை யூபிலி விழா

மன்னார் மறைமாவட்டத்தில் திருப்பாலத்துவ சபை ஏற்படுத்தப்பட்டு 25 ஆண்டு நிறைவு யூபிலி விழாவை வவுனியா மறைக்கோட்டப் பங்குகளின் திருப்பாலத்துவ சபையினர் இணைந்து கொண்டாடினர். இந்த யூபிலி விழா கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை இடம்பெற்றது. வவுனியா மறைக்கோட்ட பங்குகளின் பங்குத்தந்தையர்கள், திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள், சிறார்கள் ஆகியோரால் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்விற்கு மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணி. ஏ. யூட் குரூஸ் அடிகளார் தலைமைதாங்கினார். பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ.விக்ரர் சோசை அடிகளாரும், சிறப்பு விருந்தினராக மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபையின் ஆரம்பகால இயக்குனர் அருட்பணி. சூசைப்பிள்ளை அடிகளாரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

## வாழ்வுதயத்தின் சீட்டிழுப்பு முடிவுகள்

"கறிற்றாஸ் வாழ்வுதய உதவிக்கரப் பிரிவிற்கான உள்ளூர் நிதி சேகரிப்பு" முயற்சியாக அதிஷ்ட இலாபச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டன.

இதன் மூலம் வாழ்வுதயத்தின் உதவிக்கரப் பிரிவிற்கு ரூபா. 491,200.00 ( நான்கு இலட்சத்து தொண்ணூற்ரோராயிரத்து இருநூறு ரூபா) சேகரிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சிக்கு உதவிய பங்குத்தந்தையர்களுக்கும் பங்கு மக்களுக்கும், ஏனையவர்களுக்கும் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. எம். ஜெயபாலன் அடிகளார் நன்றி தெரிவிக்கின்றார்.

இந்தச் சீட்டிழுப்பு வாழ்வுதய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கின் பிற்பாடு நடைபெற்றது. இதில் வெற்றிபெற்றவர்களின் விபரம் கீழே தரப்படுகின்றது;

**முதல் பரிசு – குளிர்சாதனப் பெட்டி**
அருட்பணி. சவுல்நாதன், பெரிய பண்டிவிரிச்சான், மடு

**இரண்டாம் பரிசு – சலவை இயந்திரம்**
நியூ யுப்பிற்றர் என்ரபிறைசஸ், வாழ்.கொம்பிளைக்ஸ், மன்னார்

**மூன்றாம் பரிசு – மின் அடுப்பு**
செல்வி. றொசிற்றா மார்க், வட்டாரம் 10, வங்காலை

**ஆறுதல் பரிசுகள் - றைஸ் குக்கர்**
1. எம். சுபக்ஷனா, தெற்கிலுபைக்குளம், வவுனியா.
2. திருமதி. டி. புனிதா, வண்ணாங்குளம், முல்லைத்தீவு.
3. செல்வி. என். டிவினா, வட்டாரம் 02, வங்காலை.
4. திரு. எல். றோகித், இல 255, மூர் வீதி, மன்னார்.
5. திரு. வினோகரன், மணற்குழி, முல்லைத்தீவு.

## கார்மேல் அருட்சகோதரிகளின் கல்விச் செயலமர்வு



அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சார்ந்த இளம் ஆசிரிய அருட்சகோதரிகளுக்கான கருத்தமர்வு ஏப்ரல் மாதம் 15ம் திகதி தொடக்கம் 17ம் திகதிவரை மடு தியான இல்லத்தில் இடம்பெற்றது. 39 அருட்சகோதரிகள் பங்குபற்றிய இக்குழுவினரை இச்சபையின் மாகாண கல்வி ஆலோசகர் அருட்சகோதரி தெரேஸ் ராணி தலைமைதாங்கி வழிநடத்தினார்.

இதில் மாணவர் நலன் பேணல், கல்விக் களத்தில் எதிர்கொள்ளும் சவால்களும் வாய்ப்புக்களும், ஆசிரிய பணியின் மேன்மை, ஆசிரியர் விடுமுறை பற்றிய விளக்கம், மகிழ்ச்சிகரமான கற்பித்தல் ஆகிய தலைப்புக்களில் செயல் அமர்வுகளும், அனுபவப் பரிமாற்றங்களும், சிறப்புச் சொல்லாடல்களும் இடம்பெற்றன. நிறைவாக மாகாணத் தலைவி அருட்சகோதரி எம். சுனித்தா அவர்களின் வலுச்சேர்க்கும் சிறப்புரையுடன் செயலமர்வு இனிதே நிறைவுற்றது.

மடு அன்னையின் ஆசீரும் சூழமைவும் இந்நிகழ்வுக்கு மகிழ்வும் சிறப்பும் சேர்த்தமை குறிப்பிடத்தக்கது. அருட்சகோதரிகள் அன்னையின் ஆசீர் பெற்றவர்களாய் தம் பணித்தளம் நோக்கிப் பயணித்தனர்.

**தகவல்:** அருட்சகோதரி எம். வசந்தி, கார்மேல் கன்னியர் இல்லம், அடம்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# புனித அவிலா திரேசா செபத்தின் ஆசிரியர்

### அவிலா நகர் புனித தெரேசாவின் 500ம் ஆண்டு நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ்

தன்னையே முழுமையாகக் கடவுளுக்கு அர்ப்பணித்த புனித அவிலா தெரேசாவின் வாழ்வு, இக்காலத்தின் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வைப் புதுப்பிப்பதற்கு உதவுகின்ற மாபெரும் சொத்து என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். பங்குனி 28, சனிக்கிழமையன்று அவிலா நகர் புனித தெரேசா அவர்கள் பிறந்ததன் 500ஆம் ஆண்டு நிறைவு சிறப்பிக்கப்பட்டதை முன்னிட்டு, காலணி அணியாத அனைத்துலக கார்மேல் சபைத் தலைவர் அருள்பணி. சவரியோ கனிஸ்ரா (Saverio Cannistra) அவர்களுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

புனித அவிலா தெரேசா, முதலில் செபத்தின் ஆசிரியர் என்று விவரித்துள்ள திருத்தந்தை, புனித அவிலா தெரேசாவின் செபம் ஒரு காலத்துக்கு, ஒரு கட்டத்துக்கு மட்டும் ஏற்றது அல்ல, மாறாக, இச்செபம் பல்வேறு தருணங்களில் செபிக்கப்படுகிறது. இப்புனிதர் இடைவிடாச் செபத்தில் அசையாத பற்றுறுதி கொண்டிருந்தார் என்று திருத்தந்தை கூறியுள்ளார். ஆன்ம வறட்சிக் காலத்திலும் வாழ்வில் துன்பங்களை எதிர்கொள்ளும்போதும் நாம் செபத்தில் உறுதியாய் இருக்குமாறு அழைப்புவிடுக்கும் இப்புனிதர் உண்மையான குழுவாழ்வின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறார்.

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு கடைப்பிடிக்கப்படும் இவ்வாண்டில் இப்புனிதர் பிறந்ததன் 5ம் நூற்றாண்டு நிறைவு சிறப்பிக்கப்படுவது பொருத்தமாக உள்ளது. கடந்த காலத்தை நன்றியோடு திரும்பிப் பார்த்து, சபைகளை ஆரம்பித்தவர்களின் உள்தூண்டுதல்களைக் கண்டுணருவதற்கு இந்நிகழ்வு



நல்லதொரு தருணமாக உள்ளது என்று திருத்தந்தை கூறியுள்ளார். ஸ்பெயின் நாட்டின் அவிலாவில் 1515ம் ஆண்டு மார்ச் 28ம் திகதி பிறந்த புனித தெரேசா 'தியான யோகி' மற்றும் 'கார்மேல் சபையைச் சீர்திருத்தியவர்' 'இயேசுவின் தெரேசா' எனவும் அழைக்கப்படும் இப்புனிதரை 1970ம் ஆண்டில் திரு அவையின் மறைவல்லுனராக அறிவித்தார் முத்திபேறுபெற்ற திருத்தந்தை 6ம் பவுல். மிகவும் புகழ்பெற்ற The Interior Castle என்ற ஆன்மீக நூல் உட்பட பல கிறிஸ்தவ ஆன்மீக மற்றும் தியானயோக நூல்களை புனித அவிலா தெரேசா எழுதியுள்ளார்.

## புத்த பூர்ணிமா

### திருப்பீடம் வெளியிட்டுள்ள செய்தி




மே மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ள 'புத்த பூர்ணிமா' என்றழைக்கப்படும் சேவாக் திருநாளை முன்னிட்டு உலகின் புத்த மதத்தினர் அனைவருக்கும் தன் வாழ்த்துச் செய்தியை திருப்பீடம் வெளியிட்டுள்ளது.

மதங்களிடையேயான பேச்சுவார்த்தைகளுக்கான திருப்பீட அவை புத்த மதத்தினர் அனைவருக்காகவும் வெளியிட்டுள்ள இச்செய்தியில் கௌதம புத்தரின் பிறப்பு, ஞானமடைதல் மற்றும் இறப்பை நினைவுகூரும் இந்நாளில், துன்புறுவோர் மற்றும் ஏழைகளின் துயர் துடைப்பதற்கான நம் அர்ப்பணத்தை மீண்டும் புதுப்பிப்போம் என விண்ணப்பிக்கிறது.

இன்றைய உலகில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டுள்ள போதிலும், இன்றும் பல ஆயிரக்கணக்கான மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, அடிமைகள்போல் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதைக் காணும் நாம், அவர்களுக்காக ஒன்றிணைந்து உழைக்க முன்வரவேண்டும் எனத் தன் வாழ்த்துச் செய்தியில் இத்திருப்பீட அவை அழைப்பு விடுத்துள்ளது.

அறியாமையினாலும் சுரண்டல்களாலும் மனம் ஊனமடையும்போதே மனிதர்களை மாண்புடன் நடத்தாத நிலை ஏற்படுகின்றது என்று குறிப்பிடும் திருப்பீட வாழ்த்துச்செய்தி, மனித வியாபாரமும் அடிமைத்தனமும் நீதிக்கு புறம்பானவை என்பதில் உறுதியாக இருக்கும் மதங்கள் இவ்விடயத்தில் ஒன்றிணைந்து உழைக்க முன்வரவேண்டும் எனவும் அழைக்கிறது.

புத்த மதம் எப்போதும் வாழ்விற்கான மதிப்பையும், தனிமனிதச் சுதந்திரத்தையும் ஊக்கமளித்து வளர்க்கிறது எனப் பாராட்டும் திருப்பீடத்தின் செய்தி, உலகின் தீமைகளைக் களைய, புத்த மதத்தினரும், கிறிஸ்தவர்களும் தங்கள் அர்ப்பணங்களைப் பலப்படுத்தி ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என அழைக்கிறது.

# எத்தியோப்பிய கிறிஸ்தவர்கள் 30 பேர் ஐ.எஸ். சினால் படுகொலை



லிபியாவில் எதியோப்பியக் கிறிஸ்தவர்கள் 30 பேரை படுகொலை செய்யும் காட்சிகள் அடங்கிய வீடியோ தொகுப்பு ஒன்றினை ஐ. எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.

இவ்வீடியோவில் கடற்கரையொன்றில் சிலர் சிரச்சேதம் செய்யப்பட்டும், பாலைவனம் ஒன்றில் வேறு சிலர் தலையில் துப்பாக்கியால் சுட்டும் கொலைசெய்யப்படும் காட்சிகள் அடங்கியுள்ளன. இவ்வாறு கொலைசெய்யப்பட்டவர்கள் லிபியாவில் ஐ. எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடைய போராளிகளினால் கடத்தப்பட்ட எதியோப்பிய திருச்சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் என நம்பப்படுகின்றது.

கடந்த பெப்ரவரியில் 21 எகிப்தியக் கிறிஸ்தவர்களைப் படுகொலை செய்யும் காட்சிகள் அடங்கிய வீடியோவினை ஐ. எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டிருந்தனர். இந்நிலையில் புதிதாக வெளியிடப்பட்ட வீடியோவும் அதனையொத்ததாக அமைந்துள்ளது. 29 நிமிடங்கள் நீளமுடைய இந்த வீடியோ இஸ்லாமியத் தீவிரவாதிகளான ஐ. எஸ். அமைப்பின் ஊடகப்பிரிவின் உத்தியோகபூர்வ முத்திரையையும் கொண்டுள்ளது. ஆனாலும் இந்த வீடியோவின் உண்மைத்தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இவ்வீடியோவில் உள்ளவர்களை அடையாளம் காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எதியோப்பிய அரசாங்கம் அறிவித்துள்ளதுடன், இக்கொலைகள் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் என்றும் தான் அவற்றை வன்மையாகக் கண்டிப்பதாகவும் எத்தியோப்பிய தகவல்துறை அமைச்சர் ரெட்வான் குசைன் கூறியுள்ளார். இதேவேளை அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இப்படுகொலையை வன்மையாகக் கண்டித்துள்ளன. லிபியாவில் தொடரும் மோதல்களுக்கான முடிவினைக் கொண்டுவருவதற்குரிய அரசியல் தீர்வுக்கான அவசிய முயற்சிகளை இந்நடவடிக்கை சீர்குலைந்திருப்பதாக அமெரிக்க தேசிய பாதுகாப்புப் பேரவை பேச்சாளர் மீகான் கூறியுள்ளார்.

## புனித குழந்தை தெரேசாவின் பெற்றோரும் புனிதர்நிலை பெறுகின்றனர்



லிசியக்ஸ் (Lisieux) நகர் குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின் பெற்றோர் லூயிஸ் மார்ட்டின் மற்றும் மரியா மார்ட்டின் ஆகிய இருவரையும் புனிதர்களென உயர்த்தும் அறிக்கையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

புனிதர் படிநிலைகள் பேராயத்தின் தலைவர் கர்தினால் ஆஞ்செலோ அமாத்தோ அவர்களைத் திருப்பீடத்தில் சந்தித்தத் திருத்தந்தை தம்பதியரான லூயிஸ் மார்ட்டின் மற்றும் மரியா மார்ட்டின் ஆகியோரின் பரிந்துரையால் நிகழ்ந்த ஒரு புதுமையை அங்கீகரித்து இவ்விருவரையும் புனிதர்களாக உயர்த்தும் அறிக்கையை வெளியிட்டார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித பிலிப்பு நேரி

(குரு - (கி.பி. 1513 - 1595)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் இத்தாலியில் புளோரன்ஸ் நகரில் பிறந்தவர். 26 வயது நடக்கும்போது வணிகத் தொழிலை விட்டுவிட்டு, தமது ஆன்மீக நலனைக் குறித்தும் மற்றவர்களின் ஆன்மீக ஈடேற்றத்தை முன்னிட்டும் உரோமை நகர் சென்றடைந்தார். தத்துவக்கலை, வேதக்கலை பயின்றதோடு, செபத்திலும் தவமுயற்சிகளிலும் தம்மை மிகவும் ஈடுபடுத்திக்கொண்டார். அந்நாளில் 12 மைல் சுற்றளவில் இருந்த புகழ்மிக்க ஏழு தேவாலயங்களையும் மாலையானதும் நடந்தே சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டு, இரவில் புனித செபஸ்ரியாரின் புதைகுழி வளாகத்தில் தங்குவார்.

மேலும் நலிவுற்ற மக்களின் நலன்களைக்கருதி மருத்துவமனைகளில் நோயாளிகளைச் சந்திப்பார். தெரு வழியாகச் செல்லும்போது ஆன்மீகத்தில் அக்கறையற்றவர்களை இனங்கண்டு, தமது திறமையான பேச்சினாலும் அணுகுமுறைகளினாலும் அவர்கள் இறைவன் பக்கம் மனம்மாறச் செய்வார்.

இந்த அனுபவமானது, கி.பி 1548ல் தமது குறிக்கோளை ஏற்றுக்கொண்டவர்களை ஒருங்கிணைக்கவும், திவ்விய நற்கருணை ஆராதனை பக்திமுயற்சிகளைத் தொடங்குவதற்கும் புனிதரைத் தூண்டியது. இவ்வாறு 10 ஆண்டுகள் உருண்டோடின. இவரின் ஆன்ம குரு இவரைக் குருத்துவத்தை நாடப் பணித்தார். குருப்பட்டம் பெற்றபின் 33 ஆண்டுகளாக ஒரட்டரி என்று அழைக்கப்படும் செபக்குழுவைப் பல குருக்களைச் சேர்த்துக்கொண்டு நடத்தினார். ஏராளமான ஞானப்பயன் கிடைப்பதைக் கண்டு மகிழ்ந்தார் இவர்களே ஒரட்டோரியன்ஸ் "ஜெபக் குழுவினர்" என்று இந்நாள்வரை போற்றப்படுகின்றனர். நாள்தோறும் இவரிடம் ஒப்புரவு அருட்சாதனம் பெறவும், ஆன்மீக ஆலோசனை பெறவும், தொழிலாளர் பலர் பணிகளை முடித்தபின் வந்தவண்ணம் இருந்தனர். கர்தினால்கள் பலரும் குருக்களும் இவரது ஆலோசணையை நாடி வந்தனர். இவர் திருப்பலி நிறைவேற்றும்போதெல்லாம் பரவசத்தில் ஆழ்ந்துவிடுவார். இளைஞர்கள் பலரை ஆன்மீக வாழ்வுக்குக் கொண்டுவந்து சேர்த்தார். எப்போதும் மகிழ்ச்சியாயிருக்கவும், ஆழமான இறை அனுபவம், தாழ்ச்சி, ஒறுத்தல் ஆசைகளைக் கட்டுப்படுத்துதல், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறுதல் ஆகியவற்றில் தம்மிடம் வந்தவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

இளைஞர் ஒருவர் திவ்ய நன்மை உட்கொண்ட உடனே தன் அலுவலகத்திற்கு விரைவாகப் போய்விடுவார். ஒருமுறை இவரது குற்றத்தை உணர்த்தும் முகமாக பூசைக்கு உதவிசெய்யும் சிறுவர் இருவரிடம் எரியும் மெழுகுவர்த்திகளைக் கொடுத்து "இந்த இளைஞரின் பின்னால் ஓடுங்கள்" என்றார். இளைஞரும் தம் குற்றத்தை இதன்மூலம் உணர்ந்து திருத்திக்கொண்டார்.

சிலருக்கு மற்றவர்களின் நற்பெயரைக் கெடுக்கும் பழக்கம் இருந்ததைக் கண்டு, அவர்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டார்.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 41.



## பாரமுமல்ல, பரிதாபத்துக்கு உரியவர்களுமல்ல!

*வயதான பெற்றோர்*

வயதான தாய் படுக்கையில் உறைந்துபோனதால் தன் தாய் பாரமாகிவிட்டாள் என ஒரே மகனான அகிலன் உணர்ந்தான். அதுவும் அவள் ஞாபக மறதியினால் கேட்டதையே மீண்டும் மீண்டும் கேட்பதால் அவளின் கேள்விகளுக்கு பதில் கூறுவதில் மகனுக்குக் களைப்பு ஏற்படுவதாக உணர்ந்தான். ஒருதடவை குழந்தைகள் வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தார்கள். அகிலனின் தாயோ மகனிடம், “தம்பி, என்ன சத்தமாயிருக்கு?” எனக் கேட்க அவன், “பிள்ளைகள் விளையாடுகிறார்கள்!” என்றான். ஐந்து நிமிடங்கள் கழிந்த நிலையில் இரண்டாம் தடவையாக, “தம்பி, என்ன சத்தமாயிருக்கு?” எனக் கேட்க மகன், “பிள்ளைகள் விளையாடுதுகள் எண்டு சொன்னது விளங்கல்லையா?” எனக் கேள்விக்குக் கேள்வியைப் பதிலாகச் சொன்னான். மேலும் ஒரு பத்து நிமிடங்கள் கடந்த பின்னர், மூன்றாம் முறையாக, “தம்பி, என்ன சத்தமாயிருக்கு?” எனக் கேட்க மகன் வயோதிபத்தினால் ஏற்பட்டிருக்கின்ற தாயின் இயலாமையைப் புரிந்துகொள்ளாதவனாக, “பிள்ளைகள் விளையாடுதுகள் எண்டு சொன்னது விளங்கல்லையா? காது செவிடா?” எனக் கோபத்தில் சொன்னான். தன்நிலை உணரும் வயதிலோ, நிலையிலோ அவளில்லை என்பது மகனுக்குப் புரியாமலில்லை! மீண்டும் சற்று நேரத்திற்குப்பின் அவள் நான்காம் தடவையாக, “தம்பி, என்ன சத்தமாயிருக்கு?”எனக் கேட்க மகனோ பொறுமை இழந்தவனாக, “சாகிற வயதில சாகாமக் கிடந்து எங்களைச் சாகடிக்கிதுகள்! சீ...!” எனச் சீறி விழுந்தான்.

தாயின் இறுதி நாட்கள் நெருங்கிவந்துவிட்டது என்பதை அறியாத அகிலனுக்கு தாயின் திடீர் இறப்பு பெரும் தளர்ச்சியை ஏற்படுத்தியது. தாயின் இறுதிக் கடமைகள் முடிந்த கையுடன் அவளின் அலுமாரியில் உள்ள பொருட்களை எடுத்துப் பார்த்தான். அவற்றில் அவன் தாய் எழுதிய நான்கைந்து நாட்குறிப்பேடுகள் கிடந்தன. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய ஒரு நாட்குறிப்பேட்டைப் பிரித்தபோது: “மூன்றே மூன்று வயதான என் ஒரே மகன் அகிலன் நிலாவைக் காட்டி “என்னம்மா இது?, என்னம்மா இது?” என இன்றைய நாளில் மட்டும் இருபத்திநான்கு தடவைகள் கேட்டான். இருபத்தினான்கு தடவைகளும் நிலாவைப்பற்றி விளக்கி, நிலாவைப் பற்றிய கதைகளைச் சொல்லி, “நிலா நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா, மலைமீது ஏறிவா, மல்லிகைப்பூ கொண்டுவா...’ என்ற பாடலை ஒவ்வொரு தடவையும் பாடிக்காட்டி, இந்நாளை என் மகனுடன் மகிழ்வாகக் கழித்தேன்...” என்ற வரிகளை வாசித்தபோது தன் தாயின் தாராள அன்பும், அவரை இறுதி நாட்களில் பொறுமையுடன் பராமரிக்கத் தவறிய சந்தர்ப்பங்களும் நினைவுக்கு வர அவன் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்ததை அவனால் தடுக்க முடியாமல் போனது.

*இரண்டாவது குழந்தைப் பருவம்!*

சிறுவயதில் எத்தனை எத்தனை தடவைகள் ஒரே விடயத்தைப் பற்றித் தாய் தந்தையர்களிடம் கேட்டாலும், அத்தனை தடவைகளும் கேட்பவற்றுக்கான விளக்கத்தைச் சொல்லி கேட்பவற்றை எல்லாம் வாங்கிக்கொடுத்துத் தம் பிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்துகிறார்கள் பெற்றோர்கள். ஆனால், பெற்றோர் வயோதிப - முதுமைப் பருவத்தை அடைந்த நிலையில் அவர்களின் அந்த ‘இரண்டாவது குழந்தைப் பருவத்தில்’ அவர்களைப் புரிந்துகொள்ளாது பொறுமையிழந்து அவர்களை மனதளவில் நோகடிக்கச் செய்துவிடுகின்றார்கள் பிள்ளைகள்.

பெற்று, வளர்த்து, தம்மை ஆளாக்கிய பெற்றோரையே உதாசீனம் செய்து வாழும் பிள்ளைகளை, இன்று தாராளமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலையை அவதானிக்கின்ற ஒருவன், “நானும் அக்காவும் சண்டைபிடிப்போம், யார் அம்மாவின் மடியில் இருப்பதென்று! இப்போதும் சண்டைபிடிக்கின்றோம், யார் அம்மாவை வைத்திருப்பதென்று!” என்கின்றான். சில பெற்றோர் எவ்வாறாக நடத்தப்படுகின்றார்கள் என்பதைச் சொல்ல வந்த இன்னொருவன், “அப்பா திண்ணையில் படுத்திருந்தார். உள்ளே போனார்! படமாக, நிழல் படமாக!” என்கின்றான். சில பிள்ளைகளுக்குப் பெற்றோர் பாரமாக ஆகியிருக்கின்றார்கள் இப்போது!

வயோதிப பெற்றோர்களை, ஏன், முதியவர்களை ஒதுக்குவதும் ஒரு பெரும் சமூகத் தீமைதான் என்பதை நினைவிற்கொள்ள வேண்டியிருக்கின்றது. மூடன் என்பவன் யாரென உரைக்க வந்த ஒருவன், ‘கடவுளை முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டு ஆலயங்களில் தேடுகின்றவன்’ என வரையறை செய்கின்றான்.

ஆனால், வயோதிபப் பெற்றோர் ஊடாகப் பணம், பொருள், ஓய்வூதியம் போன்றவை கிடைக்குமென்றால் அவற்றுக்கு உரிமை பாராட்ட ‘நான் முந்தி நீ முந்தி’ என நிற்கின்ற பிள்ளைகள் அவர்களைப் பராமரிக்க பின்னடிப்பதையும் இந்நாட்களில் பரிதாபத்தோடு பார்க்க வேண்டியிருக்கின்றது.

இவ்வாறான நிலையை அவதானிக்கின்ற ஒருவன், “பெரிய மகளின் அட்டையிலும் இருக்கிறார், சின்ன மகளின் அட்டையிலும் இருக்கின்றார், காப்பகமொன்றில் இருக்கும் அப்பா!” எனக் குறிப்பிடுகின்றான்.

*மரியாதை மலையேறிப்போனதா?*

“அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்” என்ற உயர்ந்த நிலையில் பெற்றோர்களை முதன்மைப்படுத்தி நம் முன்னோர் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இவ்வாழ்க்கை முறையைத்தான், “தந்தை தாய் பேண்” என ஔவையார் பகர்வார். “தந்தை தாயைப் போற்று” என விவிலியம் கூறும். தாய் தந்தையரை போற்றுதல், அவர்களைப் பராமரித்தல், முதியவர்களைக் கனம் பண்ணுதல், வயதானவர்களுக்கு மரியாதை செலுத்துதல், ஏன் வயதில் மூத்தவர்களுடன் மரியாதையாகக் கதைத்தல், அவர்களுடன் மரியாதையாகப் பழகுதல் போன்றவை வீட்டில் பெற்றோரால் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் பிரதானமான அறிவுரைகளுள் ஒன்று - வாழ்ந்து காட்டப்படும் மதிப்பீடுகளுள் ஒன்று.

பெற்றோரைப் போற்றி வயதான காலத்தில் அவர்களைப் பராமரிக்கின்ற பண்பும் வயதான பெரியவர்களை மதிக்கின்ற கலாச்சாரமும் இன்றைய உலகில் படிப்படியாகக் குறைந்துவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அதனால்தான், வயதுமுதிர்ந்த பெரியவர்கள், நோயாளர்கள், குழந்தைகளைத் தாங்கியபடி தாய்மார்கள் பஸ்களில் ஏறுகின்றபோது ஒருசில இளையவர்களைத்தவிர ஏனையர்கள் இருக்கைகளைக் கொடுக்காமல் தூங்குவதுபோல நடிப்பதையும், அவர்களைக் காணாததுபோல– கவனிக்காததுபோல தூங்குவதையும் இன்று சாதாரணமாக அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.



*வயதான பெற்றோர் பாரமாகிவிட்டார்களா?*

ஒரு காலத்தில் வயதான பெற்றோர் - பெரியவர்கள் வீடுகளில் கிராமங்களில் மிகுந்த மதிப்புப்பெற்றவர்களாக விளங்கினார்கள். அவர்கள் வீட்டில் - கிராமத்தில் நடைபெறும் நிகழ்வுகளிலும் விழாக்களிலும் மிகமுக்கிய பங்காற்றி இருக்கின்றார்கள். அவர்களே நிகழ்வுகளுக்கு தலைமைதாங்கி நடத்துபவர்களாக இருந்திருக்கின்றார்கள். இத்தகைய நிலைப்பாட்டில் பாரிய மாற்றம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. வீட்டிலுள்ள வயதான பெற்றோர்கள் - முதியவர்கள் வீட்டில் உள்ள ஏனைய இளையோருக்குப் பாரமாகி வருகின்றார்கள் என்ற மனப்பான்மை இளம் தலைமுறையினரிடத்தில் வளர்ந்து வருகின்றது. அதனால், முதியவர்களால் இயங்கமுடியாத நிலையில் அவர்களை வயோதிப இல்லங்களுக்கு அனுப்பிவிடுகின்ற மனப்பாங்கு வேகமாக அதிகரித்துச்செல்வதையும் அவதானிக்கலாம்.

மேற்சொன்ன விடயம் தொடர்பாக நாளிதழ்களில் அவ்வப்போது பிரசுரிக்கப்படும் செய்திகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. ‘முதியோர் இல்லங்களை நாடுவோர் எண்ணிக்கை தற்போது அதிகரிப்பு - பெற்றோரை பராமரிக்கத் தயங்கும் பிள்ளைகள்’ என்ற தலைப்பில் 14.11.2014 அன்று உதயன் நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. இச்செய்தியை கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் திரு. த. கிருபாகரன் தெரிவித்திருந்ததாக அக்குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

வயோதிப இல்லங்களை முதியவர்கள் பெருமளவில் விரும்புவதில்லை. வீட்டில் தம் பிள்ளைகளால் பராமரிக்கப்படுவதையே விரும்புகின்றார்கள் என்பதை முதியோர் இல்லங்களில் முதியவர்களைச் சென்று சந்திக்கின்றபோது கண்டுகொள்ளலாம். எனினும் பிள்ளைகளால் பராமரிக்க முடியாத சந்தர்ப்பங்களில் முதியவர்கள் தங்களால் இயங்க முடியுமானவரை இயங்குகின்றார்கள். இயங்க முடியாத ஒரு கட்டத்தில் வேறு வழியில்லாத சந்தர்ப்பத்தில் வயோதிய இல்லங்களில் அவர்கள் அடைக்கலம் பெறுகின்றார்கள். இவ்வாறு வயோதிய இல்லத்தில் சேர்க்கப்பட்ட ஒரு தாயின் உள்ளத்து உணர்வுகளை அவதானியுங்கள்: “மகனே! நீ இருக்க, ஒரு கருவறை இருந்தது, என் வயிற்றில்! நான் இருக்க, ஒரு இருட்டறை கூடவா இல்லை, உன் வீட்டில்!” “கோழி மிதித்துக் குஞ்சுகள் சாகாது. ஆனால், குஞ்சுகள் மிதித்து முடமான கோழிகள்!” என்ற வாசகமானது; பெற்றோரைப் பராமரிக்கப் பிள்ளைகள் தவறுகின்றார்கள் என்பதனையும், வயதான பெற்றோரை அக்கறையுடன் பராமரிக்கவேண்டும் என்பதையும், சிந்திக்கத் தூண்டுவதாக ஒரு வயோதிப இல்லத்தில் பொறித்து வைக்கப்பட்டிருந்தது: இன்றைய இளைய தலைமுறையின் கவனத்திற்கு உரியது.

*காரணங்களைச் சொல்லி...*

வயதான பெற்றோரை பராமரிக்க முடியாமைக்கான காரணங்களாக வீட்டுத் தலைவனும் தலைவியும் வேலைசெய்தல், கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையிலிருந்து தனிக்குடும்ப வாழ்க்கை முறைக்குக் குடும்பங்கள் தள்ளப்பட்டவை போன்ற முக்கிய காரணங்களைக் கூறலாம். ஆனால், வயதான பெற்றோரை அவர்களின் இறுதிக்காலம்வரை பராமரிக்க முடியாமைக்காக மேற்சொன்ன காரணங்களைப்போன்ற காரணங்களை முன்வைத்து இலகுவாக இப்பொறுப்பிலிருந்து பிள்ளைகள் நழுவிவிட முடியாது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது.

அதேவேளையில் வயதான பெற்றோரும் பராமரிக்கின்ற பிள்ளைகளுடனும் மருமக்களுடனும் ஒத்துப்போவதும் மிக இன்றியமையாதது. வயதான பெற்றோரின் பிடிவாதப் போக்குகள், தாங்கள் நினைத்தபடி தமக்குச் செய்யப்பட வேண்டும் என அதிகமாக எதிர்பார்த்தல் போன்றவை தவிர்க்கப்படவேண்டும். வயதானவர்கள் கடும்போக்கைக் கடைப்பிடிக்காமல் ஒத்துப்போகின்ற மனப்பான்மையை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை, வயதான பெற்றோரைப் பிள்ளைகள் பராமரிக்க வேண்டும் என்ற மேற்சொன்ன கருத்தோடு சேர்த்து சமாந்தரமாகச் சமர்ப்பிக்க வேண்டியது இங்கு அவசியமாகின்றது. ஏனெனில் வயதானவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் கடும்போக்குடையவர்களாக (அதற்காக அவர்களை தீவிரவாதிகள் என நினைத்துவிடாதீர்கள்) இருப்பது அவர்களைப் பராமரிப்பதில் உருவாகும் சிக்கல்களுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்துவிடும்.

*“கண்ணா அடுத்தது நீதானா?”*

வயதான மூத்த பெரியவர் ஒருவர் எப்போதும் ஏதாவது ஒன்றைச் சொல்லி இளையோருக்கு எரிச்சல் மூட்டிக்கொண்டே இருப்பார். ஊரில் திருமணக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஊர் மக்கள் அனைவரும் கூடியிருக்கின்ற இடங்களில் இளைஞர்களின் கன்னங்களில் கிள்ளி, “கண்ணா, அடுத்தது நீதானா?” என நக்கல் அடித்து, நய்யாண்டி செய்து, அவர்களை சினங்கொள்ளச் செய்வார். இது அப்பெரியவரின் ஒரு பழக்கதோசமாகவே மாறியிருந்தது.

இவரின் இப்பழக்கத்தினால் வெறுத்துப்போன இளைஞர்கள் இவருக்கு நல்ல பாடம் புகட்டவேண்டும் என நீண்ட நாட்களாகக் காத்திருந்தார்கள். இவ்வாறு காத்திருந்த இளைஞர்களுக்கு ஓர் அருமையான வாய்ப்புக் கிடைத்தது. அவ்வூரில் முதியவர் ஒருவர் இறந்துபோனார். இறந்துபோன முதியவரின் இறுதி யாத்திரைக்கு ஊர் மக்கள் அனைவரும் கூடியிருந்தார்கள். கூடியிருந்த மக்கள் மத்தியில் அப்பெரியவரும் பிரசன்னமாயிருந்தார். ஓர் இளைஞன், அப்பெரியவர் கன்னத்தில் அவர் இளையோருக்குக் கிள்ளுவது போலவே கிள்ளி, “கண்ணா, அடுத்தது நீதானா?”என்று கேட்க அப்பெரியவருக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

*ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடல்*

எனவேதான், வயதான பெற்றோரும் வயதுமுதிர்ந்த பெரியோரும் தம்மை பராமரிக்கின்ற பிள்ளைகளின், பேரப்பிள்ளைகளின், மருமக்களின் உணர்வுகளையும் அவர்களின் தற்கால சிக்கல் நிறைந்த வாழ்க்கைப் பிரச்சினைகளையும் புரிந்துகொண்டு அவர்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். அற்பசொற்ப விடயங்களுக்காக நாள்முழுவதும் ஏசிக்கொண்டிருத்தல், தாங்கள் நினைத்தபடி எல்லாம் நடைபெறவேண்டும் என எதிர்பார்த்தல், தம்முடைய வாழ்க்கைமுறையுடன் இக்காலத்தவரின் வாழ்க்கைமுறையை ஒப்பிட்டு வீண் குதர்க்கம் புரிதல் போன்றவற்றில் பொழுதைப் போக்காமல்; வாசித்தல், சிறுபிள்ளைகளுக்குத் தேவையான அறிவுபூர்வமான விடயங்களில் உதவுதல், வீட்டில் உதவக்கூடிய வகையில் சிறுசிறு செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற ஆக்கபூர்வமான விடயங்களில் பொழுதைக் களித்தல் - புலனைச் செலுத்துதல் வழியாக வயதான் பெற்றோர் - முதியவர்கள் வீட்டில் உள்ள ஏனையவர்களுடன் ஒன்றித்து வாழக்கூடியதாக இருக்கும்.

நிறைவாக, வயதான பெற்றோரை – பெரியோரைப் பேணுவது நம் கடன் என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது. வயதான பெற்றோர் பாரமுமல்ல, பரிதாபத்துக்கு உரியவர்களுமல்ல; அவர்கள் நம் அன்புக்கும், பாசத்திற்கும், உயர் மரியாதைக்கும், பெரும் சிறப்புக்கும் உரியவர்கள். வயோதிப இல்லங்களுக்குப் பொருள், பணம், உணவு, உடை போன்றவைகளைத் தாராளமாய் கொடுக்கவேண்டும். ஆனால், யாரும் தம் பெற்றோரை தாரைவார்த்துக் கொடுத்துவிடக்கூடாது.

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும்:
anpuomi1970@gmail.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுத்திருத்தல தூய ஜோண் மரிய வியான்னி தியான இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் (2015 ஜனவரி – மார்ச்)



## பெப்ரவரி 02 - 07: மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்களுக்கான வருடாந்தத் தியானம்

மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்களுக்கான வருடாந்தத் தியானம் மடுத்தியான இல்லத்தில் மேற்குறிப்பிட்ட தினங்களில் இடம்பெற்றது. 68 உறுப்பினர்கள் பங்குகொண்ட இத்தியானத்தினை நற்கருணைநாதர் சபையின் இலங்கை முதல்வர் அருட்திரு. டிலான் பெர்ணான்டோ அடிகளார் நெறிப்படுத்தினார். 02ம் திகதி இரவு 8.30 மணிக்கு ஆரம்பமாகிய இத்தியானத்தின் நிகழ்வுகளாக திருப்பலி, நற்கருணை வழிபாடு. மறையுரைகள், திருச்செபமாலை மற்றும் காலை, மாலைச் செபங்கள் என்பன இடம்பெற்றன.

06ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.15 மணிக்கு மடுத்தேவாலய முன்றலில் சிலுவைப்பாதைத் தியானம் நடாத்தப்பட்டது. 12ம் திகதி சனிக்கிழமை காலை 7.15 மணிக்கு மடுத்திருத்தலத்தின் புதிய நற்கருணை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்று காலை உணவுடன் தியானம் நிறைவுபெற்றது.

## பெப்ரவரி 20-22: கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் வயோதிபருக்கான தவக்காலத் தியானம்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இயங்கிவரும் பெண்கள் இல்லம் ஒன்றிலிருந்து வந்த வயோதிபர்களுக்கான தியானம் மடுத்தியான இல்லத்தில் இடம்பெற்றது. இவர்கள் மூன்று நாள் தியானத்தில் பங்கெடுத்தனர். இவர்களுள் பலர் பல வருடங்களுக்குப் பிற்பாடு மடுத்திருத்தலத்திற்கு வந்திருப்பதாகக் கூறி மகிழ்ந்தனர். இந்த மூன்று தினங்களையும் மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்தியதாகப் பலரும் கூறிக்கொண்டனர். அருட்தந்தை றொகான் மற்றும் அருட்சகோதரி ஒருவரும் இவர்களை நெறிப்படுத்தினர். இத்தியானமானது 20ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமாகி ஞாயிறு காலை 9.00 மணியளவில் நிறைவடைந்தது.

## மார்ச் 06-08: அனுராதபுரம் மறைமாவட்டத்தின் மறை ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானம்

அனுராபுரம் மறைமாவட்டத்தில் இயங்கிவரும் இரண்டு மறைக்கோட்டங்களில் ஒன்றான பொலநறுவ மறைக்கோட்ட மறையாசிரியர்களுக்கான தவக்காலத் தியானமானது மார்ச் மாதம் 06ம் திகதி மடுத்தியான இல்லத்தில் ஆரம்பமாகியது. மறைக்கோட்ட மறைக்கல்வி ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. சறத் அடிகளார் மற்றும் மூன்று அருட்சகோதரிகள் உட்பட 56 உறுப்பினர்கள் 06ம் திகதி நண்பகல் 12.00 மணியளவில் மடுத்தியான இல்லத்தினை வந்தடைந்தனர். மதிய உணவினைத் தொடர்ந்து இவர்களுக்கான தியானம் ஆரம்பமாகியது. வருகைதந்த அருட்சகோதரிகளுள் ஒருவரே வளவாளராகச் செயற்பட்டார். இத்தியானத்தில் திருப்பலிகள், தியான உரைகள், கலந்துரையாடல்கள், நற்கருணை ஆராதனை போன்றவை இடம்பெற்றன. பங்குகொண்டோர் அனைவரும் அமைதியாகவும், அர்ப்பணிப்போடும் பங்கெடுத்தமை பாராட்டுக்குரியதே.

## மார்ச் 13-15: மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானம்

மன்னார் மறைமாவட்டத்தின் பல பாடசாலைகளில் பணிபுரியும் 130 ஆசிரியர்கள் பங்குகொண்ட இத்தியானமானது 13ம் திகதி மாலை 06 மணிக்கு ஆரம்பமாகி 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நிறைவடைந்தது.

இத்தியானத்தினை ஆரம்ப நாள் முதல் மறுதினம் சனிக்கிழமை பி.ப 4.00 மணிவரைக்கும் தென்னிந்தியக் குருவும் தற்போது வவுனியா மறைக்கோட்டப் பங்குகளில் ஒன்றான தரணிக்குளம் பங்கின் பங்குத்தந்தையமான அருட்பணி. பீற்றர் அமல் அடிகளாரும் மற்றும் ஓர் இந்தியக் குருவும் மிகவும் சிறப்பான வகையில் நெறிப்படுத்தினார்கள். இருவரும் கப்புச்சின் சபைக் குருக்களாவர்.

14ம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியினைத் தொடர்ந்து தியான உரைகளையும் நற்கருணை ஆராதனை மற்றும் குணமாக்கும் வழிபாட்டினையும் எமது மறைமாவட்ட குருக்களான அருட்பணி. பெனோ அலெக்ஸ்சாண்டர், அருட்பணி. யூட் குரூஸ், அருட்பணி. றொக்சன் குரூஸ் ஆகியோருடன் தென்னிந்தியாவின் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தில் இயங்கிவரும் ஜெபக்குழு உறுப்பினர் திருவாளர் ஞானம் அவர்களும் இணைந்து நடாத்தினர். இந்நிகழ்வானது இரவு 9.30 மணி வரை நடைபெற்றது.

15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு காலைச் செபமும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெற்றது. திருப்பலியின் நிறைவில் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான பொதுக்கூட்டம் இடம்பெற்றது. காலை உணவுடன் மூன்று நாட் தியானம் நிறைவுபெற்றது. இத்தியானத்தினை மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. பி. றெஜினோல்ட் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.

## மார்ச் 16: புனித டொன் பொஸ்கோ நிலையப் பணியாளர்களுக்கான தவக்காலத் தியானம்

மன்னார் மறைமாவட்டத்தின் முருங்கன் பிரதேசத்தில் இயங்கிவரும் புனித டொன் பொஸ்கோ தொழில்நுட்ப நிலையத்தில் பணிபுரிந்துவரும் பணியாளர்களுக்கான தவக்காலத் தியானமானது மார்ச் மாதம் 16ம் திகதி காலை 10.30 மணிமுதல் பி.ப 4.30 மணிவரை இடம்பெற்றது. இத்தியானத்தில் 18 பணியாளர்கள் பங்கெடுத்தனர். ஆரம்ப நிகழ்வாக அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் அடிகளாரினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மதிய உணவினை அடுத்து அருட்பணி. அ. இராயப்பு அடிகளாரினால் நற்கருணை ஆராதனையும், மறையுரையும், நற்கருணை ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. இத்தியான நிகழ்வினை முருங்கன் டொன் பொஸ்கோ நிலைய இயக்குனர் அருட்தந்தை போல் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.

## மார்ச் 20: யாழ் மறைமாவட்ட கியூடெக் அமைப்பின் பணியாளர்களுக்கான தவக்காலத் தியானம்

யாழ் மறைமாவட்டத்தின் கியூடெக் அமைப்பில் பணிபுரியும் பணியாளர்களுக்கான தவக்காலத் தியானமானது மார்ச் மாதம் 20ம் திகதி காலை 10.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை இடம்பெற்றது. 30 உறுப்பினர்கள் பங்கெடுத்த இத்தியானத்தினை யாழ் கியூடெக் அமைப்பின் இயக்குனர் அருட்பணி. யாவிஸ் அடிகளார் ஒழுங்குபடுத்தியிருந்தார். இத்தியானத்துக்கான உரை மற்றும் திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. பிரான்சீஸ் றெஜினோல்ட் அடிகளார் நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## மார்ச் 20-22: அனுராபுர மறைமாவட்டத்தின் மறையாசிரியர்களுக்கான தவக்காலத் தியானம்

மேற்படி தியானமானது மடுத்தியான இல்லத்தில் மார்ச் மாதம் 20ம் திகதி முதல் 22ம் திகதிவரை இடம்பெற்றது. 44 உறுப்பினர்கள் பங்குபற்றிய இத்தியானத்தினை அனுராபுர மறைமாவட்ட மறைக்கல்வி ஆணைக்குழு இயக்குனர் அருட்தந்தை சறத் அடிகளார் ஏற்பாடு செய்திருந்தார். இத்தியான நிகழ்வில் மறையாசிரியர்களோடு பத்து அருட்சகோதரிகளும் இரண்டு அருட்சகோதரர்களும் பங்கெடுத்தனர். அருட்சகோதரி ஒருவர் இத்தியானத்தினை நெறிப்படுத்தினார்.

20ம் திகதி பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமாகிய இத்தியானம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப 1.30 மணிக்கு நிறைவடைந்தது. அனுராதபுர மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு நோபேட் அன்றாடி ஆண்டகை அவர்கள் 21ம் திகதி மாலை 6.00 மணிக்கு வருகை தந்து இரவுணவின் பிற்பாடு மறை ஆசிரியர்களைச் சந்தித்து கருத்துரை வழங்கி மறையாசிரியர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த பணிகளைப் பாராட்டினார்.

மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரை மறையாசிரியர்களுக்கான உரையை ஆயர் அவர்களே வழங்கி 11.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அன்றைய மதியவுணவோடு நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன.

## திருத்தந்தையின் .... 16ஆம் பக்கத் தொடர்.

இதனைக் கேட்ட திருத்தந்தை "இரத்தத்தில் பாதி மட்டுமே திரவமாக மாறியிருப்பதால் நாம் இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது. புனிதர் எம்மை அரைவாசிதான் அன்பு செய்கிறார்" என நகைச்சுவையாகக் கூறினார். ஆனால் பின்னர் படிப்படியாக முழு இரத்தமுமே திரவமாக மாறிவிட்டது.

ஒரு திருத்தந்தையின் விஜயத்தின்போது இவ்வற்புதம் நிகழ்ந்தது இதுவே முதல் தடவையாகும். புனித ஜனுவாரிஸ் மூன்றாம் நூற்றாண்டில் ஆயராகப் பணிபுரிந்து வேதசாட்சியாக மரித்தவர் என்பதும், இவருடைய இரத்தம் யூசேபியுஸ் என்ற பெண்மணியால் பாதுகாக்கப்பட்டுத் திருப்பண்டமாகப் பேணப்பட்டு வருகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# புனித பூமிக்கான எமது திருப்பயண அனுபவம்





விடத்தல்தீவு 6ஆம் வட்டாரத்தை நிரந்தர முகவரியாகவும், தோட்டவெளி யோசப்வாஸ் நகரத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திரு. திருமதி ச. எலியாஸ் புஸ்பமலர் ஆகிய நாம் எமது புனித பூமிக்கான திருப்பயண அனுபவங்களை மன்னா வாசகர்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி அன்று கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக எங்களது புனித யாத்திரை ஆரம்பமானது. கொழும்பிலிருந்து நாங்கள் அம்மான் விமான நிலையத்தைச் சென்றடைந்தோம். அங்கிருந்து பேரூந்து வண்டியினூடாக புனித நகரத்தைச் சென்றடைந்ததும் முதன் முதலாக கன்னி மரியாள் பரலோகம் எடுத்துக்கொள்ளப்பட்ட இடத்தைப் பார்வையிட்டோம்.

15.04.2015 அன்று நாங்கள் ஜெஸ்தமனி தோட்டத்தைச் சென்றடைந்தோம். அதன் பிற்பாடு கன்னிமரியாளிற்கு மங்கள வார்த்தை சொன்ன இடம், இயேசு உருமாற்றம் பெற்ற இடம், இயேசு சிலுவை சுமந்து சென்ற இடம் என அனைத்தையும் பார்வையிட்டோம். அது மறக்க முடியாத அனுபவமாக இருந்தது.

17.04.2015 அன்று அதிகாலையிலே இயேசுவைச் சாத்தான் சோதித்த இடம், பேதுரு இயேசுவை மறுதலித்த இடம் மற்றும் இயேசு அவருடைய வளர்ப்புத் தந்தையுடன் வாழ்ந்த இடம் ஆகியவற்றைப் பார்வையிட்டோம். அத்தோடு கன்னிமரியாளின் தாய் வாழ்ந்த இடத்தையும் நாங்கள் பார்க்க மறக்கவில்லை.

18.04.2015 அன்று மிகவும் ஆவலுடன் எங்களுடைய பயணம் ஆரம்பமாகியது. ஏனென்றால் அன்றைய நாள்தான் இயேசு 30 வயதிற்குப்பின் தனது பகிரங்கப் பணிகளை நிறைவேற்றிய இடங்களைப் பார்க்கச் செல்லவிருந்தோம். முதலில் பேதுருவுடன் மீன் சுட்டு உண்ட பாறை, ஐந்து மீன்களையும் இரண்டு அப்பங்களையும் ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்த இடம், கலிலேயாக் கடல், யூதாஸ் முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த இடம், இயேசு இறக்கும்போது பிளந்த நிலம், இயேசுவின் கல்லறை, இயேசு திருமுழுக்குப் பெற்ற இடம், கானாவூர் திருமணம் நடைபெற்ற இடம், இயேசுவின் ஆடைகள் கழற்றப்பட்டு முள்முடி சூட்டப்பட்ட இடம், இயேசுவைச் சிலுவையில் அறைந்த இடம், வியாகுல மாதாவின் மடியில் இயேசுவை வைத்த இடம் ஆகியவற்றைப் பார்வையிட்டோம். மனதிலே எமக்கு மிகுந்த மகிழ்ச்சி. எங்களுடைய பயணத்தின் இறுதி நாளாகவும் இது இருந்தது.

19.04.2015 அன்று எங்களுடைய யாத்திரையை முடித்துக்கொண்டு இலங்கை வந்தடைந்தோம். இப்புனித யாத்திரையை மேற்கொள்வதற்காக நாங்கள் பத்து வருடங்கள் எதிர்பார்த்திருந்தோம். கடவுள் புண்ணியத்தில் அது இவ்வருடம் நிறைவேறியது.

எனக்கு வயது முதிர்ந்த காலம் இது. நான் புனித நகரம் சென்றவுடன் எவ்வாறு அங்கு உள்ள இடங்களைப் பார்ப்பது, அங்குள்ள மலைகளில் ஏறுவது என்ற கவலை எனக்குள்ளிருந்தது. ஆனால் கடவுளின் கிருபையால் எல்லாம் நன்றாகவே நிறைவேறியது. என்னுடைய இந்தப் புனித யாத்திரையானது எனக்குள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் ஆழமாக வளர்த்துக்கொண்டிருக்கின்றது. என்னுடைய வேண்டு கோள் என்னவென்றால் நீங்கள் அனைவரும் உங்களுடைய வாழ்நாட்களுக்குள் ஒருமுறையாவது அங்கு சென்று வரவேண்டும் என்பதே.

## மறையாசிரியர்... 2ஆம் பக்கத் தொடாச்சி.

பயன்படுத்துமாறும் மே மாதம் 9ம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக பங்குபற்றுபவர்களின் பெயர்ப் பட்டியலை அனுப்பிவைக்குமாறும் வினயமாய் வேண்டுகின்றோம். இரண்டிற்கு மேற்பட்ட மறையாசிரியர்களையும் அனுப்பமுடியும் என்பதையும் கவனத்தில் கொள்க.

கடந்தகால நமது மறையாசிரியர் பயிற்சியில் ஏனைய மறைமாவட்டங்களிலும் இருந்து மறையாசிரியர்கள் பங்குபற்றியதால் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு மறையாசிரியர்களின் தொகை நம்மிடம் இல்லாதுவிட்டால் அவர்களுக்கும் அறிவிக்க வேண்டியுள்ளது. எனவே மே மாதம் 9ம் திகதிக்கு முன்னதாக உங்களது பங்கில் இருந்து பெயர்கள் கிடைக்கப்பெறாவிட்டால் தங்கள் பங்கில் பயிற்சி பெறுபவர்கள் இல்லை என்பதை நாம் அனுமானிப்போம் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

## புனிதர்களின்.... 9ஆம் பக்கத் தொடர்ச்சி

பிறரைப் பழிதூற்றும் ஒரு பெண்ணிடம் ஒரு வாத்தின் இறகுகளைப் பறிக்கச்சொன்னார். பறித்து முடித்தபின் அவற்றை காற்றில் பறக்கவிடச் சொன்னார். அந்தப் பெண்ணிடம் இன்னொன்று செய்யுமாறு கேட்டிருக்கின்றார். அதாவது காற்றில் பறக்கவிட்ட இறகுகளை திரும்பவும் ஒன்றுசேர்க்கச் சொன்னார். "இது இயலாதே" என்று பெண் கூற, "அப்படித்தான் நீ மற்றவர்களின் பெயரைக் கெடுத்தபின், அதை நீ சரிப்படுத்த முடியாது என்பதைப் புரிந்துகொள், திருந்து" என்று சொன்னார்.

இவரை "உரோமை நகரின் இரண்டாம் அப்போஸ்தலர்" என அழைக்கின்றார்கள். இது இவருக்கு மிகப்பொருத்தம். நாள்தோறும் பிலிப்பு வைகறையில் தாழ்ச்சியுடன் எழுப்பிய மன்றாட்டு, "ஆண்டவரே, பிலிப்பை உமது அருட்கரம் கொண்டு நடத்தும். இல்லாவிட்டால் பிலிப்பு உம்மைக் காட்டிக்கொடுத்து விடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கியச் சாளரம்

எஸ். ஏ. உதயன் - தேசியக் கலைஞர்

# தவம்

சிறுகதை



"என்ன எல்லாரும் ஒண்ணா வந்திருக்கிறீக... என்ன விசயம்?" என்று கேட்டுவிட்டுத் தனக்கே உரித்தான பாணியில் வாய்விட்டு சிரித்தார் பிரகாசம். 'இல்ல....' யார் முதலில் ஆரம்பிப்பது என்று வந்த மூவரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். நேரம் ஊர்ந்துகொண்டிருந்தது. நாளைக்கு ஈஸ்டர். ஊர் பிரமுகர் பிரகாசம் தன் ஒரே மகளுக்கு கலியாண ரெஜிஸ்டரையும் நாளைக்குத்தான் வைத்திருந்தார். பெரிய இடம் என்றபடியால் கலியாணத்திற்கு சமனாக கலியாண எழுத்தையும் பெரிதாகவே செய்யணும் என்று பிடிவாதமாய் நின்றார் பிரகாசம்.

அக்கம் பக்கம் உற்றார் உறவினர்களுக்கு அது தங்களுடைய வீட்டு விசேசம் என்பதுபோல ஏற்பாடுகளுக்கு இசைந்தபடி அடிக்கடி அவரிடமே ஓடிவந்து கதைப்பதும் ஆலோசனை கேட்பதுமாக இருந்தார்கள்.

மணி பதினொன்றைத் தாண்டிக்கொண்டிருந்தது. வந்திருந்த மரியநாயகமும் யேசுதாசனும் ஆபேலும் கொஞ்ச நேரம் ஒன்றும் பேசாமல் தம் முன்னாலிருந்த தேத்தண்ணியைப் பார்த்தபடி இருந்துவிட்டு மரியநாயகம்தான் கதைக்கத் தொடங்கினார்.

"நேற்றே வாறமெண்டிருந்தோம் கோயிலில வழிபாடு ஆசந்தி என்டு தெரியும்தானே... நீங்களும் கதைக்கிறமாதி இல்ல.. கலியாண எழுத்தெண்டு ஓடித்திரிஞ்சீங்க" மரியநாயகத்தை இடைமறித்துக்கொண்டு யேசுதாசன் வந்த விஷயத்தை சொல்லிடுறோம் என்று கதைக்க வெளிக்கிட, இவ்வளவு நேரமும் கதைக்கத் தைரியமில்லாமல் இருந்த ஆபேல் அவரை முந்திக் கொண்டு "எல்லாம் உங்க அம்மா, அப்பா விஷயம்தான்!" இத்தனை நேரமும் சுமுகமாயிருந்த பிரகாசத்தின் முகத்தில் கோபம் வந்து குவிந்தது தெரிந்தது. "அவங்களப்பற்றிக் கதைக்கிறதென்டா ஒண்ணும் வேணாம்" என்று எழும்பினார். "அட என்ன இருங்க. என்னன்டாலும் உங்களப் பெத்தவங்க இல்லையா, அவங்க இல்லாம உங்க வீட்டில ஒரு விசேசத்தை நடத்தலாமா? சரியா? யோசிச்சுப்பாருங்க. அதுவும் நீங்க பரிஸ் கவுன்சிலில இருந்துகொண்டு." வந்தவர்களில் மரியநாயகம்தான் வயசில் மூத்தவராய் இருந்தபடியால் சொல்லவந்ததை பொறுப்போடு சொல்லி முடித்தார்.

"எல்லாம் நான் நல்லா யோசித்துத்தான் செய்யுறன் சரியா... அவங்க இங்க வரவேணாமென்டு இப்ப யாரு சொன்னா?"

"ஆனா பொண்ணிட அப்பா நீங்க. முறப்படி போய்க் கூப்பிடாம எப்பிடி அவங்க வருவாங்க?"

"அதெல்லாம் இந்தக் கலியாணம் கேட்டு முடிவு செஞ்சநேரம் அவங்க வீட்டுக்கே போய்ச் சொல்லியாச்சு. ஏன் நானும் என் பொண்டாட்டியும் நாலுதரம் நாய்மாதி இழுபடணுமா சொல்லுங்க. இது அவங்க பேத்தியிட கலியாணம். வந்துநிண்டு செய்யவேண்டியதுதான். நீங்களே சொல்லுங்க நியாயத்த, பிள்ள விரும்பின இடத்தில செய்துகுடுக்கிறன். அதுக்கு ஆயிரம் சூத்தசொள்ள சொல்லி இந்தக்கலியாணமே வேணாமென்டதும் இதில சம்பந்தமில்லயென்டு ஒதுங்கி நிற்கிறதுக்கும் நான் ஒண்ணும் செய்ய ஏலாது. அதுசரி இப்ப கோவிச்சுக்கொண்டு என் தம்பி வீட்டில போய் இருக்கிறாங்க. அப்பிடியில்லாம இந்த வீட்டிலேயே இருந்திருப்பாங்களெண்டா நான் வெத்தில பாக்கு வச்சு அழைச்சிருப்பனா. சொல்லுங்க... அப்ப வரவேண்டியதுதான்".

பிரகாசம் உணர்ச்சிவசப்பட்டு நிறுத்தாமல் கதைத்துக்கொண்டே போனார். வந்தவர்களுக்குப் புரிந்தது, இது ஒன்றும் பாரதூரமான விசயம் ஒண்டுமில்ல. சும்மா ஒரு சின்ன விட்டுக்கொடுப்பு அவ்வளவுதான். அதைச் செய்யவிடாமல் தாய், தகப்பனுக்கும் பிள்ளைக்குமிடையில் சின்ன ஈகோ ஒன்று இருந்து தடுக்குது. சாடையாத் தட்டி விட்டால் சரி....

என்னதான் பங்குச்சபை உறுப்பினராக இருந்தாலும் அவரவர் பிரச்சினையைக் கிட்டப்போய்ப் பார்த்தால்தான் தெரியும். பங்குச்சபை உறுப்பினர் எண்டாப்போல ஆகாசத்தில இருந்து குதிச்சவங்களா இல்லையே. அப்பா சம்பாதிச்சு வைச்ச இந்தப் பெரிய வீடும் வளவும் தோட்டமும் துரவும் மெயின்ரோட்டில கட்டி வாடகைக்கு விடப்பட்ட பத்துக்கடை - அதன் எல்லா வருமானத்தையும் பிள்ளைகளென்டு இருக்கிற ரெண்டு ஆம்புளைப் பிள்ளைகளுமான பிரகாசமும் அவரது தம்பி ஜயாத்துரையும்தான் அனுபவிச்சு வந்தாலும் இன்னும் சொத்து விசயத்தில கூடப்பிறந்த தம்பியோடு சமரசம் செய்து கொள்ளாமல் பிரச்சினப்பட்டுக்கொண்டிருக்கிற விசயம் ஊருக்கே தெரிஞ்ச கதைதான்.

நியாயம் என்று பார்த்தால் கோயிலில எந்தக்காரியத்துக்கும் மனிசன் நிற்க முடியாது. இதையெல்லாம் இப்ப கதைச்சு நியாய விசாரணை செய்யமுடியாது என்றபடியால் வந்தவர்கள் பிரகாசத்தின் மகளின் கலியாண விசயத்தோடமட்டும் நின்று கொண்டார்கள்.

"என்ன இருந்தாலும் பெத்த அம்மா அப்பாவக் கூப்பிடாம கலியாணம் காட்சி என்றால் எங்களுக்கு கவலையா இருக்காதா? ஊரில கோயில் குருசு என்டு திரியிறவனுக்கு பெத்தவங்கள மதிக்கத் தெரியாட்டி வேறு யார் மதிப்பா?" இப்படி அந்தக்கிழடுகள் ரொம்ப உருக்கமா சுவாமிட்ட கதைக்கப்போய் இப்ப பங்குச்சபை சமூகக்குழு ஆட்களான இந்த மூன்றுபேரும் இங்க வரவேண்டியிருந்தது.

மரியநாயகத்திற்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. அவர்கள் எவ்வளவு சொல்லியும் பிரகாசம் கிணற்றுக்குள் போட்ட கல்லைப்போல அசையாமல் இருக்கிறாரே! மனசுக்குள் எழும்பிய கோபத்தை அடக்கி மெதுவாகக் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னார்.. "வயசான காலத்தில பெத்தவங்கள கண்ணீர் சிந்தவிடக்கூடாது. இப்ப நாங்க நியாயம் கதைக்கவரயில்ல. எங்களுக்காகவாவது நீங்க போய் ஒருவார்த்தை சொன்னா அவங்க கட்டாயம் வருவாங்க. இப்ப உங்க அம்மா அப்பாமேல எவ்வளவுதான் பிழை இருந்தாலும் நாளைக்கு இந்த வீட்டுக்கு விசேசத்துக்கு வாறவங்க உங்களத்தான் குற்றம் சொல்லுவாங்க. நீங்க தனியாப் போகவேணாம் பக்கத்தது வீடுதானே நாங்களும் வாறம். ஒரு வார்த்தை வாங்கன்னு சொல்லிட்டு வாங்க....." மாயநாயகம் முழுவதுமாய் சொல்லவிடாமல் பிரகாசம் எகிறினார். "அவங்களுக்கு இந்த கிழட்டு வயசில இவ்வளவு ராங்கியென்டா எனக்கு எவ்வளவு இருக்கும். ஊரில இருக்கிற அவனும் இவனும் வந்து சொன்னா நான் செய்திடனுமோ? என்று பாய.. வந்தவர்களுக்கு என்னவோ போலிருந்தது. அவனும் இவனும் என்று பிரகாசம் எள்ளியதை அவர்களால் பொறுக்க இயலவில்லை. "ஞ்சேறும் நாங்க ஏதோ நீங்களும் பரிஸ் கவுன்சில் மெம்பர் என்டபடியால எங்களுக்குச் சொல்றதுக்கு ஒரு கடமை இருந்தது. வந்து சொன்னோம். இனி உங்க பாடு. நாங்க வாறம்..." என்று சொல்லிவிட்டு அவர்கள் மூவரும் எழும்பி நடையைக் கட்டினார்கள்.

❖

அது விழிப்பா மயக்கமாவென்று தெரியவில்லை.. கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் புரண்டு படுக்கும்போது அனிச்சையாக தான் சுவர்மணிக்கூட்டைப் பார்த்ததும் அது அப்போது பன்னிரன்டைக் காட்டியதுமாக ஞாபகம். இப்போதெல்லாம் ஞாபகமும் நினைவும் பிரமையாகத்தான் தோன்றுகிறது. உடம்பில் அசைவு காட்டாமலே "கிளாரா" அழைத்தார். இது கடந்தகாலத்துக்கோ போய்ச்சேரவேண்டிய காலத்துக்கோ இழுத்துச்செல்லப்படும்போது நிகழ்காலத்தை உறுதிபடுத்திக் கொள்ள இந்த முதுமை விடும் அழைப்பு.

பக்கத்து கட்டிலில் படுத்திருக்கும் பொண்டாட்டி அதற்கு 'என்ன' என்று மறு கேள்வி கேட்டால் அவர் இவ்வுலகில் இருப்பதை நிச்சயப்படுத்துவதாக ஒரு கணக்கு வைத்திருக்கிறார். ஆனால் அப்படி அவளிடமிருந்து ஒரு மறுமொழியும் வரவில்லையே... பாவம் அசந்து தூங்குகிறாளோ என்னவோ.. நேற்று பெரிய வெள்ளிக்கிழமை கல்லறை ஆண்டவருக்கு பரிவட்டம் சாத்தி தன் பேத்திக்காக நேர்ந்துகொண்டதாகச் சொன்னாள். பேத்தியின் கலியாணத்திற்கு மகன் கூப்பிடுவானா? கூப்பிடுவான். அதையும் அந்தக் கர்த்தர் தலையில் போட்டு ஆசந்தித் தட்டிக்கு கீழே நுழைந்து ஒரு வேண்டுதலும் வைத்துக்கொண்டாள். இனி கர்த்தர்தான் இவளுக்குப் பிரதி உபகாரமாக எதுவும் செய்ய வேண்டும். தனக்குள் இருக்கும் தவிப்பை மற்றவர்களுக்குச் சொல்லிச் சொல்லியே ஓய்ந்துபோனாள்.

அவரால் மேலும் படுத்திருக்க முடியவில்லை. மெல்ல எழும்பி உட்கார்ந்தார். இப்போது அவர் மனைவி கிளாராவின் குரல் "படுக்கயில்லயா?" "படுத்தென். இப்பதான் முழிச்சன்" கேட்டிகளா ராமுழுக்க அங்க எல்லாரும் முழிச்சிருந்து கலியாண வேலை பாத்தாங்கபோலிருக்கு... ஒரே சத்தம்... இவனப்பாரு கலியாண எழுத்தையே இப்பிடி இனஞ்சனத்தை கூப்பிட்டு பெரிசாச் செய்யுறான். கலியாணத்த எப்பிடி செய்வானோ.. அவன் கூப்பிடாட்டி என்ன வாங்க போவோம்.

அவள் கூப்பிட அவருக்குப் பரிதாபமாக இருந்தது என்றாலும் மனசுக்குள் ஒரு இறுமாப்பு முளைக்க பேசாமல் திரும்பிப் படுத்துவிட்டுச் சொன்னார். "உனக்கென்ன பைத்தியமா. இந்த நேரத்திலயா" அவர் போர்வையை இழுத்து மூடி கண்ணைமூடித் தூங்குவதுபோல பாசாங்கு செய்தார். உள்ளுக்குள்ளே உறுத்திக்கொண்டிருந்த வலி..... போர்வையை சற்று விலக்கிப் பார்த்தார். அவள் கட்டிலில் கூனிக்குறுகி உட்கார்ந்திருந்து சத்தம் வராமல் அழுதுகொண்டிருப்பது தெரிந்தது. "நமக்கா கதைக்க போன ஆக்களையே அவன் விசேசத்துக்கு கூப்பிடயில்லயாம். நாம போனா மதிப்பானா" அவர் அவளுக்கு ஈன்வரத்தில் சொன்னது கேட்டிருக்குமோ இல்லையோ.

"விடிஞ்சா ஈஸ்டர். இவள் இந்த நாற்பது நாளும் ஒறுத்து தவம் செய்ததற்கு அந்த ஆண்டவர் பரிகாரம் செய்யாமலா விட்டுருவார் பாப்பம்" இன்னும் அவள் குந்திக்கொண்டு அப்படியேதான் இருந்தாள். கிழக்கு வெளுத்தது. வாசல்படியில் யாரோ வந்து நிற்பதுபோல இருக்க திரும்பவும் எழும்பி உட்கார்ந்தார்.. "அம்மா" பிரம்மையோ.. கிள்ளிப்பார்த்தார்.. இல்லை நிஜம். அது தன் மகன் பிரகாசத்தின் குரல்தான்.

## கொஞ்சம் சிரிங்க

**நண்பன் :** அரசு! இத்தனை நாளா குடிக்காத நீ இன்டைக்கு ஏன் குடிக்கிறாய்?

**அரசு :** எல்லாரும் இன்டைக்கு 'குடி அரசு!' 'குடி அரசு!' என்று சொன்னாங்க. அதுதான் குடிச்சன்.

..............................

**மனைவி :** என்னங்க உங்க கைக்கடிகாரம் ஓடல. நின்று போய் இருக்கு?

**கணவன் :** நேரத்தை வீணாக்கக் கூடாதுண்ணுதான் நிறுத்தி வைச்சேன்.

..............................

**பேச்சாளர் :** "உறவுக்குக் கை கொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்!"

**ஒருவர் :** அவசரத்திற்கு கடன் கொடுப்பீர்களா?

..............................

**நோயாளி :** டாக்டர் நீங்க என்னிடம் காசு வாங்காம மருந்து தாற மாதிரி நேற்றுக் கனவு கண்டேன்.

**டாக்டர்:** அதெல்லாம் ஒரு கெட்ட கனவா நினச்சு மறந்திடுங்க.

**கி. நிதுஷா, கொக்குப்படையான்.**

**மனைவி :** என்னை நீங்க மட்டும் விரும்பவில்லை

**கணவன் :** அடியே! என்னடி சொல்லுற..?

**மனைவி :** ஒரு ஐம்பது பேரு என்னை விரும்புறாங்க...

**கணவன் :** என்னடி உளர்ற.. மூளை குழம்பிடுச்சா...?

**மனைவி :** அட சொல்றத முழுசா கேளுங்க... பேஸ்புக்கில போட்ட என்னோட படத்துக்கு 50 லைக்குங்க. அதச் சொல்ல வந்தேன்...

**கணவன் :** அதானே பார்த்தேன்... நல்லா போயிட்டிருந்த உலகம் திடீர்னு எப்படி குருடாச்சுனு ..!

..............................

**அமைச்சர் :** மன்னா, இதை முன்பே செய்திருக்கலாமே என்று வருந்திய சம்பவம் எப்போதாவது நிகழ்ந்தது உண்டா?

**மன்னன் :** உண்டே! போர்க்களத்தில் அடி, உதை, மிதிகள் வாங்கிவிட்டு, பிறகு எதிரி மன்னரின் கால்களில் விழும்போது!

..............................

**மன்னன் :** நமது இளவரசர் வீரம் என்றால் என்னவென்றே தெரியாமல் வளர்ந்துவிட்டார் அமைச்சரே!

**அமைச்சர்:** பூனைக்குப் பிறந்தது புலியாகுமா என்று மனதைத் தேற்றிக்கொள்ளுங்கள் மன்னா!

## மன்னா விளம்பரப் பலகை

மன்னிக்கத் தெரிந்தவன் பகைவனுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறான்.
- கி. விதுஷாலினி, கொக்குப்புடையான் -

- 'வருகின்ற நாளை எவ்வாறு வாழ வேண்டும் என்பதை நினைக்காதே, இன்றைய நாளை எவ்வாறு வாழவேண்டும் என்பதை யோசி.

..............................

- தோல்வியிலும் மனநிறைவுடன் இரு. அது வெற்றியின் மகிழ்ச்சியைவிட மேலானது.
- சிந்திப்பதோ பல மனிதர். சிந்தித்துச் செயற்படுவதோ சில மனிதர். **- கி. விதுஷாலினி, கொக்குப்படையான் -**

- முயற்சி என்பது மூலதனம். அதனை முயன்று காட்டுவது எம் வாழ்க்கைத் தரம்.

..............................

- துன்பத்தில் எப்படியாகச் சிரிக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள். அதேவேளை அழுவதால் எவ்வித வெட்கமும் இல்லை என்பதைப் புரிந்துகொள்.

- எதுவரை சென்றேன் என்பது முக்கியமில்லை, எதை நோக்கி எதற்காகச் சென்றேன் என்பதே முக்கியம்.
- நம்முடைய உண்மை நிலையை மறைப்பது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாக அமையும்.
**- யோ. மிரியம் டர்ஷிக்கா -**

- நாளை என்பது மிகத்தாமதம், இன்றுமுதல் வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்ந்துகாட்டு.

..............................

- இலட்சியம் மட்டும் உயர்வாக இருந்தால் போதாது. அதனை அடையும் வழியும் உயர்வாக இருக்க வேண்டும்.
- அடக்கத்துடன் வாழ், அடிமை ஆகிவிடாதே. கருணையுடன் வாழ், கர்வத்துடன் வாழாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 10 மாணவர்களுக்கான வினா - விடைத் தொகுப்பு - 2015 கத்தோலிக்க திருமறை

புதிய பாடத்திட்டம்

தொகுப்பு :- ஆசிரியயை திருமதி. ஞானமலர் மரியதாசன்

### புனித பவுல்

01. தூய பவுல் தமது முதல் திருத்தூதுப் பயணத்தை எத்தனையாம் ஆண்டளவில் தொடங்கினார்?
கி.பி 47ஆம் ஆண்டளவில்.
02. கி.பி. 50 - 52 இற்கு இடையில் தூய பவுல் தமது இரண்டாவது பயணத்தை சீலாவுடன் ஆரம்பித்தார். அதன் பின்னர் அவருடன் இணைந்துகொண்டவர்கள் யாவர்?
திமோத்தேயுவும், லூக்காவும்.
03. தூய பவுல் தமது மூன்றாவது பயணத்தை மேற்கொண்ட காலப்பகுதி யாது? கி.பி. 53 - 57 இற்கு இடையில்.
04. மூன்றாவது தூதுரைப் பயணத்தில் பவுல் எங்கே தங்கியிருந்தார்? எருசலேம் நகரில்.
05. தூய பவுல் ஏன் கைதியாக உரோமைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்? தாம் உரோமைப் பேரரசினால் விசாரணை செய்யப்பட வேண்டுமென விரும்பியமையினால்.
06. தூய பவுல் யாருடைய ஆட்சிக்காலத்தில் எவ்வாறு கொல்லப்பட்டார்? உரோமையில் பேரரசன் நீரோவின் கலாபனைக் காலத்தில் கி.பி. 68ல் தலை வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

### புனித பேதுரு

07. தூய பேதுருவின் அழைப்புப்பற்றி திருவிவிலியத்தில் எந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ளது? லூக்கா 5: 1-11
08. "ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டுபோய் மீன்பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்" என எங்கே? யாருக்கு? இயேசு கூறினார்? கெனசரேத் ஏரிக்கரையில், பேதுருவுக்கு (சீமோன்)
09. திரளான மீன்கள் பிடிபட்டதைக்கண்டு திகைப்புக்கு உள்ளானவர்கள் யார்? பேதுருவும் அவர் சகோதரன் அந்திரேயாவும்.
10. திரளான மீன்கள் பிடிபட்ட திகைப்பில் ஆழ்ந்திருந்த தூய பேதுரு எவ்வாறு தன்னிலை உணர்ந்தார்? இயேசுவின் கால்களில் விழுந்து தனது பாவநிலையை ஏற்றுக்கொண்டார்.
11. எவ்வாறான வார்த்தைகளால் பேதுருவைத் தேற்றி இயேசு பேதுருவை அழைத்தார்? "அஞ்சாதே, இதுமுதல் நீ மனிதனைப் பிடிப்பவன் ஆவாய்" என்று கூறித் தம்மைப் பின்செல்லும்படி அழைத்தார்.
12. "நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்" எனப் பேதுரு விசுவாச அறிக்கையிட்டபோது, இயேசு கூறிய பதில் என்ன? "யோனாவின் மகனாகிய சீமோனே நீ பேறுபெற்றவன்"
13. இயேசு பிலிப்பி செசாரியா பகுதிக்குச் சென்ற ஓர் சந்தர்ப்பத்தில் தம் சீடரை நோக்கி இயேசு எழுப்பிய வினா என்ன? "மானிடமகன் யாரென மக்கள் சொல்லுகிறார்கள்?"
14. விண்ணரசின் திறவுகோல்களை யாரிடம் தருவதாக இயேசு கூறினார்? பேதுருவிடம்.
15. திருச்சபையின் தலைமைப் பீடத்திற்குப் பொறுப்பாக இயேசுவால் நியமிக்கப்பட்டவர் யார்? பேதுரு
16. "யோனாவின் மகனான சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என இயேசு மூன்றாம் முறையாகக் கேட்டபோது பேதுரு கூறிய பதில் என்ன? "ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே, எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?" என்றார்.
17. இயேசு பேதுருவிடம் மூன்று தடவைகள் பொறுப்புக்களை ஒப்படைத்தார் என்பதுபற்றி நாம் திருவிவிலியத்தில் எந்தப்பகுதியில் காணலாம்? யோவான் நற்செய்தி 21: 15-19

### திருத்தந்தை பிரான்சிஸ்

18. திருத்தந்தை பிரான்சிஸ்சின் பெற்றோரின் பெயர் என்ன? மார்ணியோ கொஸ்பர் கோலியோ (தந்தை) றெஜினா மரியா (தாய்)
19. திருத்தந்தை பிரான்சிஸ் எப்போது இயேசு சபையில் சேர்ந்தார்? 1958 பங்குனி 11ம் திகதி
20. இவர் எப்போது குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்? 1969ம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி
21. திருத்தந்தை பிரான்சிஸ் எப்போது? யாரால்? கருதினால் பதவிக்கு உயர்த்தப்பட்டார்? 2001.02.21ம் திகதி, தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பரினால்.
22. இவர் எப்போது திருச்சபையில் 266வது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்? 2013.03.13ம் திகதி
23. இவர் 2013ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட விருது யாது? 'சிறந்த மனிதர்' என்ற விருது

### திருச்சபையின் பண்புகள்

24. திருச்சபையின் சிறப்புப் பண்புகள் எவை? ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்.
25. "தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" என்ற இறைவார்த்தைப்பகுதி திருச்சபையின் பண்புகளுள் எதனைச் சுட்டிக்காட்டுகின்றது? 'ஏகம்' என்ற பண்பை
26. 'கத்தோலிக்கம்' என்பது எதைக் குறிக்கின்றது? உலகளாவிய பொதுவான தன்மையை. (ஒரு தனிமனிதனையோ நாட்டையோ, பிரதேசத்தையோ குறித்து நிற்காமல் பரந்துவிரிந்த ஒன்றாகும்)
27. புனித பூமி, திருவிவிலியம், அருட்கருவிகள் என்பன திருச்சபையின் எப்பண்பை எடுத்தியம்புகின்றது? பரிசுத்தம் (தூய்மை)
28. திருச்சபையில் 'கத்தோலிக்கம்' என்ற சொல்லின் இரு பண்புகளும் எவை? கிறிஸ்து இயேசு திருச்சபையில் எப்பொழுதும் உடனிருப்பது, முழு மனுக்குலத்துக்கும் தூதுரைப்பணிக்காக அனுப்பப்படுவது.
29. திருத்தூதர்களின் போதனைக்கேற்ப தொடக்கக் கிறிஸ்தவர்கள் தமது வாழ்வை அமைத்துக்கொண்டார்கள் என்பது பற்றி திருவிவிலியத்தில் எந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ளது? திருத்தூதர் பணி 2: 42
30. "திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்" எனக் கூறியவர் யார்? தூய பவுல் (1கொ 12: 12-30)

## தமிழ் மக்களுக்கான தீர்வை .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

அதாவது ஆயரின் தலைமைத்துவத்தின்கீழ் புலம்பெயர் தமிழ் பேசும் மக்கள், உள்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இனிவரும் காலத்தில் எப்பேர்ப்பட்ட ஒரு அரசியற் தீர்வை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை அறிந்து வெளியிட உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கின்றது.

ஆயருக்கு இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ் பேசும் மக்களிடையே பெருமதிப்பு இருக்கின்றது. இதனால் அவரின் தலைமைத்துவத்தின்கீழ் இப்பேர்ப்பட்ட ஒரு தீர்வை நோக்கி நாம் ஆராய்ந்து செல்வதில் தவறில்லை என்றே கணிக்கிறேன். அதனால்தான் பழைமைக்கும் புதுமைக்கும் இடையில் ஆயர் நிற்பதால் அவரின் இந்நாள் எமக்கு ஒரு மைக்கல் தினமாகிறது. ஆயரின் பிறந்த இலக்கங்களைப் பார்த்தேன். எண் கணிதத்தின்படி அவர் பிறந்த எண்ணும் 7. கூட்டல் தொகையும் 7. அவரைப் போலவே இரு வழியும் 7 என்னும் இலக்கத்தைக்கொண்டு பிறந்தவர் காலஞ்சென்ற செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. இரு வழியிலும் 7ஐ இலக்கமாகக் கொண்டவர்கள் இயற்கையாகவே இறைவழி தேடும் இயல்பினை உடையவர்கள். தாம் எடுத்த காரியங்களில் மிகவும் திடமாக நின்று காரியமாற்றக்கூடியவர்கள். எந்தத் தடைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு சமாளிக்கக்கூடியவர்கள். அவ்வாறான குணாதிசயங்களை நான் இருவேறு சமயச்சார்பான இந்த இரு பெரியார்களிடமும் கண்ணுற்றேன்.

ஆயரிடம் நான் அவதானித்த மேலும் ஒரு குணமுண்டு. எந்தவிதமான சூழலாக இருந்தாலும் தன்னை வருத்திக்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார். அவர் தமது தூக்கத்தை மறந்து, சுகங்களை மறந்து, சுற்றங்களை மறந்து, சுய பாதுகாப்பைக்கூட மறந்து அவரை வருத்தும் பிரச்சினைக்குத் தீர்வு எவ்வாறு காண்பது என்ற எண்ணத்திலேயே திளைத்திருப்பார்.

அவர் எமக்கு இறைவன் அளித்த ஒரு பெருஞ்சொத்து. அவர் தமிழ் மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகள் பல உண்டு. இறைவன் ஆசியுடன், அவன் அருளுடன் பல்லாண்டு நோய் நொடியின்றி வாழ்ந்து எமது ஆயர் எமது தமிழ் பேசும் மக்க்ளுக்காக ஒரு நியாயமான, நிரந்தரமான, நீதியான தீர்வைப் பெற உதவி செய்வார் என்ற மனத்தைரியத்துடன் அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்களை கூறி எமது அன்பு கலந்த நினைவுப் பரிசிலை இத்தால் வழங்குகின்றேன்.

## கிளரீசியன் சபையின் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இலங்கை நாடும் ஜேர்மன் மாகாணத்திற்குள் வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வருடத்தின் ஜனவரி மாதம் 8ம் திகதி இடம்பெற்ற மாகாண ஒன்றுகூடலானது ஜேர்மனில் உள்ள வயிஸ்சின்கொன் என்னும் இடத்தில் இடம்பெற்றது. இந்த ஒன்று கூடலில் 20க்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்த ஒன்றுகூடலின்போதே ஜோசப் அடிகளார் ஜேர்மன் மாகாணத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அருட்தந்தை கலிஸ்ரஸ் ஜோசப் அவர்கள் 1964ம் ஆண்டு யூலை மாதம் 7ம் திகதி கண்டியில் பிறந்தார். இவர் தனது ஆரம்ப மற்றும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் நிறைவுசெய்தார். மேலும் அவர் தனது மெய்யியல் கல்வியையும், நவசந்தியாச பயிற்சியையும் இந்தியாவில் நிறைவு செய்ததோடு, தனது இறையியல் கல்வியினை பிலிப்பைன்ஸ் நாட்டில் நிறைவுசெய்தார். 1992ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி குருவாக இலங்கையின் ஹட்டன் பிரதேசத்தில் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தை, பின் கிளரேசிய சபையின் குருமடங்களில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டார். முதலில் கண்டியில்-உள்ள கிளாரட் நிவாஸ் குருமடத்தில் இறையியல், மெய்யியல் மாணவர்கட்கு உருவாக்குனராகவும், கணக்காளராகவும் பணி ஆற்றினார். பின்னர் நீர்கொழும்பு புனித கிளாறட் சிறிய குருமடத்தின் அதிபராகவும் பணியாற்றினார். பின்பு அருட்தந்தை அவர்கள் 2003ம்ஆண்டு தனது உளவியல் கல்வியில் சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக ஐக்கிய இராச்சியம் (UK), மெக்சிகோ, ஐக்கிய அமெரிக்கா (USA) போன்ற நாடுகளில் பயிற்சிகளை மேற்கொண்ட பின்பு ஜேர்மன் மாகாணத்தில் பணியாற்ற தன்னை தயார் செய்தார். அருட்தந்தை அவர்களின் இறைபணி புரிவதற்கான தயார்நிலை காரணமாக, கிளறேசியன் சபை தனது அகில உலக பணிக்காக (Universal Mission) ஆபிரிக்காவில் உள்ள வடக்கு சூடானில் பணியாற்ற இவரை அனுப்பியது. அங்கு அவர் பல்வேறு துறவற சபைகளுடன் இணைந்து, உள்நாட்டு யுத்தத்தால் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட தென் சூடான் மக்களின் கல்வி மற்றும் சுகாதார வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக சில ஆண்டுகள் இக்குழுவுக்கு இவரே தலைவராக இருந்து அரும்பணியாற்றினார். பின்பு 2013ம் ஆண்டில் ஜேர்மனுக்கு திரும்பி அங்கு ஸ்பைசின்கேன் (Spaichingen) எனும் இடத்தில் பணியாற்றினார்.

**தகவல்: அருட்பணி எஸ். யூட் பெகின் கொடுதோர் (CMF) புனித கிளாறட் குருமடம்.**

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 141

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் ஒசேயா இறைவாக்கினர் நூல் முதலாம் அதிகாரத்திலிருந்து 8ம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகின்றன.

ஒசேயா இறைவாக்கினர் ஆமோஸ் இறைவாக்கினருக்கு பிற்பட்ட காலப்பகுதியில் கி.மு 722 ஆண்டுகளுக்கு முன் இறைவாக்குரைத்தவர். இஸ்ராயேலரின் சிலை வழிபாடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பினார்.

இறைவனுக்கும் (யாவே) யூத இனத்துக்கும் இடையே இருந்த ஒப்பந்தத்தை உதறித்தள்ளி வாழ்ந்த உண்மையற்ற தன்மையைச் சாடி இவர் இறைவாக்குரைக்கின்றார். கடவுளுக்கு உண்மையற்று வாழுதல் கணவனுக்கு உண்மையற்று வாழுதலைப்போல வேசித்தனம் என்று சாடுகின்றார். ஒசேயாவின் காலத்து மக்கள் வாழ்க்கையும் இப்படித்தான் இருந்தது. விபச்சாரம் செய்வதும் கணவனை விட்டுவிட்டு விரும்பிய வேறொருவனோடு சேர்ந்து வாழ்தலும், ஆண்கள் பல பெண்களை வைத்திருந்ததும் சாதாரண விடயமாக எண்ணப்பட்டன.

ஒசேயாவும் கடவுளின் சொற்படி ஒரு விலைமகளையே திருமணம் செய்துகொள்கின்றார். இரு குழந்தைகளைப் பெற்றபின்பும் அவள் வேறு ஒருவனை நாடிச் செல்கின்றாள். தனக்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்று தம் மக்களை கடவுள் எதிர்பார்த்தார். ஆனால் அவர்கள் சிலை வழிபாடுகளில் மூழ்கியிருந்தனர். பிரமாணிக்கமின்றி வாழ்ந்தனர். இவர்களுக்கான தண்டனைத் தீர்ப்பை வழங்குவேன் என்றும் அவை மிகவும் மோசமாக இருக்கும் என்றும் கூறும் இறைவன் தான் மீண்டும் அவர்களைக் கட்டியெழுப்புவேன் என்றும் வாழ்வளிப்பேன் என்றும் கூறுகின்றார். எப்படியோ இறைவனுக்கும் யூத இனத்துக்கும் இடையிலான இழுபறி – கடவுளைப் புறந்தள்ளி வாழுதல் - கடவுளால் தண்டிக்கப்படல், மக்கள் கடவுளிடம் கையேந்தல், இறைவன் அவர்களை மீண்டும் கட்டியெழுப்புதல் என்னும் நிகழ்வுகள் ஒரு சக்கரம்போல் இறைவாக்கினர் காலங்களில் நடைபெறுவதை வேதத்தில் நாம் காணலாம்.

### தொடர்ந்து நமது வினாக்களுக்கு வருவோம் :

01. ஒசேயா இறைவாக்கினர் யாருடைய மகன்?
02. இறைவனின் ஆணைப்படி இறைவாக்கினர் ஒசேயா விலைமகள் ஒருத்தியை மணந்தார். அவள் பெயர் என்ன?
03. "பாகால்களின் விழாக்களைக் கொண்டாடிய நாட்களில் அவள் அவற்றுக்கு நறுமணப்புகை எழுப்பினாள். வளையல்களினாலும் நகைகளாலும் தன்னை அணி செய்து தன் காதலர்பின் போய் என்னை மறந்தாள்" யார் இந்த பாகால்கள்?
04. "ஆதலால் நான் அவளை நயமாகக் கவர்ந்திழுப்பேன். பாலைநிலத்துக்கு அவளைக் கூட்டிச் செல்வேன். நெஞ்சுருக அவளுடன் பேசுவேன்" யார் இந்த அவள்? யார் அவளுடன் பேசுவார்?
05. ஒசேயாவின் நாட்களில் இஸ்ராயேல் வாழ்ந்த நாட்டில் எவை பெருகி இருந்தன? எவை இருக்கவில்லை?
06. இஸ்ரயேல் மக்கள் எதைப்போல் பிடிவாதமாய் இருக்கின்றார்கள் என இறைவன் கூறுகின்றார்?
07. இறைவன் எப்ராயிமுக்கும், யூதாவின் வீட்டாருக்கும் எப்படியிருப்பேன் என்று ஒசேயாவின் வாயிலாகச் சொல்கின்றார்?
08. உண்மையாகவே இறைவன் விரும்புவது என்ன? ஒசேயா எப்படிச் சொல்கின்றார்?
09. "எப்ராயிம் அறிவில்லாப் பேதைப் புறாவைப் போலிருக்கின்றான்" அவன் என்ன செய்கின்றான்?
10. "என் கோபத்தீ அவர்களுக்கு எதிராக எரிகிறது" அவர்கள் யார்? ஏன் எரிகிறது?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 139 இற்கான கேள்விகளுக்கு 21 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

கிறிஸ்ரி சயானிக்கா,
பற்றிமா அன்னை ஆலயம், ஒமந்தை

**பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படும்**

## 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. கிறிசாந்தினி, பரிகாரிகண்டல், முருங்கன்.
2. உ. பிறேமினி, கல்லடி, மட்டக்களப்பு.
3. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
4. அ. டினேசியஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
5. யே. நிவேதிக்கா, புதுக்கமம், உயிலங்குளம்.
6. பி. பானு, மாதிரிக்கிராமம், வங்காலை.
7. றொ. றோஜினி றோச், பள்ளிமுனை மேற்கு, மன்னார்.
8. யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.
9. கிறிஸ்ரி அலீஸ், பற்றிமா அன்னை ஆலயம், ஒமந்தை.
10. யோ. யூடிற் டலிமா, தோமஸ்புரி, வங்காலை.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

**மன்னா விநியோகஸ்தர்களே!**
உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை
காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!
- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.154

## 2 சாமுவேல் 1முதல் 15 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை ஜுன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❖ | 05 | 01 | | 03 | 07 | | | 14 | 11 |
| 17 | ❖ | | 02 | | | 06 | | | |
| | | ❖ | | 08 | | 09 | 12 | | |
| | | | ❖ | | 10 | | | | |
| 19 | | 22 | | ❖ | | 15 | | | |
| | 20 | | | 18 | ❖ | | | 31 | |
| | 24 | 25 | 21 | ❖ | | | | | 13 |
| | | | ❖ | 30 | | | | 16 | |
| | 26 | ❖ | | | | | | | 29 |
| 23 | ❖ | 28 | | | | 27 | | | |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அப்சலோம் தனக்கென ............. தேரையும் குதிரைகளையும் தனக்கு முன்பாக ஓட ஐம்பது ஆட்களையும் அமர்த்திக் கொண்டான்.
2. அபியத்தார் மகன் அகிமெலக்கும் ............. க்களாகவும் செராயா செயலராகவும் பணியாற்றினார்.
5. .................... எங்கிருந்து வருகிறாய்?
7. சவுலின் மகன் மீக்காலுக்குச் ............. வரை குழந்தைப்பேறு கிட்டவில்லை.
8. நீரும் உம் விருப்பப் ............. ஆட்சிபுரியலாம்.
10. என் கண் ............. னே அவன் உணவு தயாரிக்கட்டும்.
19. இஸ்பொசேத்தின் தலையை எபிரோனில் இருந்த தாவீதிடம் கொண்டு ............. கள்.
27. அவர்கள் ............. செல்வார்.
28. ............. எதிர்த்துச் செல்ல வேண்டாம்.
30. என்மீது நின்று என்னைக் .............

### வலமிருந்து இடம்

2. அங்குக் ............. சாதோக்கும் அபியத்தாரும் உன்னோடு இருக்கின்றனர்.
6. எனக்காகக் ............. மரங்களால் ஒரு கோவில் கட்டாததேன்?
8. ஆண்டவரின் எதிரிகள் அவரை இழிவாக எண்ணும் ............. நீ இவ்வாறு செய்தால் ___ சொன்னார்.
9. நீ துக்கம் கொண்டாடுபவனைப்போல் .............
13. தாவீது அனைத்து ............. மீதும் ஆட்சி புரிந்து நீதியும் நேர்மையும் விளங்கச் செய்தார்.
15. ஆண்டவர் என் எதிரிகளை ............. கண்முன்னே தகர்த்தெறிந்தார்.
16. ஏழைகளிடம் ஓர் ஆட்டுக்குட்டி தவிர வேறு ஒன்றுமே .............
18. ............. முன்பாக நடனமாடிக் கொண்டிருந்தார்.
27. அவன் கீழே ............. கால் முடமானான்.
29. அபியத்தார் மகன் அகிமெலக்கும் குருக்களாகவும் செராயா செயலராகவும் .............
31. யூத குலத்தார் தங்கள் தங்கள் அரசனாக என்னைத் திருப் ............. செய்துள்ளனர்.

### மேலிருந்து கீழ்

1. பேழையை ............. புதிய வண்டியில் வைத்துக்கொண்டு வந்தார்கள்.
3. அப்னேர் ............. ஆள்களோடு தாவீதைக் காண எபிரோன் வந்தான்.
10. உம் கண் ............. கருணை பெற்றுவிட்டேன்.
11. தாவீது ஆண்டவர் ............. குறித்து ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டு அவரைத் தன் உள்ளத்தில் வெறுத்தான்.
12. உடனே ............. தரையினின்று எழுந்தார்.
13. அவர்களின் ............. புதல்வர்களுக்கு அதாவது சாதோக்கின் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனாத்தானும் இருக்கின்றனர்.
14. யோனத்தானுக்கு மெபிபொ ............. என்ற மகன் ஒருவன் இருந்தான்.
17. தாவீதிற்குப் பெற்றெடுத்த குழந்தையை ............. தாக்க அது நோயுற்று சாகக்கிடந்தது.
24. உம் அடியவள் எண்ணப்படி .................... தலைவராம் அரசரின் வார்த்தை எனக்கு அமைதி தரும்.
25. அவரிடம் நீ இவ்வாறு ...................... வேண்டும்.

### கீழிருந்து மேல்

2. அரச மாளிகையிலிருந்து நீ கேட்கின்ற அனைத்தையும் ............. சாதேக்கிடமும் அபியத்தாரிடமும் எடுத்துச் சொல்.
10. உன் மகனின் ஒரு ............. கூடத் தரையில் விழாது.
12. மேளம் ............... ஆகியவற்றோடும் ஆண்டவருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு வந்தனர்.
13. ஒருவன் பெயர் பானா. மற்றவன் பெயர்......................
15. .................... முகத்தில் விழிக்காதே என்று மறுமொழி கூறினார்..
16. சவுலின் மகன் ...................... நிலைகுலைந்தான்.
20. கிழிந்த ஆடைகளோடு புழுதி படிந்த தலையோடும் ஒருவன்......................................
21. அப்போது ஒரு ............... குளித்துக்கொண்டிருந்ததை தாவீது மாடியிலிருந்து கண்டார்.
23. போர் முனையில் வீரர் எங்ஙனம் வீழ்ந்து..........................
26. .................. உன்னிடம் கேட்பது எதற்கும் மறைக்காமல் பதில் சொல்.
22. யாபேசு கிலயாதின் ஆட்கள் .................. சவுலை அடக்கம் செய்தார்கள் என்று அவர்கள் தாவீதிடம் கூறினர்.

# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
07
08
1942



உதிர்வு
01
04
2015

## திரு. அந்தோனிப்பிள்ளை பெஞ்சமின்பிள்ளை (மணி)

(பெரிய கட்டைக்காடு, நானாட்டான்)

**"நீதியின் பாதையில் ஜீவனுண்டு அந்தப் பாதையில் மரணமில்லை" (நீதி.மொ. பா 12:28)**

கனவில்கூட நினைக்கவில்லை - ஐயா
காலம் உம்மைப் பிரிக்குமென்று!
கரம்பிடித்த காலம்முதல் கனிவுடனே எம்மைக் காத்து
இனிதாய் நடத்தியவர் நீர்தான் ஐயா!
முத்தாக மூன்று பிள்ளைகளைச் சொத்தாகத் தந்தவரே
அவர்கள் மிளிரும் காலத்தில் காணாது சென்றதேனோ.
மருமக்கள் கதறி அழுகின்றார்கள்,
பேரப்பிள்ளைகள் உங்களைக் கூவி அழைக்கின்றார்களே!
அவர்களுக்கு என்ன பதில் சொல்வது ஐயா!
நீங்கள் பதித்த காலடிகள் நீங்காது எம் வாழ்நாள் முழுவதும்.
உம் ஆன்மா சாந்திபெற இறைவனையே வேண்டுகின்றோம்!

*என்றும் உங்கள் பாசமுள்ள:*
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்,*
*மச்சாள்மார், மச்சான்மார்கள் மற்றும் உற்றார் உறவினர்கள்.*

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 152

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:
அ. இனற்றுக்சனா,
சென்மேரிஸ் வீதி, அடம்பன்.

இரண்டாம் பரிசு:
டா. யோசேப்பின்,
பள்ளிமுனை, மன்னார்.

மூன்றாம் பரிசு:
எவ். கில்மன்,
மணற்குளம், உயிலங்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 63 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 152ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. ம. சதர்சினி, உமனகரி, நானாட்டான்.
02. கி. ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
03. மீரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
04. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மா. நீதி மன்றம், மன்னார்.
05. கி. மேரி, ஜெனிபர் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
06. அ. கரோளினி கீர்த்திகா, திருகோணமலை.
07. ரொ. ஸ்ரெலா, இல – 50, வீரபுரம்.
08. பி. மேரி வலன்ரீனா, நெடுங்கண்டல் அடம்பன்.
09. நோ. ஜெனற் ஸ்வின்சிகா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
10. ஜே. ஒஸ்வின், ஜேர்மன்.
11. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
12. எல். தர்சினி வாஸ், வங்காலை – 04, மன்னார்.
13. திருமதி. பிளண்ரீனா, சின்னக்கடை, மன்னார்.
14. கி. டொறிஸ்மீனா, நாச்சிக்குடா, முழுங்காவில்.
15. நி. நிஜித், தாமரைக்குளம், அடம்பன்.
16. இ. இமல்டா நிறோஜினி, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
17. ஜே. கொட்வின், ஜேர்மன்.
18. ரி. டக்ஷாஜினி, சின்னக்கடை, மன்னார்.
19. ம. றோசானிக்கா, சின்னப் பண்டிவிரிச்சான், மடு.
20. ஏ. செரோபியா சில்வா, சுகந்தபுரி, வங்காலை.
21. தி. மேரி சுஜாத்தா, தாமரைக்குளம், அடம்பன்.
22. எ. செறின் சலோமியா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
23. ப. சுதர்சினி, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
24. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
25. ஏ. எஸ். பேர்டினண், சுகந்தபுரி, வங்காலை.
26. எ. மேரி பீறிடா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
27. ஈ. நிஷாந்தினி கூஞ்ஞ, குழந்தையேசு வீதி, பேசாலை.
28. எமில்டன் பத்மராணி, மஹாறம்பைக்குளம், வவுனியா.
29. கமலா கிறிஸ்தோப்பர், கன்னியர்மட வீதி, மன்னார்.
30. எஸ். நிலோ, புதுக்கமம், உயிலங்குளம்.
31. அ. விபுஷிகன், சுகந்தபுரி, வங்காலை.
32. சி. தனுஷன், குழந்தையேசு வீதி, பேசாலை.
33. டெபோறா மோகன் ராஜ், தபால்கந்தோர் வீதி, மன்னார்.
34. அந்தோனியம்மா, கள்ளிக்கட்டைக்காடு, உயிலங்குளம்.
35. அ. இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி
36. ஏ. கிரியோண் சோசை, சுகந்தபுரி, வங்காலை.
37. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
38. ஐடா பற்றிக், சின்னக்கடை, மன்னார்.
39. கே. நிர்மலா, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
40. நீ. ஜெனனி, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
41. எஸ். சுபராணி, தபால் கந்தோர் முன், மன்னார்.
42. ச. டிலைச்சனா, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
43. செ. செப சுலக்ஷினி, சாளம்பன், ஆண்டாங்குளம்.
44. அ. ஸ்ரெலா மேரி, துட்டுவாகை.
45. சு. அன்ரனி டொபிக்ஷன், கொக்குப்படையான்.
46. செ. அனோஜினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
47. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
48. பி. சகாயமேரி, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
49. பி. விதுஷா றோச், பள்ளிமுனை மேற்கு, மன்னார்.
50. செ. ஜெபராஜ், சாளம்பன், ஆண்டான்குளம்.

## மன்னார் ஆயரின் 75ஆவது பிறந்தநாள்

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்விற்கு மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச அரசசார்பற்ற திணைக்களங்களின் முக்கியஸ்தர்கள் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். வடமாகாண முதலமைச்சர் திரு. சி. வி. விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண அமைச்சர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, கண்டி ஆயர் வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை, காலி ஆயர் ஹரல்ட் பெரேரா ஆண்டகை, பதுளை ஆயர் வின்சன்ற் பெனாண்டோ ஆண்டகை ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஆயர் இல்ல வளாகத்தில் இயற்கைச் சூழமைவில் இரவு நேர விழாவாக இந்த விழா ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. சிறப்பான மேடை அமைக்கப்பட்டு அந்த மேடையில் பிறந்த நாள் கேக் வெட்டப்பட்டது. அன்றைய தினம் பிறந்த நாள் கொண்டாடிய வைத்தியர் திருமதி யூட் றதனி அவர்களும், அருட்பணி. பிரான்சிஸ் அவர்களும் ஆயரோடு இணைந்து கேக் வெட்டினார்கள். அன்றைய தினம் தங்களது குருத்துவ நாளை நினைவுகூர்ந்த அருட்பணியாளர்கள் தவராசா, எமில் எழில்றாஜ் ஆகியோரும் கேக் வெட்டும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஹோட்டல் அமைப்பு முறையில் இரவுணவிற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்நிகழ்வை குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார், ஆயரின் செயலாளர் முரளி அடிகளார், நிதியாளர் இராஜநாயகம் அடிகளார் மற்றும் ஆயர் இல்லத்தில் உள்ள தந்தையர்கள், ஏனைய மறைமாவட்ட அருட்தந்தையர்கள் இணைந்து சிறப்பாக இந்நிகழ்வை ஒழுங்குசெய்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 07 1942



உதிர்வு 22 05 2013

### திரு. சேபமாலை வேதநாயகம்

(ஆவணம், நானாட்டான்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது"

ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
ஆறுதையா மாறாதையா உம் நினைவு!
ஆண்டிரண்டு கடந்ததையா - உம்
ஆருயிர் இம்மண்ணை விட்டுப்பிரிந்து!
இவ்வுலக வாழ்வில் நீர் வாழ்ந்தபோது
இறைவனின் உள்ளத்தை கண்டோம் உம்மில்!
இறைவனின் இல்லமாக நீர் இருந்து
இறுதி மூச்சுவரை செய்த இகபர நன்மைகளையும்
இறை இல்லத்தில் செய்த இறைவேண்டல்கள்
இறைபணிகளையும் நாம் இறுதிவரை
கடைப்பிடித்து வாழ்வோம்.
உம் ஆன்மா மரியன்னையின் மடியில் அமைதிகொள்ள
அனுதினமும் ஆண்டவரை அன்போடு பணிகின்றோம்!

**உம் பிரிவால் துயருறும்:**
**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

## 16ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 02 1969



உதிர்வு 13 05 1999

### திரு. பிலேந்திரன் கிறிஸ்ரி ரவி

(தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்)

"ஆண்டவரே நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன" (திபா 19:7)

ஆண்டு பதினாறு ஓடிமறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மறந்துவிடுமா அப்பா!
இறுதிவரை துணையிருப்பீர் என்று எண்ணியிருந்தோம்.
எங்களைப் பரிதவிக்கவிட்டுச் சென்ற மாயம் என்ன?
நிலையான சொந்தம் நீங்கள் என்று நம்பியிருந்தோம்.
நிலைகுலைந்து போனோம் நின்பிரிவால்!
இவ்வுலகில் ஆயிரம் உறவுகள் இருந்தாலும் நிழல் தந்த
மரம் நீங்கள் அல்லவா? இப்போ நீங்கள் இல்லையே!
அன்று நாங்கள் உங்கள் மழலைச் செல்வங்கள் அப்பா.
இன்று உங்களை கண்ணாடியில் பார்க்கின்றோமே அப்பா!
நீங்காது உங்கள் நினைவு எம் உயிர் உள்ளவரை.
உங்கள் ஆன்மா ஆண்டவர் மடியில்
அமைதியுடன் இளைப்பாற வேண்டுகின்றோம்.

**உம் பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்.**

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 05 1927



உதிர்வு 14 05 2010

### திரு. பாக்கியம் ஜோண் பெர்னான்டோ

(6ம் வட்டாரம், பேசாலை)

மரியன்னையின் மாதத்தில் பிறந்து இறந்த
மரியன்னையின் பக்தரான எங்கள் ஐயா!
தினமும் திருப்பலியில் பங்குபற்றி திருச்செபமாலை ஓதி
நாளெல்லாம் இறைவனைத் தேடி வாழ்ந்தீர்கள்.
அன்போடு எம்மை அரவணைத்து
குடும்பத்தின் கஷ்ட துன்பங்களில் எங்களை வாழவைத்து,
கலங்கரை விளக்காய், காவல் தெய்வமாய்க் காத்தீர்கள்.
நல்ல தகப்பனே, ஐயா, எம்மைவிட்டுப் பிரிந்து
ஐந்தாண்டுகள் ஓடிவிட்டபோதும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலவில்லை!
உடலால் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
என்றும் எம் மனங்களில் நீங்கள் வாழ்கின்றீர்கள்.
உங்கள் ஆன்ம சாந்திக்காக
இறைவனிடம் இரஞ்சுகின்றோம்.

**உம் பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
**தகவல்:- மகள் றோசா பெர்னான்டோ**

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 10 2009



உதிர்வு 10 04 2015

### செல்வி. ஜெயச்சந்திரன் நியோமி

(பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்)

"உயிருள்ளவரை எம்மை நேசித்தீர்.
இறந்த பின்பும் உம்மை நாம் மறவோம்"

பாசக் கயிற்றால் கட்டுண்டு
மடு அன்னையின் அருளோடு வாழ்ந்தோமே!
பாரினில் நாமும் மகிழ்ந்திருந்தலை
பகைவனாம் கூற்றுவன் வெறுத்தனனோ?
மாறா நோயது வந்ததென்ன - உன்
வாழ்வைக் கொண்டு போனதென்ன
உனக்காய் எந்நாளும் செபிக்கின்றோம்
இறைவனின் வீட்டில் மகிழ்ந்திருப்பாய்!

*எமது மகளின் மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அவரது இறுதிச் சடங்கிலும், திருப்பலியிலும் கலந்து கொண்டவர்களுக்கும், அவருக்காகச் செபித்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**உம் பிரிவால் துயருறும்:**
**அன்பு அப்பா, அம்மா, அம்மையா, பெரியப்பாமார், பெரியம்மாமார், உடன் பிறவா சகோதரரர்கள்.**

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 12 1977



உதிர்வு 30 04 2014

### திரு. சம்சோன் பற்றிக் தேவராஜ்

(நெடுங்கண்டல், அடம்பன்)

அன்பின் உருவாய் எம்மோடு உறவாடிய தந்தையே!
உம் இன்பு முகம் கண்டு ஓராண்டு ஆனதையா.
உங்கள் புன்னகையால் எம்மையும் பிறர் மனங்களையும்
பூத்துக் குலுங்க வைத்தவரே - இன்று உம்
புன்னகைத்த முகம் காணாது புழுவாகத் துடிக்கின்றோம்.
பெற்றெடுத்த செல்வங்களை நல்வழி நடத்திச் செல்வீரென
நாம் நினைக்க பாதி வழியில் பரிதவிக்க விட்டீரையா!
உம் அருமைச் செல்வங்கள் தேடுதையா!
உம் நாமம் சொல்லித் தினம் வாடுதையா!
அப்பா என்று அழைத்தவுடன் ஓடிவரும் தந்தையே!
ஓர் நொடியோ, ஓர் நாளோ தூரதேசம் செல்லமாட்டீர்.
பக்கத்தில் நீர் இருந்து பாதுகாக்க நினைத்தீரையா - இன்று
பாதுகாக்க நீரின்றி பரிதவிக்கின்றோம் நாங்கள் ஐயா.
எம்மைவிட்டு தூரதேசம் சென்ற எங்கள் தந்தையே! இனி
ஒரு விடியலிலாவது எங்கள் வாசலில் உமதன்புக் குரல்
கேட்காதா என வழிமேல் விழிவைத்து காத்து நிற்கின்றோம்

**உம் பிரிவால் துயருறும்: அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.**

## 31ம் நாள் நினைவஞ்சலி





### திருமதி. பி. றோசலின் குரூஸ் — திருமதி. செ. வினோதினி கூஞ்ஞ

(தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.)

மலர்வு : 24 - 02 - 1932
உதிர்வு : 01 - 04 - 2015

மலர்வு : 21 - 03 - 1972
உதிர்வு : 03 - 04 - 2015

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

இரக்கம் நிறைந்த இறைவா! இவ்வுலகில் எம்மோடு வாழ்ந்து நீர் அழைத்துக் கொண்ட எம் அன்பு அம்மா, அன்புச் சகோதரி இருவருக்கும் உமது வான்வீட்டில் இடம் அளித்து நித்திய வாழ்வை அவர்களுக்கு அளிக்க உம்மை இரந்து மன்றாடுகின்றோம்.

அன்னார்களின் ஆன்ம சாந்திக்காக தலைமன்னார் கிராமம் புனித லோரன்சியார் ஆலயத்தில் 01.05.2015 அன்று மாலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**உம் பிரிவால் துயருறும்:**
**குடும்பத்தினர், உறவினர்கள்.**

## மன்னார் ஆயரின் 75 ஆவது பிறந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகையின் தலைமையில் யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா யோசப் ஆண்டகை, பதுளை மறைமாவட்ட ஆயர் வின்ஸ்டன் பெர்ணான்டோ ஆண்டகை, கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பெர்ணான்டோ ஆண்டகை ஆகியோர் இணைந்து இதனைத் திறந்துவைத்தனர்.

அன்றைய தினம் காலை 7.00 மணியளவில் யோசப்வாஸ் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியிலிருந்து ஆறு ஆயர்களும் மக்களால் வரவேற்கப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டனர்.

பின்னர் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் ஏனைய 5 ஆயர்களும் இணைந்து நாடாவை வெட்டி ஆலயத்தைத் திறந்துவைத்தனர். இதனைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த ஆலயத் திறப்பு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். ஆலயத் திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகளை தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. அந்தோனி றொக்சன் குரூஸ் அடிகளார் மேற்கொண்டிருந்தார்.

இறுதியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் 75வது பிறந்த தினம் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. 75 சிறுவர்கள் தீபங்களை ஏற்றி வலம் வந்த நிலையில் ஆயர் கேக் வெட்டி பிறந்தநாளைக் கொண்டாடினார்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

## வங்காலைப் பங்கில் பெப்ரவரி மாதத்தில் திருமணம் முடித்தவர்களுக்கான நன்றித் திருப்பலி




வங்காலை புனித அன்னைம்மாள் ஆலயத்தில் பெப்ரவரி மாதம் திருமணம் முடித்தவர்களுக்கான நன்றித் திருப்பலி கடந்த 01.03.2015 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் திருவுளப்பணியாளர் சபையின் உலகத் தலைவர் அருட்பணி. டண்ஸ்ரன் அடிகளாரும் திருவுளப்பணியாளர் சபையின் இலங்கைத் தலைவர் அருட்பணி. யூஸ்ரஸ் அடிகளாரும் பங்கு மக்களால் வரவேற்கப்பட்டு பங்குத்தந்தையர்களுடன் இணைந்து சிறப்புத் திருப்பலியினை ஒப்புக்கொடுத்தார்கள். டண்ஸ்ரன் அடிகளார் இறைபிரசன்னம், குறைகூறாத மனநிலை, முறைப்படாத மனநிலை, சமாதான மனநிலை ஆகிய விடயங்கள் அடங்கிய ஆழமான மறையுரையாற்றினார்.

திருப்பலியில் பங்குத்தந்தை எஸ். ஜெயபாலன் அடிகளாரும், உதவிப்பங்குத்தந்தை கொட்வின் கமிலஸ் (சணா) அடிகளாரும் இணைந்து திருமணம் முடித்த தம்பதிகளுக்கு ஆசீர் வழங்கினர். திரு திருமதி. யூடிற் இம்மானுவேல் சோசை, திரு திருமதி. சுபநிதா தயாபரன் குரூஸ், திரு திருமதி. யோதினி ஏணஸ்ற் லெம்பேட், திரு திருமதி. தயானந்தி கிறிஸ்ரி சோசை, திரு திருமதி. யூடி மைக்கல் ஆஞ்சலோ லெம்பேட் ஆகிய குடும்பங்கள் தமது திருமண நிறைவுநாளைக் கொண்டாடினார்கள். இவர்களைப் பல்லாண்டு காலம் இறையருளில் வாழ வாழ்த்துகின்றோம்.

வுாழ்த்துவோர்:- பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜெயபாலன், அருட்சகோதரிகள், பங்குமக்கள்.

(இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)

### திருத்தந்தையின் கை பட்டவுடன் திரவமாக மாறிய உறைந்த இரத்தம்



திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் இத்தாலியின் நேப்பிள்ஸ் நகரத்துக்குச் சென்றபோது அங்குள்ள பேராலயத்தில் திருப்பண்டமாக வைக்கப்பட்டிருந்த புனித ஜனுவாரிஸ் (St. Januarius) என்பருடைய உறைந்த இரத்தம் திரவமாக மாறிய அற்புதம் நடந்தது.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

# நீங்காத நினைவுகள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 06 1924 — உதிர்வு 18 05 2005



### திரு. எலியாஸ் செபஸ்சியான் பீரிஸ்

(4ம் வட்டாரம், பேசாலை)
சமாதான நீதவான் (J.P)

என்றும் எம் நினைவலைகளில் வாழும் ஐயா!
ஆண்டுகள் பத்து உருண்டோடினாலும் உங்கள் அன்பும்
அரவணைப்பும் என்றும் எம்மனதில் நின்று அழியாது.
உழைப்பில் உத்தமராய் உரமூட்டி வளர்த்தீர்கள்.
ஓராயிரமாண்டுகள் சென்றாலும் ஓயாது உம்
நினைவுகள் ஆண்டவரின் அன்பில்
உங்கள் ஆன்மா இளைப்பாறுவதாக!

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 18.05.2015 அன்று (திங்கட்கிழமை) பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் உங்கள் நினைவுகளோடு:- அன்பு மனைவி, அன்பான மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 07 1955 — உதிர்வு 25 05 2014



### திரு. சந்திபோகு எட்மன் மனோராசா

(காத்தான்குளம், வட்டக்கண்டல்)

"சீவியத்தில் நேசித்தவர்களே
என்னை மரணத்திலும் மறவாதீர்கள்"

ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம்
கவலை மண்ணில் நீர் விதைக்கப்பட்டாலும்
மனங்களில் எம்மோடு வாழ்கின்றீர்.
விண்ணக வீட்டில் நீர் மகிழ்ந்திருக்க
விமலனையே தினமும் வேண்டுகிறோம்.
இதயம் குமுற பரிதவிக்கும் எம்மை
இறையவனே வழிநடத்த நீரே இறைஞ்சிடுவீர்.

என்றும் உங்கள் நினைவுகளோடு:-
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 08 1922 — உதிர்வு 30 04 2013



### திருமதி. சூசையப்பு மரிய சோசை

(8ம் வட்டாரம், வங்காலை)

"மனித இயல்புகொண்ட உடலாய் விதைக்கப்படுவது
ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது"
(1 கொரி. 15:44)

எம்மையெல்லாம் உம் உதரத்தில் உருவாக்கி
இவ்வுலகத்தில் உலாவ வைத்த உத்தமியே!
அன்பின் திருவுருவமாக எம்மை ஆதரித்த அன்புத் தாயே.
இன்முகம் மலர எல்லோரையும் அரவணைக்கும் உம்
பண்பை எத்தனை ஆண்டாயினும் எப்படி மறப்போம் அம்மா?
என்றும் எம் வாழ்வோடு கலந்த எம் உயிரே - உம்
உடல் மறைந்தாலும் அழிவில்லா ஆன்மாவாக
என்றும் எம் இதயத்தில் வாழ்வீர்கள் அம்மா!

என்றும் உம்மை மறவாத:- அன்புப் பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

**தகவல்:- திரு. அன்ரனி மார்க் - பிரான்ஸ்**

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 06 1939 — உதிர்வு 02 05 2014



### திரு. பெஞ்சமின் அமிர்தநாதன் (விமலதாஸ்) மன்னார்

"ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர்"

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும் - எம்
இதயத்தைவிட்டு நீங்காமல்
அன்பின் திருவுருவாய், வாழ்வின் வழிகாட்டியாய்
எங்களை வாழவைத்து மீளாப்பயணம் சென்ற
எம் அன்புத்தந்தையே!
உங்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காக
இறைவனை வேண்டி நிற்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மன்னார்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 06 1941 — உதிர்வு 28 04 2014



### திருமதி. அந்தோனிப்பிள்ளை செபமாலை

(சீன்மணி) (எழுத்தூர், மன்னார்)

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணி முடியாகத் திகழ்வாய். உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்" (எசாயா 62:32)

அன்போடும் பாசத்தோடும் எங்களை ஈன்றெடுத்து
வளர்த்து ஆளாக்கிய தெய்வத் தாயே!
நீங்கள் இறையடி சென்று ஓராண்டு என்ன
ஓராயிரம் ஆண்டுகள் ஓடினாலும் எங்கள் இதயங்களில்
உள்ள உங்கள் நினைவுகள் ஒருநாளும் அழியாது தாயே.

40 ஆண்டுகள் மரியாயின் சேனையில் பணிபுரிந்து
இறுதிநாள்வரை செபித்த தாயே!
உங்கள் ஆன்மா மரியன்னையின் மடியில் இளைப்பாறிட
எந்நாளும் கைகூப்பி இறைவனிடம் வேண்டுகிறோம்!

பிரிவால் துயருறும் - குடும்பத்தினர்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 03 1985 — உதிர்வு 23 05 2014



### செல்வன். இராசநாயகம் ஜோர்ஜ் பேர்னான்டஸ் (றோஜன்)

(கற்கிடந்தகுளம், முருங்கன்)

"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம்
ஆகவே, நீ எனக்கே சொந்தம்" (எசாயா 43:1)

அன்பு மகனே! உனது பிரிவால் துயருற்று வருந்துகிறோம்.
உனது உடன் பிறப்புக்கள்
உன்னை எண்ணி ஏங்கித் தவிக்கின்றார்கள்.
எல்லோருக்கும் உதவிசெய்து புன்சிரிப்புடன் வாழ்ந்தாய்.
கள்ளம் கபடமில்லாமல் எல்லோரையும் அன்பு செய்தாய்.
அதுவே உனக்கு எமனாகியது.
உன் ஆன்மா சாந்தியடைய இறைவன் அருள் புரிவாராக.
நீங்கா நினைவுகளுடன்:-
அம்மா, அப்பா, உடன்பிறப்புகள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org